திருக்கோயில்

ஜூலை 1978 ரூ. 1-25

மதுரை தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள சித்திரைப் பொருட்காட்சியில்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கினை, சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை
அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் விளக்கேற்றி திறந்துவைத்தல்.

R. R. No 36/78

முகப்பு :

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திரிபுவன வீரேச்சுரம் என்னும் திரிபுவனம் அருள்மிகு ''நடுக்கம் தீர்த்த நாதர்'' (கம்பஹரேசுவர சுவாமி) திருக்கோயிலின் அழகிய தோற்றம்

திருக்கோயில்

மாலை : 20 || காளயுக்தி ஆண்டு—ஆடித் திங்கள் ஜூலை—1978 || மணி : 10

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. **15—00** உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. **1—25** வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. **9—60** ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. **20—00**-ல் இருந்து ரூ. **25—00** ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

முதன்மையான ஒரு வேண்டுகோள்
—திரு யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்.

திருச்சிற்றம்பலக் கோவையார்
—ஆசிரியர்

கம்பராமாயணம்
—திரு ம. பொ. சிவஞானம்

சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

திருமூலர் திருமந்திரத்தின் சிறப்பு
—ஆசிரியர்

நீர்வண்ணன்
—திரு பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

நல்லார் வணங்கப்படுவான்
—'விவேகானந்தன்'

சிற்றம்பல நாடிகள்
—திருமுருக கிருபானந்தவாரியார்

திருக்குறளும், தருக்க நூலும்
—ஆசிரியர்

வல்லி செய்த வல்லபம்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

அம்மையப்பர்
—ஆசிரியர்

திருக்குறளும் ஞானிகளும்
—தவத்திரு ஊரன் அடிகள்

முத்தேவர்
—திரு பெ. இராமாநுஜன்

கம்பர் காட்டும் கற்பனைத் துறக்கம்
—ஆசிரியர்

சிவதாண்டவங்கள்
—திரு தி.ரா. தாமோதரன், எம்.ஏ., எம்.லிட்.

திருக்குறட் பொருள் நுணுக்கம்
—ஆசிரியர்

கந்தபுராணக் காப்பிய நலம்
—திரு க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

முதன்மையான ஒரு வேண்டுகோள்

158633

திரு. யு. சுப்ரமணியன், I.A.S.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34.

1. அண்மையில் சில திங்கள்களுக்கு முன்னர் மாண்புமிகு தமிழக **முதல்வர்** அவர்கள், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது, அக்கோயிலின் நூலகத்தில் சமய நெறிக்குச் சம்பந்தமில்லாத பல புத்தகங்கள் இடம் பெற்றிருந்ததையும், அக்கோயிலின் தொடக்கம், வளர்ச்சி, அதனைக் கட்டிய மன்னர்கள், அதற்குத் திருப்பணி புரிந்தவர்கள், நன்கொடை வழங்கியவர்கள், நிபந்தங்கள் அமைத்தவர்கள், அக்கோயிலின் கட்டிட அமைப்பில் செய்யப் பெற்ற கூடுதல், மற்றும் மாறுதல் திருத்தப்பணிகள், முதலியன பற்றிய தகவல்கள் கொண்ட நூல்கள் எதுவும் இல்லாமலிருந்ததையும் கண்டு, அந்நிலையைச் சீர்படுத்துவதற்கான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

2. மாண்புமிகு தமிழக **முதல்வர்** அவர்கள், கோயில்களுக்கு வரும் பயணிகளும், யாத்திரிகர்களும் அறிந்து கொள்ளத்தக்க வகையில், அந்தந்தக் கோயிலின் வரலாறுகள், அதனோடு தொடர்புடையவர்களாய் அப்பகுதியை ஆண்டு வந்த அரசர்களைப் பற்றிய அரிய தகவல்கள், அந்தந்தக் கோயில்களைப் பற்றிப் பண்டைக் காலத்துப் பெரியவர்கள் பாடிய பாடல்கள், இயற்றிய அந்தாதி உலா கலம்பகம் பிள்ளைத் தமிழ் தலபுராணம் கல்வெட்டுச் செய்திகள் ஆகியவை, கோயில் நூலகங்களில் தொகுத்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; இது மிகவும் பயனுள்ள இன்றியமையாத சிறந்த பணியாகும் என்று கருத்துத் தெரிவித்தார்கள்.

3. மாண்புமிகு தமிழக **முதல்வர்** அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிக்க சிறப்பும் பயனும் உள்ளவையாகும். அவைகளைச் செயற்படுத்துதல் அறநிலையத்துறையைச் சார்ந்த நம் அனைவருக்கும் உரிய தலையாய சிறந்த கடமையாகும். இது குறித்து ஏற்கெனவே 14-11-77 அன்று, சுற்றறிக்கை ஒன்று (ந. க. எண் 85256/77-சி1), அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது.

4. ஆணையரின் சுற்றறிக்கை எண். சி1/32987/78 நாள் 5-5-78-ன், 9-வது பாராவில் உள்ள அறிவுரை, அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. ஒவ்வொரு கோயிலிலும், அந்தக் கோயில் முதன் முதல் ஏற்பட்ட காலம், அதனைக் கட்டிய அரசர்கள், திருப்பணி செய்தவர்கள், நன்கொடை நிபந்தம் வழங்கியவர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள், மற்றும் அழகிய சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுச் செய்திகள், வேறு சிறப்பினங்கள் ஆகியவை பற்றிய செய்திகளைப் பொதுமக்கள் யாவரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில், நல்ல பார்வையான பிராகார வெளியிடங்களிலோ, சுவர்களிலோ, தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி வைத்தல் மிகவும் பயனுள்ள பணியாகும். இவற்றையெல்லாம் உடனடியாகச் செய்து நிறைவேற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

"இந்து சமய நூலகங்கள்"

5. (1) நமது அறநிலையத்துறையின் கீழ் உள்ள கோயில்களில், தற்போது சுமார் 200-க்கு மேற்பட்ட நூலகங்கள் இருந்து வருகின்றன. ஓரளவு இடவசதியும் பொருள்வசதியும் உள்ள ஏனைய பிற கோயில்களில் எல்லாம் கூட, பொதுமக்களுக்கும், குறிப்பாகப் பக்தர்களுக்கும் பயன்படக்கூடிய முறையில் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டுவது, இன்றியமையாததாகும். அந் நூலகங்களை, செயல் அலுவலர்களின் அறைக்கு அருகில், பொதுமக்களும் பக்தர்களும் எளிதாக வந்து படித்துவிட்டுப் போகத் தக்க நிலையில், அமைத்தல் வேண்டும்.

(2) அவற்றில் சமய சம்பந்தமான நல்ல இலக்கியங்களும், நூல்களும், இதழ்களுமே இடம் பெறுதல் வேண்டும். கோயில் நூலகங்களில், அங்குள்ள நூல்களின் பட்டியல், வருகையாளர் பதிவேடு, வாசகர் கருத்துரைக் குறிப்பேடு, முதலியன வைத்துப் பேணப்பட்டு வருதல் இன்றியமையாதது. பொதுவாகக் கோயில்கள் சம்பந்தப்பட்டன வாய்க் கிடைக்கக்கூடிய எல்லாப் புத்தகங்களும் கூடிய வரையில், கோயில் நூலகங்களில் சிறிது சிறிதாக, இயன்ற அளவு சேகரித்து வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருதல் வேண்டும். இதற்கென்று கோயில் வருவாயில் ஒரு குறிப்பிட்ட சிறு தொகையை, ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில், முறைப்படி இசைவு பெற்று ஒதுக்கவும் செய்யலாம். இது சம்பந்தமாக ஆணையரின் சுற்றறிக்கை ந. க. எண். 41498/78-சி1 நாள் 6-6-78ஐ, செயல் அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்

6. ஆணையர் அலுவலகத்தில் தமிழகக் கோயில்கள் நூலகம் :

(1) இனி, மற்றொரு முக்கியமான வேண்டுகோள். சென்னையில் அறநிலைய ஆணையரின் அலுவலகத்தில், தமிழகக் கோயில்கள்

சம்பந்தப்பட்ட ஒரு நல்ல பெரிய நூலகத்தை முறையாக அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்கண் 16 மாவட்டங்களில் உள்ள கோயில்களைப் பற்றிய நூல்களை முறையாகத் தொகுத்து வைத்துப் பாதுகாக்கத் திட்டமிடப் பெற்றிருக்கின்றது.

(2) அறநிலைய ஆட்சித்துறையின் கீழுள்ள பெரும்பாலான கோயில்களில், பல ஆண்டுகளுக்கு முன்னரே, தலவரலாறுகள் சிறந்த முறையில் வெளியிடப்பெற்றிருக்கின்றன. சைவ நாயன்மார்களின் தேவாரப் பாடல் பெற்றுள்ள சிவத்தலங்கள், திவ்வியப் பிரபந்தங்களில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ள வைணவத் திவ்விய தேசங்கள் ஆகியவற்றிற்கெல்லாம், முன்பே தலவரலாற்று நூல்கள் சிறந்த முறையில் வெளியிடப் பெற்றுள்ளன. ஆதலின், அவற்றில் இரண்டிரண்டு படிகளை, அந்தந்தக் கோயில்களின் செயல் அலுவலர்கள், ஆணையர் அலுவலகத்தில் நிறுவப்பட இருக்கும் நூலகத்திற்குக் கூடிய விரைவில் உடனே அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

(3) ஒருகால், இதுகாறும் தலவரலாறுகள் வெளியிடப் பெறாத அண்மைக் காலத்துக் கோயில்கள் சிற்சில இருந்தால், தக்கவர்களைக் கொண்டு பயனுள்ள முறையில் சுருக்கமாகவும் திருத்தமாகவும் எழுதச் செய்து வெளியிடுவதற்கான நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி உடனே எடுக்கும்படியும், செயல் அலுவலர்களையும், உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஆகியோரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(4) இப்புதிய தலவரலாற்று நூல்கள் வெளியிடப் பெற்றதும், அந்த நூல்களின் படிகள் இரண்டும், அவ்வப்போது உடனுக்குடன் ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப் பெறுதல் வேண்டும்.

(5) மேற்குறித்த இவ்விருவகை நூலகப் பணிகள், மிகமிக அவசியமும், அவசரமும், மின்னல் வேகத்தில் செயற்படுத்தத் தக்கனவுமாகும். ஆதலின் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் விரைந்து செயற்பட்டு ஒத்துழைத்து, இப்பணிகள் நன்கினிது வெற்றியுடனும் சிறப்பாகவும் நிறைவேறுவதற்கு உதவிபுரியுமாறு, பெரிதும் வேண்டுகின்றேன்.

7. கோயில்களில் வழிபட வருவோர்க்கு வசதிகள்:

கோயிலுக்கு வருகின்றவர்கள், அமைதியான சூழ்நிலையில் இறைவழிபாடு செய்வதற்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுப்பது, அறநிலையத் துறையின் தலையாய கடமையாகும். நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள், கோயில்களில் திருவிழாக்கள் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளின் போது திரளாகக்கூடும் பயணிகளுக்கும், யாத்திரிகர்களுக்கும் பயன்படும் வகையில் மட்டும் அல்லாமல், கோயில்களில் எப்போதுமே தூய நல்ல குடிநீர் வசதி, மற்றும் வசதிகளையும் செய்து அமைத்தல் வேண்டும் என்ற சீரிய கருத்தினை, அண்மையில் தெரிவித்துள்ளார்கள். இக் கருத்தினை, பொதுவாக எல்லாக் கோயில்களிலும், குறிப்பாகக் குடிநீர் வசதியில்லாத வறட்சிப் பகுதிகளில் உள்ள ஊர்க்கோயில்களிலும் செயற்படுத்தி, பொதுமக்களுக்கு இயன்ற அளவு உதவிப்பணிகள் புரியவும், நம் அறநிலைய அலுவலர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றேன். நன்றி வணக்கம்.

ஆசிரியரின் வேண்டுகோள்!

நமது 'திருக்கோயில்' திங்கள் இதழ், *1958*-ஆம் ஆண்டுமுதல், கடந்த 20 ஆண்டுகளாக, மிகவும் நல்லமுறையில் சிறப்புற நடைபெற்ற வருகின்றது. இதற்குச் சமயம்-தத்துவம்-இலக்கியம்-வரலாறு-கல்வெட்டு முதலியன பற்றிய பலதிறக் கட்டுரைகள், தக்க அறிஞர்களிடமிருந்து வரவேற்கப் பெறுகின்றன.

பொதுவாகக் கடவுளுணர்ச்சியையும், சமயநெறி ஒழுக்கத்தையும் வளர்க்க வல்லனவாக, கட்டுரைகள் இருத்தல் வேண்டும். தமிழக மக்களின் இரு கண்கள் போல விளங்கிவரும் சைவம் வைணவம் பற்றியும்—அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு தோத்திரங்கள் சாத்திரங்கள் இலக்கியங்கள் பற்றியும்—அவற்றைச் சேர்ந்த அடியார்கள் ஞானிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் வாய்மொழிகள் பற்றியும்—அவற்றிற்குரிய தலங்கள் கோயில்கள் விழாக்கள் முதலியன பற்றியும்—விளக்குவனவாகக் கட்டுரைகள் அமைதல் இன்றியமையாதது.

கட்டுரைகள் ஒவ்வொன்றும், தனித்தனியான அழகிய தலைப்புக்களில், 3 அல்லது 4 பக்கங்களுக்கு மேற்படாமல், நல்ல தமிழில், கலப்பும் கொச்சையும் அற்ற தூய நடையில், இனிதாக எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டுரைகளைப் பத்திகள் பிரித்தும், உள்தலைப்புக்கள் கொடுத்தும், கட்டுரையின் அமைப்பிற்குரிய எடுப்பு தொடுப்பு முடிப்பு ஆகிய உறுப்புக்களுடன், தாளின் ஒரு பக்கத்தில், தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். மேற்கோட் பாடல்களைக் கடின சந்திகள் பிரித்தும், சீர் தளைகள் பிரித்தும், அச்சில் அழகுற அமையத் தகுந்தபடி வரிகள் பிரித்தும், எழுதுதல் வேண்டும்.

வரப்பெறுகின்ற கட்டுரைகளில், நல்ல தரமுள்ளவையாகவும், பயனுள்ளனவாகவும், இத்துறையினல் கருதப்படும் கட்டுரைகள், 'திருக்கோயில்' இதழில், அவ்வப்போது தொடர்ந்து வெளியிடப் பெற்றுவரும். வெளியிடப் பெறாத கட்டுரைகள் குறித்து, அன்பர்கள் கடிதப் போக்குவரத்துகள் எதுவும் செய்தல் வேண்டா. கட்டுரைகள், என்றும் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்து, பயின்று பயன் கொள்ளத் தக்கனவாக அமைதல், முதன்மையாகும்.

ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்திற்குள், கட்டுரைகள் வந்து சேர்தல் வேண்டும். சுவாமி அம்பாள் முதலிய தெய்வத் திருவுருவங்கள், சிறந்த நல்ல சிற்பங்கள் ஓவியங்கள், கோபுரம் திருக்குளம் முதலிய கோயில் தோற்றங்கள், ஆகியவற்றின் அழகிய நிழற்படங்களையும் அன்பர்கள் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்

திருச்சிற்றம்பலக் கோவையார்

[கருத்துத் தொகுப்புச் சுருக்கம்]

(முற்றொடர்ச்சி)

(20) ஓதற் பிரிவு:

[தலைவியைத் திருமணம் செய்துகொண்ட தலைவன், முன்னரே ஒப்பு உயர்வற ஓதிமுடித்தான் ஆயினும், தான் ஓதிய அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றின் வேருக, உறுதிப் பொருள்கள் வேறு உளவோ என்று ஆராய விரும்பும் கருத்தினனுயும், கல்வியில் தன்னினும் தாழ்ந்தார்க்குத் தனது கல்வி மிகுதி காட்டி, அவர்களை அறிவுடையவராக்கும் கருத்தினனுயும், தலைவியைப் பிரிந்து செல்லுதல்.]

தலைவன்: ஏந்திய இழைகளை அணிந்த தோழியே! எல்லையற்ற நன்மைகளை உடைய, கல்வியாகிய உயர்ந்த மேருமலையினது, அளவு அற்ற எல்லையை அடைந்தவர்கள், தில்லையம் பலத்தின்கண் ஓர் அளவும் ஒப்பும் இல்லாதவன் ஆகிய சிவபிரானின் திருவடிகளை அறிந்து நினைந்தவர்களைப்போல, எல்லையில்லாத நன்மைகளை அடையும் தன்மையராவர். ஆதலின் இதுவரையில் யான் கற்றதன்மேலும், இனியும் கற்றுத் தெளிவதற்காக, வேற்று நாடுகளுக்குச் செல்ல விரும்புகின்றேன்.

[கல்வியானது தூய்மையும் பெருமையும் கலங்காமையும் ஆகிய நலங்களை விளைவித்தலால், ''கல்விச் செம்பொன் வரை'' என்றார். கல்வி கரையில்லாததாகலின், தலைவன் தான் முன்பு கற்றதன் மேலும் மிகப்பெரிதும் கற்க விரும்புகின்றான் என்பது தோன்றக் ''கல்விச் செம்பொன் வரையின் ஆர் அளவில்லா அளவு சென்றார்'' எனக் குறித்தார். ''ஆர் அளவு'' என்றது, காதமும் புகையும் (யோசனை தூரமும்) முதலாயின அளவுகளை. காட்சி கருதல் உரை முதலிய அளவைகளால் அறியப்படாதவன் ஆதலின், இறைவனை ''ஓர் அளவு இல்லா ஒருவன்'' என்று புகழ்ந்தார். தன்னை உன்னினரை எல்லா வகையானும் உயர்த்தி உய்விக்கும் சிறப்புடையனவாதலின், சிவபிரானின் திருவடிகளை ''இருங் கழல்'' என்று சிறப்பித்தார். எல்லையில்லாக் கல்விநலம் எய்தப் பெற்றவர்கள் அடையும் சிறப்பினை வியந்து ''ஒருவன் இருங்கழல் உன்னினர் போல், ஏர் அளவு இல்லா அளவினர் ஆகுவர்'' என்று புகழ்ந்து போற்றினர்.] *(308)*

தோழி: தலைவியாகிய செல்வியே! இறந்தொழிந்தோர் தலைமாலைகளை உடையவனும், தில்லைக்கண் உள்ள பெரியோனும் ஆகிய, சிவபிரானின் திருவடிகளுக்கே அன்புற்ற அடியவர்கள் எய்தும் நன்மைகளையெல்லாம், கல்வியும்கூடத் தரவல்லதாகும் என்பதனை உணர்ந்து, ஓதுதலான் மிக்காரை அடைந்து, எல்லா நூல்களையும் உணர்தற்கு விரும்பி, நின்னுடைய புரவலர் ஆகிய தலைவர், துன்பமும் வெம்மையும் மிக்க கானகத்தூடே செல்ல நினைந்தார்.

[''நின் புணர்முகை யுற்ற'' என்றதனுல், காலந் தாழ்த்தாது வந்துவிடுவர் என்றும்; 'புரவலர்' என்றதனுல், நின்நலம் அழியாமல் நின்னை அன்பிற் போற்றிப் பாதுகாப்பார் என்றும் கூறி, தோழி தலைவியைத் தலைவனின் பிரிவிற்கு உடன்படுத்த முயன்றாள்.] *(309)*

தோழி: கருங்கல்லால் செய்யப்பட்ட பரந்த மதிலை உடைய தில்லைச் சிற்றம்பலத்தைக் காதலித்தவனும், மேரு மலையை வில்லாகச் செய்த எம்முடைய தலைவனும் ஆகிய, சிவபெருமானை விரும்பாதவர்களைப் போல, நம் தலைவர், சொல்லால் இயன்ற பாவாகிய நூல்களைக் கற்க விரும்பினர் என்று யான்கூற, அக் கூற்றானது, மெல்லிய கூந்தலை உடைய தலைவியினது செவியின்கண், கொல்லனது வேலைப்பாடமைந்த கூர்மையான ஈட்டியைப் போலச் சென்று குத்தி வருத்தியது. தலைவனின் பிரிவு என்னும் சொற் கேட்ட அளவிலேயே இங்ஙனம் வருந்தும் இத்தலைவி, இனி அவனது பிரிவுத் துன்பத்தை எங்ஙனம் ஆற்றுமோ?

[பொருப்புவில்லி ஆகிய சிவபிரான்மேல் விருப்புடையோர், கல்விக்கடல் நீந்தி வருந்தாமையின், 'விற்பா விலங்கல் எம் கோனை விரும்பலர் போலச் சொற்பா விரும்பினர்'' என்றாள். இறைவனை விரும்புபவர் கல்வியை விரும்பார், இறைவனை விரும்பாதவரே கல்வியை விரும்புவர் என்பது தோழி கருத்து. ''கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்'' என வரும் திருவாசகப்பகுதி, இங்கு நினைந்து இன்புறத் தக்கது. இனி 'வருந்த' என்று ஒரு சொல்லை விரித்து ''விரும்பலர் போல வருந்த, அச்சொல் தலைவியின் செவிக்கண் குறுகியது'' என்று உரைப்பினும் அமையும்.] *(310)*

தலைமகள்: சிவகாமியம்மையின் திருமேனியினின்றும் பிரியாமல் ஒன்றி நிற்கும் சிவபிரானின் தில்லையில் வாழுகின்ற, பெருந்தன்மையை உடைய நம் தலைவர், நம்மை விட்டுப் பிரியாமல் இருத்தலையும், தனக்கும் நமக்கும் உயிர் ஒன்றேயாதலையும், நம்மை விட்டுப் பிரிந்தால் தாம் பெரிதும் ஆற்றாமை மிக்கவர் ஆதலையும், முற்காலத்தில் ஒருங்கே நம் முன்னின்று கூறினர். இப்பொழுது அவற்

றுள் 'நின்னிற் பிரியேன்' என்று கூறியமை, பொய்யாகி விட்டதனைக் கண்டோம். இனி இதுபோலவே, உயிர் ஒன்றுதலும், பிரியிற் பெரிதும் தரியாமையும் பற்றிக் கூறியனவும் கூடப், பொய்யேயாகி ஒழிதல் கூடும். இனி, அத்தகு தலைவர்க்கு நாம் சொல்லக் கடவது என்னை?

[தையல் மெய்யில் பிரியாத பேரன்பினன் ஆகிய சிவபிரானின் தில்லைக்கண் வாழ்ந்தும், அன்பு பேணாது பிரிதலை எங்ஙனம் வல்லவராயினர்? என்னும் கருத்தால், ''தையல் மெய்யிற் பிரியாமை செய்து நின்றோன் தில்லைப் பேரியல் ஊரர்'' என்று இகழ்ச்சிக் குறிப்பு அமையத் தலைவி கூறினாள். பிரிவு காணப்பட்டமையால் ''அன்ன'' என்றது, எஞ்சிநின்ற உயிர் ஒன்றுதல், பிரியிற் பெரிதும் தரியாமை யாகிய இரண்டையும் குறித்தது.] *(311)*

(21) காவற் பிரிவு:

[அரசன் எல்லா உயிர்களையும் பாதுகாத்தல் வேண்டும் என்பது அறநூல் விதித்த கடமையாதலின், தனது நாட்டின் பல பகுதிகளிலும் வாழுகின்ற உயிர்களைப் பாதுகாத்தற் பொருட்டு, தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்.]

தோழி: கரிய கயல்போலும் கண்ணினையும், மலரின் மணம் விளங்கும் சுருண்ட கூந்தலையும், அழகிய பூங்கொடி போன்ற உருவத்தினையும் உடைய தலைவியே! எல்லார்க்கும் மூத்தவனும் இளையவனும், முன்னவனும் பின்னவனும், முப்புரங்களை எரித்தவனும், விரிந்து பரந்த தில்லை நகரின்கண் உள்ளவனும் ஆகிய சிவபெருமானின், திருவருள் ஏவலால், நம்முடைய தலைவர், கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள உயிர்களைக் காத்தற்கு விரும்பி, நம்மை விட்டுப் பிரியக் கருதுகின்றார்.

[இச் செய்யுளில் சிவன் ''எல்லார் யாக்கைக்கும்முன்னே தனது இச்சையால் கொள்ளப்பட்ட திருமேனியை யுடையவனாதலின், எல்லார்க்கும் தான் மூத்தவன். பின் தோன்றிய யாக்கையை உடையார் எல்லாரும் மூப்பவும், தான் நிலைபெற்ற இளமையை யுடையவனாதலின் எல்லார்க்கும் இளையவன்; உலகத்திற்கும் முன்னுள்ளவன்; அதன் அழிவிற்குப் பின்னும் உள்ளவன்'' என்று உரையாசிரியர் வரைந்துள்ள விளக்கம் போற்றி மகிழ்தற்குரியது. தில்லையான் அருள் (ஏவல்) ஆவது, எல்லா உயிர்களையும் அரசன் காப்பாற்றக் கடவன் என்னும் அறநூல் விதி. காத்தலாவது, தன்வினை செய்பவரானும், கள்வரானும், பகைவரானும், உயிர்கட்கு வரும் அச்சத்தை நீக்குதல். ''மாநிலம் காவலன் ஆவான் மன்னுயிர் காக்கும் காலை, தான் அதனுக்கு இடையூறு தன்னால், தன் பரிசனத்தால், ஊனமிகு பகைத் திறத்தால், கள்வரால், உயிர் தம்மால், ஆன பயம் ஐந்தும் தீர்த்து, அறங் காப்பான் அல்லனோ?'' எனச் சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தின்கண் அருளிச் செய்திருக்கும் திருப்பாடல், இங்குக் கருதியுணர்ந்து மகிழ்தற்குரியது.] *(312)*

தலைமகள்: தேன் நிறைந்த மலரைச் சூடிய, சுருண்ட கூந்தலை உடைய தோழியே! சிறிய கண்ணினையும், பெரிய துதிக்கையினையும், வலிமை மிக்க தந்தத்தினையும், குழைந்த செவியினையும், சிவந்த புள்ளிகள் பொருந்திய முகத்தினையும் உடைய, கொடிய யானையினிடமிருந்து, முன்னொரு காலத்தில் நம்மைக் காப்பாற்றிய தலைவர், கரும்பு வில்லை உடைய காமனை எரித்த கண்ணுதலோனின் சிற்றம்பலத்தை நினையாத பாவிகளைப்போல, ஒரு சிறிதும் கண்ணோட்டம் இல்லாமல், நம்மை விட்டுப் பிரியக் கருதுகின்றனரோ ? நாம் நம் தாய் தந்தையர் முதலிய குரவரால் பாதுகாக்கப்பெறும் முற்காலத்தில், நம்மை வலியவந்து காத்தருளியவர், தம்மையன்றி வேறு துணையில்லாத இந்நாளில், நம்மைக் காக்க முற்படாமல் கைவிட்டுப் பிரிந்து செல்ல நினைத்தல் முறையோ? *(313)*

(22) பகைதணி வினைப்பிரிவு:

[தமக்குள் பகைமை கொண்ட இரு வேந்தர்களின் பகைமையைத் தணிவித்து, அவ்விருவரையும் நட்புற்றுப் பொருந்துமாறு செய்தற்குத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்.]

தோழி: சிவபிரானின் தில்லையைச் சூழ்ந்துள்ள சோலைகளின் மலர்களாலும், தனது நறுமணத்தினை மாற்றுதற்கரிய, சுருண்டு தாழ்ந்து நெருங்கிய கூந்தலை உடைய தலைவியே! ஒருவரின் உள்ள மிகுதியை ஒருவர் தணித்தற்கரிய, இரண்டு பெரிய வேந்தர்கள் தம்முள் பகைத்து, உடன் மடியப்புகுகின்றார்கள் எனக் கேள்வியுற்று, தாம் அவ்விருவேந்தரையும் அடக்கி ஆளவல்ல அறிவாற்றல் உடையவராதலின், அவர்களின் பகையைத் தணிவித்து, அவர்கள் தம்மில் நட்புற்று ஒன்றுபடுமாறு செய்ய விரும்பி, நம்முடைய தலைவர் நின்னை விட்டுப் பிரிந்துபோக நினைந்தார்.

[இச் செய்யுளின்கண், ''பல் பிறவித் தொகை தணித்தற்கு என்னை ஆண்டு கொண்டோன்'' எனவரும் பகுதிக்கு, ''பேரருளினர் ஆதலின், தாம் அளிக்கும் இடத்துப் பல பிறவித் தொகையான் வரும் கழி பெரும் துன்பமுடையாரையே வேண்டுதலின் என்னை அடிமை கொண்ட சிவபெருமான்'' என்று உரையாசிரியர் எழுதியுள்ள விளக்கம், மிக்க நுட்பமும் சிறப்பும் வாய்ந்ததாகும்.]. *(314)*

தோழி: தன்னிடம் மிக்க விருப்பம் கொள்ளும் அடியவர்களைத் தேவர்களினும் மிக உயர்ந்தோர் ஆகச் செய்து, விருப்பமற்ற பாவியராகிய பகைவர்கள் மாயும்படி சுழற்றி வீசுகின்ற, சூலப் படையை உடைய சிவபிரானின் தில்லையைப் போன்று, அழகும் சிறப்பும் மிக்க தலைவியே! மலையைச் சார்ந்த மயில்போல்வாய்! நெருப்பைச் சேர்ந்த வெண்ணெயும், நீரைச் சேர்ந்த உப்பும்போல, நீ இவ்வாறு உருகி வருந்தித் தனிமை யுறுதல் வேண்டா. நம்மிடத்தே அன்புள்ளவராகிய தலைவர், நம்மைவிட்டுப் பிரிந்து செல்வது பொய்யா

யிற்று. தலைவர் செலவு அழுங்கினர்; நம்மை விட்டுப் பிரிந்து செல்ல மாட்டார்.

[இச் செய்யுளில், 'சிவபெருமான் தன்கண் மிக்க விருப்பமுறும் அடியவர்களைத் தேவரினும் உயர்ந்தோராகச் செய்வன்' என்னும் உண்மையினை, ''புகவே தகேன் உனக்கு அன்பருள் யான், என் பொல்லா மணியே! தகவே எனை உனக்கு ஆட்கொண்ட தன்மை? எப் புன்மையரை மிகவே உயர்த்தி, விண்ணோரைப் பணித்தி; அண்ணா! அமுதே! நகவே தகும் எம்பிரான்! என்னை நீ செய்த நாடகமே'' என வரும் திருவாசகச் செய்யுளும் குறிப்பிடுதல், நினைத்து இன்புறுதற்குரியது.] *(315)*

(23) வேந்தற்கு உற்றுழிப் பிரிவு:

[ஒரு வேந்தனுக்கு மற்றொரு வேந்தன் தோல்வியுற்றுத் தன்னை வந்து புகலடைந்தால், அவனுக்கு உதவி செய்வதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்.]

தோழி: இளமை அழகினையும், மெல்லிய நோக்கத்தினையும் உடைய தலைவியே! மலர்கள் புனையப் பெற்ற முடியை உடைய பகை வேந்தர்கள், போர் செய்யும் பாசறையை நோக்கி, நம் தலைவர் சென்றார். காதிற் குழையணிந்த எழில்மிக்க புலியூர்ப் பெருமானை நினையாதவர்கள் அழிந்து பாழாவது போல, பகைவர்கள் அமைத்த மதில்கள், இன்று நம் தலைவரால் பெரிதும் அழிந்து பாழாகி ஒழிதல் திண்ணம். *(316)*

தலைவி: தோழியே! நம் காதலர், வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தமையால், யான் வருந்துகின்றேன் என்று கருதி, நீ எனக்கு ஆறுதல் கூற முற்படுகின்றாய். யான் நம் தலைவர் பிரிந்ததற்காக வருந்துகின்றேன் அல்லேன். பொன்னி (காவிரி) ஆறு சூழ்ந்து நிலைபெற்றுப் பொலிகின்ற புலியூரின்கண் உள்ளவனும், வன்னிமரத்தின் தளிர்சூழ்ந்த சடையை உடையவனுமாகிய சிவபெருமானை, வணங்காத பாவிகள் வருந்துமாறு போல, பகைவர்கள் இடர்ப்பட்டு வருந்தும்படி, அவர்கள் மேற் போரிடச் சென்ற தோன்றலாகிய நம்முடைய தலைவரது பாசறையின்கண், உலகம் முழுவதையும், சூழ்ந்து வளைத்து, மின்னவிட்டுக் கடல்நீரைப் பருகுகின்ற பெரிய மேகங்கள் தோன்றுமாயின், 'கார்காலத்திற்குள் திரும்பி வந்துவிடுவேன்' என்று தாம் நமக்குக் கூறிச் சென்றதனை நினைந்தும், நம்மைப் பிரிந்திருக்க மாட்டாமலும், தாம் மேற்கொண்ட போர்ச் செயலை முடித்து வெற்றி கொள்ளாமலே, தலைவர் விரைந்து திரும்பி வந்துவிடுவாரோ என்றுதான், யான் பெரிதும் வருந்துகின்றேன்.

[தலைவி, தலைவனின் பிரிவால் எவ்வளவுதான் துன்பம் உற்றாலும், அத்துன்பத்தையெல்லாம் தாங்கிக் கொண்டு, தலைவனின் வெற்றியையும் புகழையுமே பெரிதும் விரும்பி நிற்கின்ற இயல்பினளாக, அவன் வருந்துணையும் ஆற்றி எதிர்நோக்கியிருப்பாள் என்பது கருத்து.] *(317)*

தலைவன் (தனக்குள்): சேவலாகிய ஆண் பறவையானது, தன் துணையாகிய பெண் பறவையையும், பார்ப்புகளையும் (குஞ்சுகளையும்), தன்னுடைய சிறகுகளால் வளைத்து அணைத்துப் பாதுகாத்து, கொண்டல் துவலையால் (கீழ்த் திசைக் காற்றினால் சிதறிவீழும் பனித்துளிகளால்) விளையும் கொடிய குளிரைத் தாங்க முடியாமல் வருந்தும் இவ் இரவு நேரத்தில், திருமால் சிறிதும் அறியாத சிவபிரானின் சிற்றம்பலம் போன்று, சிறப்பும் அழகும் மிக்க தலைவிக்கு, யான் அவளைவிட்டு இங்குப் பிரிந்து வந்து தனியே இருக்கும் தன்மை, எத்தகைய கொடிய வருத்தத்தைச் செய்வதாக இருக்குமோ?

[எளிய சிறிய சேவற் பறவையும்கூட, பனியினால் நேரும் குளிரினால் தன் பெடையும் பார்ப்பும் வருந்தாமல், அவற்றைத் தழுவி அணைத்துப் பாதுகாக்கின்றது. ஆனால் யானோ என் தலைவியை விட்டுப் பிரிந்து வந்து, அவளையும் வருந்த வைத்து, யானும் வருந்தா நிற்கின்றேன். இஃது என்னோ? எனத் தலைவன் இரங்குகின்றான் என்பது கருத்து.] *(318)*

தலைவி: மழையானது நிரம்பப் பெய்யவும், அதன் குளிரைப் போக்கிக் கொள்ள மக்கள் எல்லோரும் நெருப்புத் திரளை மேவி நிற்கவும், தம்மைக் காண்பார்க்கு நெடுமாலின் எழில் புலப்படும்படி மிகவும் கருமை நிறம் உற்று, மலைத் திரள்களின்மீது ஏறித் துணையில்லாதவரைத் தேடும் மேகக் கூட்டங்கள், கரும்புச் சோலைகள் சூழ்ந்த தில்லையின் மன்னவனாகிய சிவபெருமானின் திருவருளால், அன்பு மிக்க தம்முடைய நண்பர்கள், தம்மால் உதவி பெற்று மகிழ்ந்து வாழும்படி செய்வதற்காக, நம் தலைவர் சென்றுள்ள பாசறையாகிய இடத்திற்கும் சென்று தங்குமோ? மேகங்கள் அங்குச் சென்று தங்குமாயின், நம் தலைவர் நம்மை நினைந்து ஆற்றாராய், தாம் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்காமலேயே திரும்பி விடுவரே! இதற்கு நாம் என் செய்வோம்? *(319)*

தலைவி: புற்றை இருப்பிடமாகக் கொள்ளாத, ஒளிமிக்க பாம்புகளை அணிந்த சிவபிரானின் தில்லையின்கண், ஆறறிவுடைய மக்களேயல்லாமல், சிற்றறிவை உடைய பறவைகளும்கூட, தம்முடைய பெண் துணையை இறக்கைகளால் அணைத்து, தமது குஞ்சுகளையும் தழுவி, இனத்துடன் சேர்ந்து, அச்சமில்லாமல் துயிலப்பெறுகின்ற, இருள் சூழ்ந்த இந்த இரவு நேரத்தில், பனியானது எங்கும் பெய்து, குளிரை விளைவித்து வருத்த, அதற்கு ஒரு துணையும் மருந்தும் பாதுகாப்பும் இன்றித் துவளுற்று வருந்துக என்று, என்னை என் தாயார் பெற்றெடுத்து விட்டாள்! தலைவரைப் பிரிந்து வருந்தும்யான், இனி யாது செய்வேன்? *(320)*

தலைவன்: முப்புரங்கள் வருந்தும்படி முன்னொரு காலத்தில் மேருமலையாகிய வில்லை ஏந்தி, தேவர்களின் நடுவே அவர்களுக்குத் தலைவனா

கிய பிரமனின் தலையைக் கொய்தவனுகிய சிவபிரானின், தில்லைச் சிற்றம்பலம் போன்ற சிறப்பும் அழகும் மிக்க தலைவியானவள், தாங்கும் அளவினது அன்று, இப்பனியின் கொடுமை! உலகமெங்கும் பரவித் தன் துளிகளைப் பரப்பி நிற்கும் பனியானது, தம் துணைவரைப் பிரிந்து தனிமையில் இருப்பவர்களின் உயிரைக் கவர, அவர்களின் மீது வானம் தன் கொடிய அம்புகளை விடுவது போன்று உள்ளது. இத்தகைய கொடிய பனியைத் தலைவி எங்ஙனம் ஆற்ற வல்லள்? எனக்குக்கூட அன்றே, இப்பனியின் கடுமை ஆற்றுதற்கு அரிதாக உள்ளது! (321)

தலைவி: அழகிய தொண்டைக் கனிபோலும் சிவந்த இதழினையும், யாழின் இசை போன்ற இனிய சொற்களையும் உடைய, சிவகாமியம்மையை ஒரு பாகத்திற் கொண்ட சிவபிரானின் சிற்றம்பலத்தைத் விரும்பாமல், உணவின் மேலேயே மிக்க விருப்பம் கொண்ட மனத்தைப் போலக் கரியநிறமுடைய குயில்கள், இம் மாஞ் சோலையின்கண் வந்து குடைவதால், வண்டுகள் இச்சோலையின் சுற்றுப்புறங்கள் எல்லாவற்றிலும் வந்து சூழ்ந்து கொண்டன. இத்தகைய இளவேனிற் பருவத்தில் தலைவரைப் பிரிந்து, உயிர் வாழும் நெறி ஒன்றினையும் யான் கண்டிலேன். இளவேனிற் காலத்தின்கண் தலைவரைப் பிரிந்து ஆற்றியிருத்தல் எமக்கு இயலாது. தலைவரின் பிரிவாற்றுமையைத் தாங்காமல் யான் உயிர் நீத்தபடி உள்ளேன். இனி யான் என்செய்வேன்? (322)

தோழி: கார் காலத்து மலர்களில் சென்று, தேனைப் பருகுகின்ற வண்டுகளின் இனிய இசையை ஆராய்கின்ற, கூந்தலை உடைய தலைவியே! பாம்புகளை அணிகலனுகைக் கொண்ட புலியூர்ச் சிவபிரானின் திருமிடறு போன்ற அழகுமிக்கது என்று அனைவரும் கூறுமாறு, வானத்தின்கண் பனிமுகில்கள் கருமையுற்றுப் பரவுகின்றன. அதனல் நம்மை முன்பு கலந்து, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்து சென்ற நம் தலைவரது தேரானது, இன்றுதல் நாளையாதல் வருவதை, நாம் காண்போம். ஆதலின் இனி நீ கவலை கொள்ளுதல் வேண்டா. (323).

தோழி: சிறப்புமிக்க அன்னம்போலும் நடையையுடைய தலைவியே! அடியவர்கள் அளவற்ற களிப்பை அடையுமாறு, தில்லைச் சிற்றம்பலத்தில் சிவபிரான் கூத்தாடா நின்றுன். அதுபோது முழவங்கள் முகில் போல் முழங்கின. முழங்கவே அவற்றை முழவம் (மத்தளம்) என்று உணராமல், கார்காலத்து மேகத்தின் இடிமுழக்கம் என்று தவருகக் கருதிக் கொண்டு, காந்தள் மலர்கள் பாம்புகள் போலும் தமது இதழ்த் துடுப்புக்களைப் பரப்பி மகிழ்ந்தன. ஆகையினுல் இதனை நீ நம் தலைவர் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் என்று கருதி, மயங்கற்க. இது கார்காலம் அன்று; கார்காலமாயின், நம் தலைவர் நம்பால் கூறிச் சென்றது போல், இதுபோது நம்மை நினைந்து திரும்பி வந்துசேர்ந்திருப்பார். (324).

தலைவி: தேன்போலும் இனிய சொற்களைப் பேசும் தோழியே! எண்டிசைகளிலும் விளங்குகின்ற வீரக் கழலையுடைய அழல் வண்ணனும், சிற்றம்பலத்தில் உள்ள எம் தலைவனும், ஆகிய சிவபெருமானின், குண்டலமும் வில் நாணுமாகத் திகழ்கின்ற பாம்பைப் போல, காந்தள் மலரின் இதழ்கள் வெளிப்பட்டு விரிந்தன, சிவபிரானின் கையில் உள்ள தீயைப் போலச் சிவந்த தோன்றி மலர்கள் பூத்துப் பொலிந்தன. இங்ஙனம் காந்தளும் தோன்றியுமாகி பூக்கள் மலர்ந்து பொலிந்து, மெய்யாகத் தோன்றும் இவ்வழகிய காட்சியும், பொய்யாகுமோ? காந்தளும் தோன்றியும் மலர்ந்திருப்பதால், தலைவர் நம்பால் வருவதாகக் கூறிச்சென்ற, கார்காலம் இதுவேயாகும். (325)

தோழி: கூரிய வேல்போலும் கண்களையுடைய அழகிய தலைவியே! திருமாலால் அறியப்பெருத தில்லைச் சிற்றம்பலவனின் திருநீலகண்டம்போல, இருண்ட மேகங்கள் எட்டுத் திசைகளிலும் சூழ்ந்து வருகின்றன. ஆதலின் நம்மைக் கலந்து பிரிந்து சென்ற தலைவரின் தேர், தமக்குள் பகைத்துப் போர் புரிந்த மன்னரை ஒன்று சேர்த்து வைத்து, மேற்கொண்டு சென்ற வினையை முடித்து, இன்று நமது இல்லத்திற்குத் திரும்பி வந்து சேரும்! இனி நீ கலக்கம் கொள்ளற்க. (326)

தலைவன்: தேர்ப்பாகனே! வேலைப்பாடு மிக்க, உயர்ந்த பகைவர்களின் மதில்களை அழித்து, நாம் மேற்கொண்ட செயலை முடித்து நிறைவு கொண்ட இன்று, ஓர் அழகிய திருமுகம், சிவபிரானின் சிற்றம்பலத்தையே பரவும் பக்திநலம் மிக்க வரகுண பாண்டியன், இமயமலையின்கண் பொறித்த கயற்கொடியைப் போன்ற அழகிய கண்களையும், கூரிய வில்போன்ற புருவங்களையும், இந்திரகோபம் (தம்பலப் பூச்சி) போன்ற சிவந்த இதழ்களையும், காட்டிக் கொண்டு வாரா நின்றது. இதனல் தலைவியின் நினைவே என்னுள்ளத்திற் பெரிதும் நிலைபெற்று முந்துறுகின்றது. இனியேனும் தலைவியை அடைவதற்கு நாம் விரைந்து செல்லுவோம்!

[தலைவன் தான் மேற்கொண்ட செயல் முடியப்பெற்ற நிலையில், பெரிதும் நினைவு கூர்வான். ஆதலின், தலைவியின் கயல் போன்றகண்களும், வில்போன்ற புருவங்களும், இந்திரகோபம் போன்ற இதழ்களும் கொண்ட தலைவியின் அழகிய திருமுகம், தலைவனுக்கு உருவெளிப்பாடாகத்தோன்றுகின்றது. அதனல், தலைவியைச் சென்று அடைவதற்குத் தேரை விரைந்து ஒட்டுக என்று, தலைவன் பாகனுக்குக் கட்டளையிடுகின்றுன், என்பது இப்பாடலின் கருத்து. இச்செய்யுள் ''இன்று நம் அரசனின் ஆணைஓலை, அவனது இலச்சினையாகிய அம்பையும் வில்லையும் உடையதாய், இத்துணைக் கால நீட்டிப்பு ஏன்? என வினவும் சினத்தையும் காட்டுவதாய் வாரா நின்றது'' என்று, இரட்டுற மொழிதலால், சிறந்த பிறிதொரு பொருளும் உணர்த்தி வந்தது. திருமுகம்- தலைவியின் அழகிய முகம்; அரசனின் ஆணை ஓலையாகிய

கடிதம். கயல்—தலைவியின் கண்களுக்கு உவமையாகிய கயல்மீன்; பாண்டியனின் கொடியாகிய கயல்மீனின் இலச்சினை (முத்திரை *SEAL*). வில்—வில்போன்று வளைந்த புருவம்; சேர அரசர்க்குரிய விற்கொடியாகிய இலச்சினை. கோபம்—இந்திரகோபம், தம்பலப்பூச்சி; இங்குத் தலைவியின் சிவந்த இதழ்களையும், அரசனின் சினத்தையும் உணர்த்தி வந்தது. இச்செய்யுள் சிலேடையணி எனப்படும்.

இப்பாடலிலும், மேலே 306 ஆம் செய்யுளிலும் ''வரகுணன்'' என்னும் பாண்டியன் ஒருவனின் பெயர்க் குறிப்பு வருதல் கொண்டு, கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்த முதலாம் வரகுணன் என்னும் பாண்டியனின் காலத்திலேயே மாணிக்கவாசகரும் வாழ்ந்திருந்ததாகச் சிலர் கூறுவர்.] (327)

தலைவன்: பாகனே! செம்பொன்னால் அமைந்த உயர்ந்த மதிலை உடைய சிறந்த ஊரில், மாடப் புறாக்கள் தெருவின்கண் சேர்ந்து விளையாடி, இறவாணத்தின்கண் உறங்கி, வாயில் முற்றத்தின்கண் இரை தேர்ந்து உண்ணுகின்ற நம் தலைவியின் எழில்மிக்க இல்லத்திற்கு, சிவபிரானின் சிற்றம்பலத்தைச் சென்று சேர்ந்தவர்களின் பிறவியானது விரைந்து கெடுவதுபோல, நம்முடைய தேரானது, விரைந்து முடுகிச் சென்று சேர்வதாக.

[புறாக்கள் துணையோடு துயின்று, முற்றத்தின்கண் விளையாடுதல் கண்டு, தலைவி, தலைவனின் பிரிவை நினைந்து ஆற்றாமல் வருந்துவாள் என்பது தோன்ற, ''மடநடைப் புள் இறப்பில் துயின்று, முற்றத்து இரை தேரும்'' என்று தலைவன் குறிப்பிட்டான். சிற்றம்பலம் சென்று சேர்ந்தவர் பிறவியின் இறுதிக்கண் பேரின்பம் எய்துமாறுபோல, யானும் இச்சுரம் செல்லுதலின் இறுதிக்கண், தலைவியின் பெருந்தோள்களைத் தழுவி முயங்குவேன் என்னும் கருத்தால் ''பிறப்பில் துனைந்து பெருகுக தேர்'' என்றான். துனைதல்-விரைதல்]. (328)

வளம் மிகுந்த மேகங்களே! எம் தலைவியின் ஊர்க்கு, நீங்கள் யான்வரும் இத்தேர்க்கு முன்னதாகச் செல்லாதீர்கள். அன்றியும், என்னைப் பிரிந்த தனிமையால் வருந்தும் தலைவி கேட்குமாறு, இடி முழக்கம் செய்யாதீர்கள். நீங்கள் முன்னே சென்றாலும், இடிமுழக்கம் செய்தாலும், கார்காலம் வந்துவிட்டது; தலைவர் வந்திலரே என்று கருதித் தலைவி, தேவர்களின் துயர்க்கு மருந்தாகியவனும், தில்லையம்பலத்தின்கண் உள்ளவனுமாகிய சிவபிரானின் திருவடிகளை வணங்காதவர்களைப் போல, தன் அழகெல்லாம் அழிந்து அளவற்ற துன்பத்தை அடைவாள். (329)

தோழி: பாம்பாகிய நீண்ட குழையை அணிந்த அழகனாகிய சிவபிரானின், தில்லைச் சிற்றம்பலத்தை ஒக்கும் தலைவியே! நீ பொலிக! வாழ்க! நம்முடைய தலைவர், தம்மை வணங்கிப் பணிந்தவர்களுடைய திறையை (கப்பப் பொருளை)ப் பெற்றுக் கொண்டும், பகைத்தவர்களின் முடி முதலிய அடையாளப் பொருள்களைக் கவர்ந்துகொண்டும், தமது சிறந்த தேருக்கு முன்னாக வீர முரசு ஒலிக்கவும், தேர்க்குதிரைகள் ஆலியா நிற்கவும், இதோ நம் இல்லத்தின் முற்றத்தில் வந்து சேர்ந்து விட்டார். ஆதலின் இனி நீ நின் கவலையை விடுத்து மகிழ்ச்சி கொள்க! (330)

தலைவன்: பிரமனும் திருமாலும் அறியாத சிவபிரானின், தில்லையைப் போன்ற நல்ல தோழியே! பகைப் புலத்திற்குச் சென்று போர்ப் பாசறையின்கண் யான் தங்கியிருந்த காலத்தும், நெருங்கிய வளையல்களை அணிந்த கிளியைப் போலும் அழகிய இத்தலைவியானவள், தன்னுடைய கண்ணாகிய பெரிய கரிய குவளை மலரில், கண்ணீராகிய முத்துக்களைத் தேங்க விட்டுக்கொண்டு, ஒரு காலமும் என் நெஞ்சை விட்டு நீங்காமல் இருந்தாள். இவளை யான் இடையறாது நினைந்து கொண்டே இருந்தேன்; இவளை யான் மறக்குமாறு யாங்ஙனம்? (331)

(ஆசிரியர்) —தொடரும்

நூல் அறிமுகம்

(1) **திருக்குறளில் அறிவு:** 'கோவை அருட்கலைச் செம்மல்', சிவநெறிச் செல்வர் பேராசிரியர் திரு. ப. சு. மணியம் அவர்கள் எழுதிய இந்நூலில், அறிவே கருவியும் அறனும், நன்றின்பால் உய்த்தல், மெய்ப்பொருட் காட்சி, எண்மையும், நுண்மையும் ஒட்பம் உலகம் தழுவல், உலகின் வழியது ஒழுக்கம், ஆவதறிதல் அஞ்சுவதஞ்சல், எதிரதாக் காத்தல், எல்லாம் உடையார், மெய்யுணர்வுநலம் என்னும் கட்டுரைகள், பதினொன்று அடங்கியுள்ளன. திருக்குறளில், 'அறிவு' என்னும் அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு குறளுக்கும் உரிய, அரிய விரிவான விளக்கமாக, இக்கட்டுரைகள் சிறந்த முறையில் அமைந்துள்ளன. ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம், இந்நூலின்கண் எங்கும் புலனாகின்றது. சங்கநூல் சமய நூல் பிற்கால நூல் உரைநூல் ஆகிய பலவகை நூல்களிலும், ஆசிரியர் பெற்றுள்ள பயிற்சியும் புலமையும், இந்நூலின் சிறப்பினையும் சுவைநலத்தினையும் மிகுதிப்படுத்துகின்றன. தூய இனிய நல்ல தனித் தமிழ்நடை! பயன்மிக்க சிறந்த இலக்கிய நூல்! திருத்தமான, அழகிய உயர்ந்த பதிப்பு! 265 பக்கங்கள். விலை ரூ. 8/-.

கிடைக்குமிடம்:—'' மறைமலை அடிகள், புன்செய்ப்புளியம்பட்டி-638459.
கோவை மாவட்டம் ''.

—ஆசிரியர்.

கம்ப ராமாயணம்

'சிலம்புச் செல்வர்'
திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்

தமிழில் இலக்கியம் படைத்த கவிஞர்களிலே, கம்பருக்குள்ள இடம் தனியானதாகும். இளங்கோவடிகளுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்க் கம்பர் தோன்றிய காரணத்தால், தம் காலத்தில் தமிழ் அடைந்திருந்த வளர்ச்சியைப் பயன்படுத்தி, இளங்கோவின் சிலம்பை விடவும் செல்வாக்குப் பெறத்தக்க வகையில் விருத்தப் பாவால் காப்பியம் படைத்தார்.

சிலப்பதிகாரம், தமிழினத்தில் தோன்றிய சரித்திர நாயகனையும் நாயகியையும் பாத்திரங்களாகக் கொண்டு படைக்கப்பட்டதாகும். அதனால், அந்நூல் தமிழினத்தின் தேசியக் காப்பியமாகி விட்டது. கம்பர், வடமொழியில் வான்மீகி கற்பித்த இராமாயணத்திற்கு வழி நூல் செய்த காரணத்தால், தமிழினத்தின் தேசியக் காப்பியம் என்ற தகுதியை அது பெறவில்லை. ஆயினும், தமிழிலுள்ள இந்திய தேசியக் காப்பியமென்று சொல்லலாந்தானே! ஆயினும் சிலப்பதிகாரத்திற்கு அடுத்த நிலையிலேனும் நிற்கத்தக்க வகையில், கம்பராமாயணத்திலே தமிழ் மொழிப்பற்றும், தமிழ் இனப்பற்றும் தாண்டவமாடுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையான, சங்க இலக்கியங்களிலேயே, இராமாயணச் செய்திகள் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆம்; புறநானூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய சங்க இலக்கியங்களிலே, இராமாயணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. பெரும்பாலும் உவமையாகவே எடுத்தாளப்பட்டுள்ளன. ஆயினும், சங்ககாலத் தமிழர் இராமனை வழிபடும் தெய்வமாக ஏற்றிருந்ததாகத் தெரியவில்லை.

சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரத்தில்தான், இராமன் தமிழ் மக்கள் வழிபடும் தெய்வமாக அறிமுகப்படுத்தப்படுகின்றான். சமணத் துறவியான கவுந்தியடிகள், தந்தையின் ஏவல் காரணமாக இராமன் வனம் சென்றான் என்றும், அங்கு அவன் தன் மனைவியைப் பிரிந்து வருந்தினான் என்றும் கோவலனிடம் கூறக் கேட்கின்றோம். இந்த இடத்திலே, இராமனை ''வேத முதல்வனை நான்முகனைப் பெற்றெடுத்த திருமால்'' என்று கவுந்தியடிகள் கூறுகின்றார்.

''தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கள் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ! நெடுமொழி யன்றோ?''

என்பது கவுந்தியடிகளின் வாக்கு. ஆய்ச்சியர் குரவையிலேயும் இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

கம்ப நாடர், வான்மீகி படைத்த ராமாயணத்தில் வரும் பிரதான பாத்திரங்களுடைய பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும், பல்வேறிடங்களில் மாற்றிக் காட்டுகின்றார். முதனூல் படைத்த வான்மீகிக்கும், வழி நூல் தந்த கம்பருக்கும் இடைப்பட்ட காலம், 1,500 ஆண்டுகளாகும். இந்த இடைக்காலத்தில், பாரத சமுதாயத்தினர் நாகரிகத்தை நோக்கி முன்னேற்றம் அடைந்துள்ளதைக் கம்பர் நினைவில் கொள்ளுகின்றார்.

அத்துடனன்றி, பழக்க வழக்கங்களில் வட புலத்தவருக்கும், தென்புலத்தவருக்கும் உள்ள வேறுபாடுகளைக் காக்க வேண்டியது, தன் கடமை என்பதையும் கம்பர் அறிந்தவர், எதிலும் வேறுபாடு வேறு; விரோதப்பாடு வேறு. வேறுபட்டனவெல்லாம், தம்முள் விரோதப்பாடு உடையவையென்று சொல்லி விட முடியாது. நாகரிகத்தில் ஆரிய இனத்திற்கும் தமிழினத்திற்குமிடையே நிலவும் வேறுபாட்டினை விரோதப்பாடு என்று கருதிவிடக் கூடாது. ஒரு இனத்தின் நாகரிகம் சிறப்பானதென்று சொல்லலாம். ஆனால், இன்னொரு இனத்தின் நாகரிகம் இழிவானதென்று சொல்வதற்கில்லை. காலவேறுபாடு காரணமாகவே நாகரிக வேறுபாடுகள் தோன்றுகின்றன. இந்த உண்மையை உணர்ந்த கம்பர், ஆரிய-தமிழ் இனங்களிடையே அந்நாளில் நிலவிய நாகரிக வேறுபாடுகளை நினைவிற் கொண்டு, வான்மீகி ராமாயணப் பாத்திரங்களைத் தமிழ் நாகரிகத்திற்கேற்பத் திருத்திக் காட்டுகின்றார்.

தமிழ்நாட்டார், அந்நாளிலும் கற்பு நெறியைப் போற்றி வாழ்ந்தவர். பிறர் நெஞ்சு புகாத கற்பு நெறி, பெண்குலத்தின் பெருமை

யெனச் சாற்றியவர் சான்ருேர். அந்த உயர் கற்பை, சீதையின் மேலேற்றிக் கூறுகின்ருர் கம்பர். வான்மீகி ராமாயணத்திலும், காப்பிய நாயகியான சீதை கற்பிற் சிறந்தவளாகவே காணப்படுகின்ருள். அழகுக்கு அழகு செய்வது போல, அவளுடைய கற்புக்கு மேலும் சிறப்புத் தேடுகின்ருர் கம்பர்.

இலக்குவனுல் பங்கப்படுத்தப்பட்டு இராவணனை அடைந்த சூர்ப்பனகையானவள், தன் அண்ணனுக்குக் காமவெறியூட்டும் வகையில் சீதாதேவியின் அழகையும் அங்கங்களையும் வருணிக்கின்ருள். தங்கை உருவகப்படுத்திக் காட்டிய சீதையைத் தன் அகக்கண்களால் இராவணன் காண்கின்ருன். இதனுல் இராவணனுடைய மனச் சிறையில் சீதை அடைக்கப் பட்டுவிட்டதாகக் கம்பர் கருதுகின்ருர். இதனை, ''மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம். நீண்ட எயிலுடை இலங்கை நாதன், இதயமாம் சிறையில் வைத்தான்'' என்ற வரிகளால் அறிகிருேம்.

இது, ஆரண்ய காண்டத்தில் வரும் நிகழ்ச்சியாகும். இந்தக் காண்டத்தில் இராவணனுல் அவனது மனச் சிறையிலடைக்கப்பட்ட சீதையை யுத்த காண்டத்தின் இறுதியிலே, ஒரு செய்யுள் பாடிக் கம்பர் விடுதலை செய்கிருர்.

இராம-இராவணர் போரின் முடிவிலே, இராவணனுல் வைக்கப்பட்ட புறச்சிறையான அசோகவனத்திலிருந்து, கற்புக் கனலியான சீதை விடுவிக்கப்படுகிருள். வான்மீகி அத்துடன் ஆறுதலடைந்து விடுகின்ருர். இராவணன் வைத்த புறச் சிறையிலிருந்து மீட்டதோடு, சீதையின் கற்பு காக்கப்பட்டுவிட்டதாக அவர் கருதியிருக்கலாம். ஆனுல், கம்பர் அப்படிக் கருதவில்லை. கற்புத் தெய்வமாம் கண்ணகி பிறந்த தமிழ் நாட்டில் பிறந்தவர் அல்லவா! அதனுல், இராம பாணத்தால் இராவணன் மாண்ட பின்னர், அவனுடைய மனச்சிறையிலிருந்தும் சீதையை விடுவித்து, பிற ஆடவரின் நெஞ்சு புகாத பெண்கற்புக்குப் பெருமை தேடுகின்ருர்.

இராவணன் மாண்டு மண்மேல் கிடப்பதைக் காணும் மண்டோதரியானவள், மனம் நொந்து அழுகின்ருள். எளிய மானிடனை இராமன், பத்துத் தலைகளும், இருபது தோள்களும், திக்கெட்டும் வென்ற தீரமும் உடைய, தன் கணவன் இராவணனைக் கொன்றுவிட்டான் என்பதனை, அவளால் நம்ப முடியவில்லை. அதனுல், மரணம் வந்த விதத்தினை அறியத் தன் மணாளனின் பிரேதத்தை ஆராய்கிருள். எள் இருக்கவும் இடமில்லாதபடி, தன் கணவனுடைய உடலை மயிர்க்கால்தோறும் இராம பாணம் துளைத்திருப்பதைப் பார்க்கிருள். பன்முறை இராமபாணம் உடலுள் புகுந்து புகுந்து வெளிவந்திருக்க வேண்டுமென்பதை உணர்கின்ருள். எதைத் தேடி அந்த பாணம் தன் கணவனின் உடலின் மயிர்க்கால்தோறும் புகுந்து புகுந்து வெளிவந்து துளைத்திருக்கக் கூடும் என்பதை ஆராய்ந்து, இறுதியில் உண்மையை அறிந்து கொள்கிருள். இராவணனுடைய நெஞ்சிலிருந்த காதல்தானே, சீதையை அவன் கவர்ந்து வருவதற்குக் காரணமாக இருந்தது. அந்தக் காதலையும் அழித்து முடிக்க, இராமபாணம் இராவணனின் உடலுள் புகுந்து புகுந்து துளைத்துத் துளைத்துத் தேடியது போலும் என்ற முடிவுக்கு வருகிருள். இந்தக் கருத்தை வெளியிடும் கவிதை வருமாறு:

''வெள்ளெருக்கஞ் சடைமுடியான்
வெற்பெடுத்த திருமேனி
மேலும் கீழும்,
எள்ளிருக்கும் இடமின்றி
உயிரிருக்கும் இடம் நாடி
இழைத்த வாருே,
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல்
சானகியை மனச் சிறையில்
கரந்த காதல்,
உள்ளிருக்கும் எனக் கருதி,
உடல் புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி!''

இந்தப் பாடல், ஆரண்ய காண்டத்தில் இராவணனுல் அவனுடைய மனச்சிறையில் அடைக்கப்பட்ட சீதைக்கு, விடுதலை தேடித் தருகிறது.

வான்மீகியிலே இராம-இலக்குமணரைப் பிரிந்து வனத்தில் தனித்திருந்த சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன், அந்தக் கற்பரசியைத் தன் கரங்களால் பற்றியிழுத்துத் தன் தொடை மீது அமர்த்தித் தேரில் ஏற்றிக் கொண்டு செல்லுகின்ருன்.

இராவணன் தொட்டுத் தூக்கிச் செல்லும் நிலையில், சீதையை அறிமுகப்படுத்தக் கம்பர் துணியவில்லை. அவள் இருந்த பர்ணசாலையோடு தூக்கிச் சென்றதாகக் கூறுகின்ருர். இதனை அறிவிக்கும் செய்யுள்கள் வருமாறு:

ஆண்டு, ஆயிடை, தீயவன் ஆயிழையைத்
தீண்டான், அயன்முன் உரை சிந்தை செயா;
தூண்தான் எனல்ஆம் உயர் தோள் வலியால்,
கீண்டான் நிலம்; யோசனை கீழ்ப்புடையே!

கொண்டான் உயர் தேர்மிசை; கோல் வளையாள்
கண்டாள்; தனது ஆருயிர் கண்டிலளால்;
மண்தான் உறும் மின்னின் மயங்கினளால்;
விண்தான் வழியா எழுவான் விரைவான்

பொதுவாக வான்மீகியிலும் சரி, கம்பனிலும் சரி; அரக்கர் என்போர் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாகவே காட்டப்படுகின்றனர். ''அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்'' என்பதுபோல, வான்மீகி ராமாயணத்தில் வரும் அரக்கர்களைவிட, கம்பராமாயணத்திலே வரும் அரக்கர்கள் கொஞ்சம் நாகரிகமுடையவர்கள் எனலாம். ஆனுல், பெண் கற்பைப் பொறுத்தவரையில் அரக்கருக்கும் மானிடருக்கும் வேற்றுமையில்லாத நிலையைக் கம்பர் காட்டுகின்ருர். கற்பிலே இராமனுடைய சீதைக்கு நிகராக இராவணனுடைய மண்டோதரியைக் காட்டுகின்ருர்.

நல்ல நடுநிசியில் இலங்கையினுள் புகுந்து, வீதி வீதியாக மாளிகை மாளிகையாகக் கண்ணோட்டம் செலுத்தி, அனுமன் சீதையைத் தேடுகிறான். அப்போது இராவணனுடைய மாளிகையிலே, அவனருகில் படுத்திருக்கும் மண்டோதரியைக் கண்டு, சீதையோ என நினைத்து விடுகிறான். நினைத்ததும், கொதிக்கிறது அவன் உள்ளம். இதனை எப்படிப் போய் இராமனிடம் சொல்வது என்று ஏங்குகின்றான். அதைவிட, இலங்கையையும் அரக்கர் குலத்தையும் சீதையையும் அடியோடு அழித்துவிட்டு, தானும் தற்கொலை செய்துகொண்டு மாண்டு விடுவதென்று நினைக்கிறான் ஒருகணம், இதனை, கம்பர் செய்யுட்களால் அறிவோம்:

இ[illegible] நன்மையின், எரி மணி விளக்கங்கள்
எழில் கெடப் பொலிகின்ற
தன்னது இன்ஒளி தழைப்புறத் துயில்வுறு
தையலை, தகைவு இல்லான்,
'அன்னள் ஆகிய சானகி இவள்' என
அயிர்த்து, அகத்து எழு வெந் தீ,
துன்னும் ஆர் உயிர் உடலொடு சுடுவது ஓர்
துயர் உழந்து, இவை சொன்னான்;

எற்பு வான் தொடர் யாக்கையால் பெறும் பயன்
இழந்தனென்; இது நிற்க;
அற்பு வான் தளை இற் பிறப்பு அதனொடும்
இகந்து தன் அருந் தெய்வக்
கற்பு நீங்கிய கனங் குழை இவள் எனின்,
காகுத்தன் புகழோடும்
பொற்பும் யானும், இவ் இலங்கையும் அரக்கரும்,
பொன்றுதும் இன்று' என்றான்.

சற்றுத் தெளிவடைந்து, இராவணனின் அருகில் இருப்பவள் சீதை அல்லள்; அவன் மனைவி மண்டோதரிதான் என்று உணருகிறான். இந்த இடத்திலே அரக்கியான மண்டோதரியையும், கற்பின் கனலியாகவே காட்டுகின்ற கம்பரின் பண்பாட்டினை என்னென்பது!

அரக்கர் இனத்து மண்டோதரியை மட்டுமல்லாது, குரக்கர் இனத்துத் தாரையையும் கற்புடையவளாகக் காட்டுவார் கம்பர்! வான்மீகியிலே, வாலி மாண்ட பின்னர் அவன் மனைவியான தாரை, தன் மைத்துனனான சுக்கிரீவனுக்கு வாழ்க்கைப்பட்டு விடுகிறாள். இது 'தமையனின் மனைவி தாய்க்குச் சமம்' என்று கருதும் தமிழர் பண்பாட்டிற்குப் பொருந்தாததாகும். குரங்கினத்தைச் சார்ந்த பெண்களுக்குக் கற்பு நெறி தேவையற்றதென்று வான்மீகி கருதியிருக்கலாம். ஆனால் கம்பர் அப்படிக் கருதவில்லை. தமிழினத்துப் பெண்களின் கற்புக்குக் காப்புதேடும் பொருட்டு, கிஷ்கிந்தை மன்னனின் மனைவியான தாரையையும் கற்பு நெறியில் நிறுத்திக் காட்டுகின்றார். இராமாயணத்தில் வரும் ஆண் பாத்திரங்களையும் கற்பு நெறியில் நிறுத்திக் காட்ட முயலுகின்றார். பிறர் மனை நயவாத பேராண்மையை வலியுறுத்திய திருவள்ளுவரின் வாரிசாக வந்தவரல்லவா, கம்பர்!

—(தொடரும்)

மாயூரம்-குத்தாலம் அருகிலுள்ள பாபநாசம் அருள்மிகு இராமலிங்கேசுவரசுவாமி கோயிலில் நிகழ்ந்த 108 சிவலிங்க திருக்குட நன்னீராட்டு விழாவில், "ஓங்கு சைவப் பொருட் சமய நெறிதான்பெற்ற புண்ணியக்கண் இரண்டு" என நினைவுகூறும்படி, அப்பரும் சம்பந்தரும் போல திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் சீலத்திரு அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களும், திருப்பனந்தாள் காசிமடத்தின் தலைவர் வித்துவான் சீலத்திரு முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல் (21-4-78).



அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில்

மலைக்கோட்டை

திருச்சிராப்பள்ளி-2.

''விநாயகனே விண்ணிற்கும், மண்ணிற்கும்
நாதனுமாம் தன்மையினான்''

என்பதை நிரூபிக்கும் வகையில் விண்ணிற்கு அருள்மிகு உச்சி விநாயகராகவும், மண்ணிற்கு அடிவாரத்தில் அருள்மிகு மாணிக்கவிநாயகராகவும் எங்கும் நிறைந்தவராய், தானே குன்றாகத் தோன்றி உலகம் உய்ய இத்திருச்சி நகரின் நடுவே சுமார் 273 அடி உயரமுள்ள குன்றில் இவ்வாலயம் அமையப்பெற்று உள்ளது. குன்றின் வடபுறத் தோற்றம் ஒரு விநாயகர் போலும், தென்புறத் தோற்றம் ஒரு நந்தி போலும், மேல்புறத் தோற்றம் ஒரு யானை படுத்திருப்பது போலும் காட்சியளிப்பது குறிப்பிடத் தக்கது.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், ஒரு செட்டிப் பெண் பிரசவ காலத்தில் தாயை நினைத்து வருந்தும்போது தானே தாயாக வந்து மருத்துவப் பணியைச் செய்து அருளினார். இதனால் அநேக மக்கள், சுகமகப் பேறு வேண்டிக் காணிக்கைப் பொருள்களைப் பெருமளவில் செலுத்தி இறைவன் அருளுக்குப் பாத்திரமாகி வருகிறார்கள். வேண்டுவோர்க்கு வேண்டுவன யாவற்றையும் அருள் பாலிக்கும் அருள்மிகு மாணிக்கவிநாயகருக்கும், மலைஉச்சிப் பிள்ளையாருக்கும் பெருமளவில் காணிக்கை செலுத்தி மனச்சாந்தி அடைகிறார்கள். இம்மலையின் மேலிருந்து நாம் காணும் இயற்கை எழிலும், நகரப் பொலிவும் எல்லோருடைய மனத்தையும் கவர்கின்றன.

இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், தாயுமான அடிகள் என்ற சமயக் குரவர்களால் பாடல் பெற்றதாகும். கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திர பல்லவன் குடைவித்த குகைக் கோயில்கள் நம் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும். கி.பி. 9, 13, 15, 16ஆம் நூற்றாண்டுகளில் முறையே சோழர், பாண்டியர், விஜயநகரப் பேரரசு, குறுநில நாயக்க மன்னர்களால் அமைக்கப் பெற்ற சுற்றமைப்பும், திருப்பணியும், பராமரிப்பும் போற்றத் தக்கதாகும்.

அருள்மிகு தாயுமான இறைவன், மட்டுவார் குழலம்மை, விநாயகர் ஆகிய மூர்த்திகளுக்கு உஷத் கால பூசை நிரந்தரத் திட்டமாகப் பிரமாதீச ஆண்டு தைத் திங்கள் முதல் நாள் முதல் (14-1-1974 முதல்) நடைபெற்று வருவதற்கு ஏற்படும் செலவை ஈடுசெய்யச் சிவநேசச் செல்வர்களிடமிருந்து ரூ. 303க்குக் குறைவின்றியும், குறைந்த அளவு நன்கொடையாக ரூ. 101 வீதம் செலுத்தியும், இறைவன் அருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம். நன்கொடைகளை ''செயல் அலுவலர், அருள்மிகு தாயுமான சுவாமி ஆலயம், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-2'' என்ற முகவரிக்கு மணியார்டர் மூலமோ அல்லது நேரிலோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

இத்திருக்கோயிலில், பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மகாலெட்சுமி ஸ்ரீசூக்த ஹோமமும், பிரதி மாதம் சதுர்த்திதோறும் உச்சி விநாயகருக்குக் கணபதி ஹோமமும், அஷ்டமி தோறும் பைரவருக்கு அபிஷேக ஆராதனையும் ஏற்பாடு செய்து நடந்து வருகிறது. அதற்கு முறையே ரூ. 56, ரூ. 50, ரூ. 24.15 செலவு ஆகும். அன்பர்கள் மேற்கண்டவாறு தொகை செலுத்தி மேற்படி பூசையில் பங்கு கொண்டு பயனடைய வேண்டுகிறோம்.

இத்தலத்தை நாலாப் பக்கத்திலிருந்தும் புகைவண்டி மூலமும், பேருந்து மூலமும் வந்தடைய வசதிகள் உண்டு. வழிபாட்டிற்கு வருக! வருக! எனச் சிவநேசச் செல்வர்களை அழைக்கிறோம்.

எஸ். மகாலிங்கம், பி.எஸ்ஸி.,
செயல் அலுவலர் மற்றும் தக்கார்.

சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம்

ஐந்தாம் சூத்திரம்

[ந. ரா. முருகவேள், M A., M.O.L.]

(முற்றொடர்ச்சி)

''விளம்பிய உள்ளத்து, மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்து அறியா; ஆங்குஅவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்,
காந்தம் கண்ட ப்சாசத்து அவையே!''

மேலை நூற்பாக்களிற் கூறிப் போந்த உயிரினல், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளும் பிறவும், தத்தம் நுகர் பொருள்களை 'இஃது இன்னது' என்று அள விட்டு அறியும்; அறிந்தும், அங்ஙனம் அறிந்த தம்மையும், தம்மை ஊர்ந்து நின்று செலுத்தும் உயிரையும், அப்பொறி புலன் கரணங்கள் அறியமாட்டா. அதுபோலவே உயிர்களும் தமது அறிவிற்குத் துணையாகிய முதல்வனது சிற்சத்தியாகிய திருவருளால் இருவகை ஐந் தவத்தையினின்று வினைப்பயன்களை அறிந்து நுகரும்; நுகர்ந்தும், அங்ஙனம் அறிந்து நுகரும் தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் முதல் வனது திருவருளையும் அறியமாட்டா. காந் தத்தின் முன்னிலையில் இரும்பு ஈர்ப்புண்ணு மாறுபோல, முதல்வனின் முன்னிலையில் உயிர்கள் வினைப்பயன்களை உணர்ந்து நுகர்ந்து வரும். முதல்வன் கருவிகளானன்றிக் கருத் தால் மட்டுமே உயிர்களைச் செலுத்தி நிற்பா ஞதலின், அதுபற்றி முதல்வன் திரிபுடையஞ தல் இல்லை என்பது, இச்சூத்திரத்தின் உட் பொருளாகும்.

மேலை நான்காம் சூத்திரத்துள், ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி அமைச்சரும் அரசனும்போல நின்று ஐந்தவத்தைகளை எய்தும் என்பது விளக்கப்பட்டது. எனவே, ஐந்தவத்தைகளை எய்துங்கால் ஆன்மாவிற்கு அந்தக்கரணங்களின் உதவியே சாலும், இறை வனின் துணை வேண்டுவதன்று போலும் என ஓர் ஐயறவு நிகழ்தல்கூடும். அதனை நீக்கி, இறைவனது உதவியின் இன்றியமையாமை யினை நுதலுதல், இச்சூத்திரத்தின் நோக்க மாகும். நிறுத்தமுறையால் இச்சூத்திரம் பாச இலக்கணம் கூறுகின்றது.

ஐம்பொறிகள் ஆன்மாவின் துணையினு லேயே பொருள்களை உணர்ந்து வருகின்றன. ஆனல், சாங்கியர்கள், ஆன்மாவானது தாமரை இலையின் நீர்போற் பற்றற்று நிற்ப, ஆன்மாவின் முன்னிலையிற் புத்தி தத்துவமே ஐம்பொறிகளின் வழியாகப் பொருள்களை உணர்ந்து நுகர்ந்துவரும் என்னும் கருத்து டையராதலின், ஆன்மா அந்தக்கரணங் களோடு கூடி அவத்தைப்படும் என்பது எவ் வாறு பொருந்தும்? என வினவுவர். ஆன்மா வானது ஐம்பொறிகளோடும் ஏனைக்கருவி களோடும் ஒற்றுமைப்பட்டு நின்றுலன்றி, அப் பொறி புலன் கரணங்கள் எல்லாம் ஒரு பொருளையும் அறிந்து நுகரும் வன்மையுடை யனவல்ல. அரசன் அத்தாணி மண்டபத்தில் வைகித் தன் கீழ்ப் பணிசெய்வோரை அவர வர்க்குரிய பணிகளிற் செலுத்தி ஆளுமாறு போல, ஆன்மாவானது ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய பொருள்களிற் செலுத்தி ஆட்சி செய்து, புருவ நடுவின்கண் நிற்கும். அரசனுல் ஏவப்பட்டோர் ஏவிய தொழிலை மட்டுமேயன்றி அதனினுங்குச் செல்லமாட் டாமைபோல, ஐம்பொறிகளும் ஏனைப் பிற கருவிகளும் உயிரானது தம்மைச் செலுத்தத் தமக்குப் புலனுகும் பொருள்களையறிந்து நுகர்வ தோடமைவதேயன்றி, அதனினுங்குச் சென்று தம்மை உடன் நின்று செலுத்தும் உயிரை அறியமாட்டா. ஆயினும், ஒரு தொழில் செய் தற்கண் அரசனும் அமைச்சர் முதலாயினுரும் தம்முள் இன்றியமையாதவாறு போல, ஒரு பொருளை உணர்ந்து நுகர்தற்கண் உயிரும் பொறிகளும் தம்முள் இன்றியமையாதன வாகும். ஆதலால், உயிரானது தாமரை இலையின் நீர்போற் பற்றற்று நிற்பப் புத்தி தத்துவமே ஐம்பொறி வழியாகப் பொருள் களையுணரும் என்றல் அமையாது. புத்தி தத்து வமும் ஒருவகைக் கருவியே யாகலானும், கருவிகளின் தொழிற்பாடு ஆன்மாவின் அறி விச்சை தொழில்களுக்கு ஏற்பவே நிகழுமாத லானும், பொருள்களைப் பொறிகளுக்கு அறி வித்துத் தானும் உடனுய் நின்று அறிவது உயிரே என உணர்க.

ஐம்பொறியை ஆண்டு, அங்கு அரசாய் உளம்நிற்ப,
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்!—ஐம்பொறி யிற்
காணுதேற், காணுது காணும் உளம்; காணுதேல்
காணுகண்; கேளா செவி!

இனி, புத்தி தத்துவமும் ஐம்பொறி முதலிய கருவிகளும் அறிவில்லாத சடமாகலின், அவற்றிற்குப் பொருள்களை உணர்ந்து நுகர்

தற்கண் உயிரின்துணை இன்றியமையாது என்ப தமையும். ஆனல் உயிரானது அறிவுடைய சித்துப் பொருளாதலின், அதற்கு வினைப்பயன் களை நுகர்தற்கண் முதல்வனின் துணை வேண் டப்படுவது எற்றுற்கு? என ஈசுர அவி காரவாதிகள் முதலியோர் வினவுவர். ஐம் பொறிகளுக்கு ஆன்மாவின் துணை இன்றியமை யாதவாறு போலவே, உயிர்கட்கும் முதல்வ னின் துணை இன்றியமையாது ஒருதலையாக வேண்டப்படும். ஐம்பொறிகள் சடமாதலான் 'ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா' என்றது பொருந்தும்; உயிரானது அறிவுடைய சேதன மாகலின், விளக்கோடு கூடிய கண்போலப் பொறிகளோடு கூடிய துணையால் மட்டுமே, உடன் நின்று உணர்த்தும் முதல்வனை வேண்டாமல், பொருள்களைத் தாமே அறிந்து நுகரும் என்றல் கூடாதோ? எனின்-ஐம்பொறிகளும் ஆன்மா வும் முறையே அறிவின்மையும் அறிவுடைமை யும் ஆகிய வேறுபாடு பற்றித் தம்முள் ஒவ்வா வாயினும், தம்மையும் தமது முதலையும் உணர மாட்டாமைக்கண், ஐம்பொறிகளும் ஆன்மா வும் ஒப்புமையுடையனவேயாம். இவ்வுண்மை யினையே, ''இவ்வான்மாத் தன்னுலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை உண ராது நிற்றலான்'' என ஆசிரியர் விளக்குகின் ருர். ஆதலால், வினைப் பயன்களை நுகர்தற் கண் ஆன்மாவுக்கு முதல்வனின் துணை இன்றி யமையாததாதல் பெறப்படும். அற்றேல், உயிர்கட்கு முதல்வனின் துணை வேண்டப்படு மாயின், அம்முதல்வனுக்கும் வேருெரு முதல் வனின் துணை வேண்டப்படுமன்ருே எனின், தமக்கொரு முதற்பொருளை யுடையனவற் றிற்கே அம்முதற் பொருளின் துணை வேண்டுவ தன்றித் 'தம்முணர்வின்தமி' எனவும், 'தமது முதல்' எனவும் போற்றப்பெறும் இறைவ னுக்கு அந்நியதி இல்லை என்றுணர்க.

அற்றேல் அஃதொக்கும்; 'ஐம்பொறிகள் ஆன்மாவால் உணர்தல்போல, ஆன்மாத் தனது முதலாலே உணரும்' என உரைப்பின், ஐம்பொறிகட்கு வரும் பயன் அவற்றினுல் ஒற்றித் துணரும் உயிர்க்காதல்போல, உயிர்க்கு வரும் இன்ப துன்பப் பயனும் அதனேடு ஒற்றித் துக்காணும் முதல்வனுக்காதல் வேண்டு மன்ருே? எனச் சிலர் வினு நிகழ்த்துதல் கூடும். உயிரானது தம்மை உடன்நின்று செலுத்துத லால், ஐம்பொறிகள் தமக்கென ஒரு காரணமு மின்றி உயிரின் பொருட்டே பொருள்களை அறிந்து வருகின்றமையின், அவற்றின் பயன் ஐம்பொறிகளுக்கின்றி உயிரினையே சார்கின்றது. ஆனல் முதல்வனே உயிர்களுக்குக் காட்டாக நின்று, அவ்வுயிர்கள் செய்த வினைக்கீடாகப் பொருள்களை அறிவித்து நிற்பன். ஆதலால், உயிரின் இன்பதுன்பப் பயன்கள் ஒருபோதும் இறைவனை எய்தமாட்டா. 'யாவையும் சூனி யம் சத்தெதிர்' என்றபடி, சத்தின் முன்னர் அசத்துச் சூனியமாய் முடியுமாதலின், உயிர் களுக்குப் பொருள்களைக் காட்டுந் துணையாக உடன் நிற்பினும், சத்தாகிய முதல்வனை அசத் தாகிய இன்பதுன்பப் பயன்கள் சார்வதில்லை எனத் தெளிக!

'மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டித்தது'
என்னும் மறையின் இயல்மறந்தாய்!—சொன்ன
சிவன்
கண்ணு, உளம், வினையாற் கண்டறிந்து நிற்கும்காண்!
எண்ணுன்! சிவன் அசத்தை இன்று.

இவ்வெண்பாவின்கண், சிவன் என்னும் சொல், 'மன்னுசிவன்' என்புழிப் பேரின்பத்துக்குக் காரணன் என்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற் குரிய இயைபுணர நின்றது; 'சொன்ன சிவன்' என்புழி **முற்றுணர்வினன்** என்னும் பொருட் டாய் உயிர்களுக்குக் காட்டுந் துணையாதற்குரிய இயைபுணர நின்றது; 'எண்ணுன் சிவன்' என் புழித் **தூய தன்மையன்** என்னும் பொருட்டாய் அசத்தை எண்ணுமைக்குரிய இயைபுணர நின் றது. எனவே, காந்தத்தின் முன்னிலையில் இரும்பு அசைந்து தொழிற்படுமாறுபோலச் சிவத்தின் முன்னர் உலகம் தொழிற்படும் என் றும்: சிவமானது பொருள்களைக் காட்டும் துணையாக நிற்ப, உயிர்கள் தமது வினைக் கீடாகப் பொருள்களை நுகர்ந்து இன்ப துன்பப் பயன்களை எய்தும் என்றும்; உயிர்களோடு உடன் விரவி நின்று அவற்றிற்குப் பொருள் களை உணர்த்தி நுகர்வித்து வருதல்பற்றிச் சத்தாகிய சிவத்தினை, அசத்தாகிய இன்ப துன்பப் பயன்கள் எய்துவன அல்ல என்றும் கடைப்பிடித்துக் கொள்க.

அற்றேல், சிவம் உணர்த்துதலால் உயிர்கள் உணரும் என்றுரைப்பின், உயிர்கள் சிவத்தின் வேறு நின்று உணருமோ? ஒன்ருய் நின்று உணருமோ? எனின்—

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி, விளங்காது,
வெய்யோனை ஆகாத மீன்போல,—மெய்யவனிற்
கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புல
கண்டு, உடனுய் மன்னுதலைக் காண்! [னைக்

என ஆசிரியர் அதற்கு விடைகூறி விளக்கி இருத்தல் காணலாம். விண்மீன்கள் ஞாயிற்றின் வேறுமாகாது ஒன்றுமாகாது உடனுய் நின்று ஒளியுடையவாமாறுபோல, உயிர்களும் சிவத் தின் வேருகவும் ஒன்ருகவும் நில்லாது, அவ் விரண்டற்கும் பொதுவாய் அடங்கிச் சிவத் தோடு உடனுய் நின்று, பொருள்களை உணர்ந்து நுகர்ந்துவரும் என்பது, இப்பாடலின் பொரு ளாகும்.

இனி, அங்ஙனம் உயிர்கள் சிவத்தோடு உடனுய் நின்று சிவமுணர்த்த உணர்ந்துவரும் எனின்,—உயிர்கட்குப் பலவேறு வகைப்பட்ட உணர்வுகள் நிகழ்தல் எற்றுக்கு? சிவமே பல வேறு வகைப்பட்ட உணர்வுகளை உயிர்களின் பால் நிகழ்த்து மெனின்,—சிவம் 'நிர்விகாரி' என்னும் சுருதியோடு முரணி விகாரியாவ னன்ருே? எனச் சிலர் தடை எழுப்புவர்.

அருள்உண்டாம் ஈசற்கு, அதுசத்தி அன்றே!
அருளும் அவன்அன்றி இல்லை!—அருளின்று
அவன்அன்றே இல்லை! அருட்கண்ணுர் கண்ணுக்கு,
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து!

உயிர்கட்குப் பசுத் தன்மையை நீக்கிச் சிவத் தன்மையை விளக்குதற்கண் உள்ளதாகிய இரக்கம், இறைவனுக்குத் தொன்மையே உள்ளது. அவ்விரக்கம் அல்லது அருளானது இறைவனின் வேறு பொருள் ஆகாமல், அவனிற் பிரிவிலதாம் இயல்பாய ஆற்றலே யாம். அருளும் சிவமும் குணமும் குணியு மாகலின், அருள் இன்றிச் சிவம் இல்லை; சிவம் இன்றி அருள் இல்லை. ஞாயிறு தன் ஒளியிடன் ஒன்றுதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியமாய் இயைந்து நிற்குமாறுபோல, சிவம் அருளோடு தாதான்மியமாய் இயைந்து நிற்கும். ஆதலால், தன் வய முடைத்தாகிய சிவ முதற்பொருள் விகாரமின்றி நின்ற தனது 'சத்தி சங்கற்பமாத்திரத்தால்' வினைக் கீடாக உயிர்களுக்குப் பொருள்களை உணர்த்தி நிற்கும் என்று தெளிந்து கொள்க.

''இறைவன்தன் சந்நி திக்கண்,
உலகின்தன் சேட்டை என்னும்
மறைகளும் மறந்தாய்! மாயை
மருவிடான் சிவன்! அவன்கண்
உறைதராது அசேத னத்தால்!
உருவுடை உயிர்கட் கெல்லாம்,
நிறைபரன் சந்நி திக்கண்
நீடுணர்வு உதிக்கும் அன்றே! (1)

''அருளது சத்தி யாகும்
அரன் தனக்கு! அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை! அந்தச்
சிவம்இன்றிச் சத்தி இல்லை!
மருளினை அருளால் வாட்டி
மன்னுயிர்க்கு அளிப்பன்! கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும்
இரவியைப் போல, ஈசன்!'' (2)

—தொடரும்.

சிவஞானபோதப் பேருரை, வேனில் வகுப்பு

மதுரைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், பல்கலைக் கழகங்களின் நிதி உதவிக் குழுவின் ஆதரவில், 3-5-78 முதல் 23-5-78 வரையில், சிவஞானபோதப் பேருரை வேனில் வகுப்பு, மிகவும் சிறப்புற நடைபெற்றது. மதுரைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையும், தத்துவத் துறையும் இணைந்து நடத்திய இவ்வேனில் வகுப்பில், பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்கள் நாற்பதின்மருக்கு மேற்பட்டோர், மாணவர்களாக வந்திருந்து கலந்து கொண்டு பயன்பெற்றனர். அவர்களுக்கெல்லாம் உணவு-உறையுள் முதலிய வசதிகள் பலவும், செவ்விதில் செய்தளிக்கப் பெற்றிருந்தன.

இவ் வேனில் வகுப்பின் தொடக்க விழாவுக்கு, 3-5-78 அன்று காலை 10 மணியளவில், மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், டாக்டர் திரு. வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராசன், B.Sc.,B.L., மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவர் 'அறநெறி அண்ணல்' திரு. கி. பழநியப்பபிள்ளை, தமிழ்த்துறைத் தலைவர்கள் திரு. டாக்டர் முத்துசண்முகம், M.A., Ph. D., டாக்டர் தமிழண்ணல், M.A.,Ph.D. ஆகியோர், சிறப்புரையும் வாழ்த்துரையும் வழங்கினர்.

சிவஞானபோதப் பேருரை பற்றிய இவ்வேனில் வகுப்பில், மதுரைப் பல்கலைக் கழகத்துச் சைவ சித்தாந்த தத்துவத்துறையின் தனி அலுவலர்-'சித்தாந்தக் கலைச் செல்வர்' திரு. க. வச்சிரவேல் முதலியார், BA., L.T. அவர்களும்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்களும்; தமிழக அரசின் அறநிலையத்துறையைச் சேர்ந்த ''திருக்கோயில்'' திங்களிதழ் ஆசிரியர் திரு. புலவர். ந. ரா. முருகவேள், M.A.,M.O.L. அவர்களும்; சைவசித்தாந்த தத்துவத்துறை விரிவுரையாளர் திரு. ச. கங்காதரன் M.A.,M.Litt. அவர்களும்; இலங்கை யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பேராசிரியர் திரு வி. இராமகிருஷ்ணன், M.A., Ph.D. அவர்களும் முறையே கலந்துகொண்டு, சிவஞானபோதப் பேருரையின் பல்வேறு சூத்திரங்களும் கூறுகளும் பற்றி, நுண் பொருள் விரிவுரைகள் ஆற்றி, விளக்கங்கள் நிகழ்த்தி உதவினர்.

சைவசித்தாந்தத் தத்துவக்கொள்கை குறித்து, பல்கலைக் கழகத் தரத்தில், மிகப்பெரிய அளவிலும், பயன்மிக்க சிறப்புநிலையிலும், முதன்முதலாக நிகழ்ந்தது, இவ் வேனில்வகுப்பே யாகும் என்று, பலரும் பாராட்டி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

—ஆசிரியர்.

இரங்கூன் காலாபஸ்த்தி

அருள்மிகு சுந்தரவிநாயகர்

ஆலயக் கும்பாபிஷேகம்



இரங்கூனில் சைவத் தமிழ்ப் பெருமக்கள் மிகுதியாக வாழ்ந்து வருகின்ற காலாபஸ்த்தியில், சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பெற்ற அருள்மிகு சுந்தரவிநாயகர் ஆலயத்தில் 12—5—78 வெள்ளிக்கிழமை காலையில், காஞ்சி காமகோடி பீடம், ஜெகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியோடு, மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பான முறையில், சைவ ஆகம முறைப்படி நடைபெற்றது. பர்மாவின் பல பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து கண்டு களித்தார்கள்.

ஆலய அறங்காவலர்கள், வந்திருந்த பெருமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்றுப் பகல் உணவு வழங்கினார்கள். இரவு சுவாமி புறப்பாடு, பர்மிய-இந்திய இசை வாத்தியங்களுடன், மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப் பெற்று, இரதத்தில் பவனி வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

சுந்தர விநாயகர் ஆலய பஜனைக் குழுவில், தாய்மார்களும் கலந்து கொண்டு, தேவார திருவாசகப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்கள். 1942ல் இரண்டாவது உலக யுத்தத்தின்போது, தற்போது தமிழகத்திலிருக்கும் மேற்படி கோவில் ஆயுட்கால தர்மகர்த்தாவான திரு கு. முருகேசமுதலியார் அவர்கள் முயற்சியில், கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பெற்றது. அண்மையில் திரு முதலியார் அவர்கள், இரண்டு முறை இரங்கூன் வந்து கோயில் திருப்பணிக் காரியங்களைக் கவனித்து உதவிகள் புரிந்தமையையும், தற்போது சீரோடும் சிறப்போடும் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்த அறங்காவலர்களையும், நன்கொடைகள் வழங்கியவர்களையும், பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டினர் (12—5—78).

திருமூலர் திருமந்திரத்தின் சிறப்பு

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியில், அளப்பருஞ் சிறப்புடைய நூல்கள் மிகப் பல உள்ளன. அவற்றுள், திருமூலர் என்னும் தெய்வப் பெருஞ்சான்றோர் இயற்றிய திருமந்திரம் என்னும் புனித நூல், தனிப்பெரும் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

தமிழ் நூல்களின் வரிசையில், இலக்கணத் துறையில் தொல்காப்பியமும், நீதி நூற் பிரிவில் திருக்குறளும், பக்திநெறிப் பனுவல்களில் திருவாசகமும், செந்தமிழ்க் காப்பியங்களிற் சிலப்பதிகாரமும், கவிதை நயச்சுவையிற் கம்பராமாயணமும், தத்துவ நுண்பொருட் செறிவில் சிவஞான போதமும், சமய குரவர் வரலாறு விளக்கும் வாய்மையிற் பெரியபுராணமும் போல,யோக ஞான அனுபவ விளக்கத் துறையிற் பெரிதும் சிறப்புற்று விளங்குவது, திருமூலர் இயற்றியருளிய திருமந்திரம் ஆகும்.

திருமந்திரம் :

மக்கள் வாழ்வின் இம்மை மறுமை நலங்களுக்கு உரிய மறை பொருள் நுட்பங்கள் அனைத்தையும் ஒருங்கெடுத்துத் தெளிவித்து உரைப்பதில், திருமந்திரம் போல்வதொரு விழுமிய முழு நூலை, உலகின்கண் வேறு எந்த மொழியிலும் காண்டல் அரிது. முடிந்த முடிபான சிறந்த மந்திரங்கள், அவற்றை உருவேற்றும் முறைகள், அவற்றை அமைக்கும் சக்கரங்கள், அம் மந்திரங்களுக்குரிய மாபெரும் தெய்வங்கள், அத்தெய்வங்கள் அனைத்தும் முழுமுதற் கடவுளான சிவபரம் பொருளின் ஆணைவழி நின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகள், சரியை கிரியை யோகம் ஞானம் முதலிய தவ ஒழுக்கத்தின் பாகுபாடுகள், அவற்றை மேற்கொண்டு ஒழுகும் முறைமைகள், அழிவிலாப் பேரின்பம் ஆகிய வீடுபேற்றியல் நிலைகள், ஆகிய பலவற்றையும், முற்ற எடுத்து முடியக் கூறித் தெற்றென விளக்கும் முழு முதல் நூல், திருமூலர் அருளிய திருமந்திரமேயாகும் எனத் துணிந்து கூறலாம்.

அதனாலேயே, நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாக வந்த மாபெரும் சான்றோர்கள் பலரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப் பெரிதும் போற்றிப் பயின்று, பயன் கொண்டுள்ளனர்.

இராமலிங்கர் :

அண்மைக் காலத்துச் சான்றோர் ஆகிய வடலூர் இராமலிங்க அடிகளை அறியாதவர், தமிழ்நாட்டில் எவரும் இரார். அவருக்குத் திருமந்திரத்தின்பால் இருந்த ஈடுபாடு எல்லையற்றது. ''தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்'' என்பது, இராலிங்க அடிகளார் திருவுள்ளம். இராமலிங்கர் ஒரு பெருஞ்சித்த புருடர் என விளங்கியவர். 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி, சித்தபுருடராகத் திகழ்ந்திருந்த இராமலிங்கர்தாம், 'கயிலாயத் தொரு சித்தர்' எனப்பெறும் திருமூலரின் அருமை பெருமைகளைச் செவ்விதின் அறிந்திருத்தல் இயலும். ஆதலின் அவர், திருமந்திரத் திருமுறையின் பெருமையை யுணர்ந்து பெரிதும் போற்றிப் பயன்கொண்டார் எனத் தெரிகின்றது.

''இறைவன் ஒருசமயம் எனக்குத் தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண் குருவடிவாகப் போந்து மெய்ம்மொழிப் பொருளை உபதேசித்தான்; பின்னர் ஒருகால் திருமந்திரத் திருமுறையினால், அம்மெய்ம்மொழிப் பொருள் விளங்கும்படி தெளிவுமிக உணர்த்தியருளினான்; பிறிதொரு சமயம் என் உள்ளத்திலே நிலைபெற்று மெய்ம்மொழிப் பொருளைக் காட்டியருளினான். அவைகள் என் உள்ளத்திலே மருவிப் பொருந்தியுள்ளன. அவற்றையே யான் நம்பியிருக்கின்றேன்; என்னுடைய இந்நிலையை இறைவனின் திருவுள்ளம் நன்கறியும்'' என்கிறார் இராமலிங்கர்.

''திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவளர் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்''

எனவரும் திருவருட்பாப் பாடல் ஒன்றே, இராமலிங்க வள்ளலார்க்குத் திருமந்திரத்தின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை இனிது புலப்படுத்தப் போதியதாகும்.

தாயுமானவர் :

இராமலிங்கர்க்கு முன்பு இருந்த சான்றோர் தாயுமானவர். அவர்தம் சால்புநலம் அளப்பரியது. வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகப் பெருங்குரவர் என விளங்கியவர் தாயுமானவர்! எளிமையும் இனிமையும் தெளிவும் நிறைந்த அவர்தம் பாடல்களைச் சமயவுணர்வுடையோர் அனைவரும் ஆரா அன்பிற் போற்றி மகிழ்வர். அத்தகைய தாயுமானவர் திருமூலரின் யோகஞான நெறிமுறைகளைப் பின்பற்றி உய்ந்து உயர்ந்த சிறப்பினரே யாவர். ''திருமூலரின் மரபில் வந்த மௌன குரு என்பவரே எனக்கு ஞானகுருவாக அமைந்து அருள்புரிந்தார். என்னை உலகாயதம் (நாத்திக வாதம்) ஆகிய புறச் சமய நெறியிற் புகுதாமல் காத்து ஆட்கொண்டார்;

வேதாந்த சித்தாந்த சமரசச் சிவாநுபூதி நெறியில் நிற்கும்படி செய்து வாழ்வித்தார் எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்ருர்.

''தரணிமிசை லோகாயதன் சமயநடை
சாராமல், வேதாந்த சித்தாந்த
சமரசச் சிவாநுபூதி
மன்ன, ஒருசொற் கொண்டு என்னைத்
தடுத்தாண்டு, அன்பின்
வாழ்வித்த ஞானகுருவே!
மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே!
மூலன்மரபில் வரும்மௌன குருவே!''

எனவரும் பாடற் பகுதியால், இவ்வுண்மை செவ்விதிற் புலனுதல் காணலாம்.

இம்மட்டோ; திருமூலரின் சிறப்புக்களை யெல்லாம் நினைத்து வியந்து தாயுமானவர் அவரைச் ''சக்கரவர்த்தி'' என்றும், ''தவராச யோகி'' என்றும் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றுகின்ருர்! அவருடைய அருளைத்தாம் அடையப் பெறும்நாள், எந்நாளோ என்றும் ஏக்கறுகின்ருர்.

''சக்கர வர்த்தி
தவராசயோகி எனும்
மிக்கதிரு மூலன்அருள்
மேவும்நாள் எந்நாளோ?''

என்பது, அவர் பாடியருளிய குருமரபு வணக்கச் செய்யுள்களில் ஒன்று. திருமூலர் திருமந்திரத்தின் சொற்பொருட் சுவைகளிலும், கருத்து நலங்களிலும், தாயுமானவர் பெரிதும் ஆழ்ந்து திளைத்து மகிழ்ந்துள்ளார்.

உரையற்ற தொன்றை உரைசெயும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாணல் ஆகுமோ?
திரையற்ற நீர்போலச் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

எனவரும் திருமந்திரச் செய்யுளின் சிறந்த நுண்பொருளில் திளைத்து வியந்து, பொன் போலப் போற்றிப் பெரிதும் பாராட்டி,

திரையற்ற நீர்போல் தெளியஎனத் தேர்ந்த
உரைபற்றி, உற்றங்கு ஒடுங்கும்நாள் எந்நாளோ?

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருக்கும் அருமைப்பாடு, இங்கு நாம் நன்கினிது சிந்தித்து இன்புறுதற்குரியது.

அருணகிரியார் :

தாயுமானவர்க்குச் சற்று முன்னே வாழ்ந்திருந்த அருளாளர், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர். 'வாக்கிற்கு அருணகிரி' எனத் தமிழ்கூறும் நல்லுலகம் அவரைத் தகவுற மதித்துச் சால்புறப் போற்றி வருகின்றது. அருணகிரியாரைத் தமக்கு ஒரு ஞானத்தந்தை என்றும், அவரைப்போல ஒவ்வொரு சொல்லும் உயரிய பொருளும் அனுபவமும் அமையும்படி உண்மையாகக் கூறியவர்கள் எவரும் இலர் என்றும், தாயுமானவர் கூறுகின்ருர்.

''ஐயா!. . . அருணகிரி அப்பா! உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்?''

என்பது அவர்தம் பாடல். இங்ஙனம் தாயுமானவர் புகழ்ந்து ஏத்தும் அருணகிரியார்க்கும் திருமூலர்பால் மிக்க மதிப்பும் ஈடுபாடும் இருந்ததெனத் தெரிகின்றது. ''நந்தி அருளாலே நாதனும் பேர் பெற்ருேம்'' என்று திருமூலர் பாடியிருப்பதனுல், அருளாளர் சிலருக்கு ''நாதர்'' என்னும் பெயர் அமைவதுண்டு எனத் தெரிகின்றது. அம்முறையில் ''அருணகிரிநாதர்'' எனப் பெயர் அமைந்து வழங்கிவரும் சிறப்பு, இங்குக் கருதத்தகும். திருமூலருக்கும் அருணகிரியாருக்கும் இடையே எத்தனையோ பல சொற்பொருட் கருத்தொப்புமைகள் அமைந்து காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும். இங்குக் குறிப்பிடுதல் சாலும்.

திருமூலர் ஆகிய சிறந்த சிவயோகியார் ஓராண்டுக்கு ஒன்ருக, மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து, திருமந்திரப் பாடல்கள் மூவாயிரத்தினையும் பாடியருளினர் என்பது வரலாறு. இஃது உண்மையா? இவ்வாறு இருத்தலும் இயலுமோ? காலத்தை வெல்ல எவரால் முடியும்? என நம்மில் ஒரு சிலர் ஐயப்படுவதுண்டு. இவ்வையப்பாட்டிற்கு விடையளித்து விளக்கம் தருவதுபோல, அருணகிரிநாதரின் பாடல் ஒன்று காணப்படுகின்றது. ''சிவயோகியர்கள் காலத்தை வென்று நெடுங்காலம் நிலை பெற்றிருப்பார்கள்; அவர்களுக்கு இறப்பு என்பது இல்லை; அவர்கள் ஒருபோதும் மரிக்க மாட்டார்கள். தீவினைகளாகிய கன்மங்களைச் செய்கின்ற நம்மைப்போன்றவர்கள்தான், காலத்தை வெல்லும் வகையறியாமல் மரித்தொழிவார்கள்'' என்பதை அப்பாடல் அறிவுறுத்துகின்றது.

''நீலச் சிகண்டியில்ஏறும்பிரான்
எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்;
குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார்,
சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார்; மரிப்பார்
வெறும் கர்மிகளே''

எனவரும் கந்தரலங்காரப் பாடல், திருமூலரை நினைத்துத்தான் அருணகிரியாரால் பாடப் பெற்றதோ என்று, நாம் நினைத்து மகிழும்படி அமைந்துள்ளது.

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே''

என்பன போன்றுவரும் திருமந்திரப் பாடல்கள், சிவயோகிகள் காலத்தை வென்றிருப்பார் என்னும் செய்திக்குச் சிறந்த சான்று பகருதல் காணலாம்.

''ஒத்துப் புலனுயிர் ஒன்ருய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யர்களே''

எனவரும் திருமந்திரப்பாடற் பகுதியின் பொருளையே தழுவி விளக்கும் முறையில்,

''நின்னை உணர்ந்துணர்ந்து எல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு
என்னை மறந்திருந்தேன்; இறந்தே
விட்டது இவ்வுடம்பே''

என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தின்கண் அருளிச் செய்திருத்தல், அறிந்தின்புறற்பாலது.

''கரும்பும் தேனும் கலந்ததோர் காயத்தின்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே''

என்று, இறையருட் பேற்றால் எய்தும் இன்பச் சுவை நலத்தின் சிறப்பினைத் திருமூலர் விளக்கியருள்கின்றார். இதனைத் தாமும் அனுபவித்து உணர்ந்து உடன்பட்டு வலியுறுத்தி அநுவதித்து மொழிபவர் போல,

''பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை, மெய்யன்பினால்
மெல்ல மெல்ல உள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்;
தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும்
புளித்து அறக் கைத்ததுவே''

என அருணகிரிநாதர் பாடியிருத்தல், அவருக்குத் திருமூலர் திருமந்திரத்தின்பால் அமைந்திருந்த அளப்பரிய பேரார்வத்தினையும் பெருமதிப்பினையும் புலப்படுத்தும்.

சிவநெறிச் சான்றோர் :

இனி சேக்கிழார் பெருமான், நம்பியாண்டார் நம்பிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் சிவநெறிப்பெருஞ் சான்றோர்கள், திருமந்திரத்தைப் போற்றிய திறத்தினைத் தனியே விரித்து உரைக்கவேண்டுவது இல்லை. சேக்கிழார் பெருமான் திருமூலரின் வரலாற்றினைச் சிறப்புறவும் சுவைபெருகவும் பாடியிருப்பதுடன்,

''ஊனுடம்பிற் பிறவிவிடம்
தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானம்முதல் நான்கும்மலர்
நற்றிருமந் திரமாலை''

என்றும், இனிதெடுத்து விளக்கிப் புகழ்ந்து போற்றுகின்றார். நம்பியாண்டார் நம்பிகளோ, தம்முடைய திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலில்,

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை, முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே
பரவிட்டு, என்உச்சி
அடிமன்னவைத்த பிரான்
மூலன் ஆகின்ற அங்கணனே

என்னும் பாடலில், திருமூலரை ''என் உச்சியில் தம்திருவடியை மன்னும்படி வைத்த பிரான், அங்கணன் (அருள் நோக்கம் உடையவன்)'' என்றும்; திருமந்திரத்தை ''முழுத் தமிழின்படி மன்னும் வேதத்தின் சொல்'' என்றும் புகழ்ந்து போற்றுகின்றார்.

நம்பியாண்டார்க்கு முற்பட்ட நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளோ, தாம் ''சகா மார்க்கம்'' என்னும் யோக நெறிக்குரிய தலைவராதலின், அவ்யோக நெறியிற் கைவந்த திருமூலரையே தமக்குரிய குருவும் தலைவருமாகக் குறிப்பிட்டு, ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என அருளிச் செய்தார். ''நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்'' எனத் திருவாய் மலர்ந்திருத்தலின், சுந்தரர் யோகநெறி நின்றவர் என்பது புலனாகும்.

திருநாவுக்கரசர் :

இனி, திருநாவுக்கரசரும் திருமந்திரத்தை ஓதித் தெளிந்து சிறந்தவரே எனக் கூறுதல் பொருந்தும். திருநாவுக்கரசரின் தேவாரத்தில் திருமந்திரத்தை நினைவூட்டும் பகுதிகள் பற்பல காணப்படுகின்றன.

''ஒன்றி யிருந்து நினைமின்கள்;
உந்தமக்கு ஊனம் இல்லை''

''என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே''

''உயிரா வணம்இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி''

என்பனபோல வரும் பாடற் பகுதிகள், திருமந்திரம் விளக்கும் யோகச் செந்நெறியின் இயல்பினையே உட்கிடையாகக் கொண்டு விளங்குகின்றன.

''தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியனே''

எனவரும் திருநாவுக்கரசர் திருக்குறுந் தொகைப் பாடல்,

''தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந் தானே''

எனவரும் திருமந்திரப் பாடலையே பெரிதும் அடியொற்றியமைந்தது போலக் காணப்படுகின்றது.

''வானம் துளங்கில்என்? மண்கம்பம்
ஆகில்என்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறில்என்? தண்கடலும்
மீனம் படில்என்? விரிசுடர்
வீழில்என்? வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன் றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே''

என்னும் திருநாவுக்கரசர் திருவிருத்தம்,

வான்நின் றிடிக்கில்என்? மாகடல் பொங்கில்என்?
கான்நின்ற செந்தீக் கலந்துடன் வேகில்என்?
தான்ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில்என்?
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே

எனவரும் திருமந்திரப் பாடலைப் பெரிதும் நினைவூட்டும் வகையில் அமைந்து விளங்குதல் காணலாம். இவ்வாறே.

எந்தையும் என்னை அறியகி லான்ஆகில்
எந்தையை யானும் அறியகில் லேனே''

என்னும் திருமந்திரப் பாடல் (2428) வரிகளை நினைப்பித்து, அவற்றின் பொருளை விரித்துரைத்து விளக்குதல் போல,

''என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்அடி யான்என் றறிதலும்
தன்னை நானும் பிரான்என் றறிந்தேனே''

எனவரும் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பாடல் அமைந்திருக்குந்தன்மை, நாம் சிந்தித்து மகிழும் நலமுடையதாகும்.

திருஞானசம்பந்தர் :

திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்கு வந்து இங்குள்ள மாசிலாமணி ஈசரையும், ஒப்பிலாமுலை அம்மையையும் வழிபட்டபோது, இங்கே தமிழ்மணம் கமழ்தலை யுணர்ந்து, பலிபீடத்தின் கீழ் இருந்து திருமந்திர ஏடுகளை ஆராய்ந்து வெளிப்படுத்தியருளினர் என்பது வழி வழிச் செய்தி.

''அப்பரிசு எண்பத்துநான்குநூ றுயிரம்
மெய்ப்பரிசு எய்தி விருந்துயிராய் நிற்கும்''

எனவரும் திருமந்திரப் பாடலின் கருத்து.

''உரைசேரும் எண்பத்து நான்குநூறு
ஆயிர மாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்''

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலிலும் சிறப்புற மருவி வந்துள்ளது. மேலும் திருஞானசம்பந்தர்க்கு ''ஆணை நமது என்ன வல்லான்'' என்ற ஒரு சிறப்புப் பெயர் உண்டு.

''நனிபள்ளி உள்க வினைகெடுதல்
ஆணை நமதே'' (0,84.11)

''வானில் அரசாள்வர்
ஆணை நமதே'' (2.84.11)

''அந்தஉலகு எய்தி அரசாளும்
அதுவே சரதம் ஆணை நமதே'' (3.78.11)

''வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற்கு ஆணையும் நமதே'' (3.118.11)

எனத் திருஞானசம்பந்தர், தம் திருப்பதிகங்களில் ''ஆணை நமதே'' என அருளிச் செய்திருத்தல் காணலாம். ஏனைய பிற திருமுறையாசிரியர்கள் எவரும் இங்ஙனம் ஆணையிட்டுப் பாடியிருக்கக் காண்கின்றிலோம். திருஞான சம்பந்தர் ஒருவர் மட்டுமே இவ்வாறு திருவாய் மலர்ந் தருளியுள்ளார். அவருக்கு இத்துறையில் வழிகாட்டியாக அமைந்தவர்,

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானேமந்திரம் என்ப''

என்னும் தொல்காப்பிய நூற்பாவுக்கு ஏற்ப, ஆணையிற் கிளந்து பற்பல திருமந்திரப் பாடல்களை (516, 532, 534, 590, 722, 730, 734, 805) அருளிச் செய்த திருமூலரேயாவர் எனத் துணிந்து கூறலாம்.

மணிவாசகர் :

'இவ்வாறே பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்' எனக் குமரகுருபரராற் புகழ்ந்து போற்றப்பட்ட மணிவாசகப் பெருமானுக்கும், திருமந்திரத்தில் மிக்க ஈடுபாடு இருந்ததென்று தெரிகின்றது.

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையார்

என்னும் திருமந்திரப் பாடலை நினைப்பிக்கும் வகையில்,

''பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடுஇரண் டும்அறியேனையே''

எனவரும் திருவாசகப் பாடற்பகுதி இலங்குகின்றது. இஃதொன்றோ? அம்பிகை இறைவனுக்கு அருட்சத்தியாகப் பலவகை நிலைகளிலும் வழங்கி நிற்கும் பெருமாண்பினை வியந்து,

''வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே''

என ஆசிரியர் திருமூலர் அருளிச் செய்திருப்பதனைத் தழுவி, திருப்பொற் சுண்ணத்தில்,

''எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்
தகப்பன் தமையன்''

என மணிவாசகப் பெருமானும், சுவைகெழுமப் பாடியிருத்தலைக் காண்கின்றோம்.

முடிவுரை :

இவ்வாறே சைவசித்தாந்த தத்துவ நெறிப் பெருஞ் சான்றோர்களான ஆசிரியர் மெய்கண்டார், அருள்நந்தி சிவம், உமாபதி சிவம் போன்ற பெருமக்களும், திருமந்திர நூலைப் பயின்று, அதன் சொற் பொருட் கருத்துச் சுவை நலங்களிற் பெரிதும்தோய்ந்து, அதன் அரிய பெரிய விழுமிய கருத்துக்களைத் தத்தம் நூல்களிற் பொதிந்து போற்றிப் பயன் கொண்டிருக்கக் காண்கின்றோம். அது பெரிதும், விரிவாக ஆராய்ந்து அறிதற்குரியது. ஆதலின் அதனைப் பிறிதொருகாற் கருதி மகிழ்வோம்.

இதுகாறும் கூறியவாற்றால், அண்மைக் காலத்தில் இருந்த இராமலிங்கர் முதலாகத் தொன்மைக்காலத்தில் விளங்கிய சான்றோர்கள் பற்பலரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப் போற்றிப் பயின்று பயன்கொண்டு மகிழ்ந்தனர் என்னும் உண்மை இனிது புலப்படும். ஆதலின், அத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த திருமந்திர நூலினை நாமும் பல்காற் பாங்குறப் பயின்று நலம் பலவும் எய்தி உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

நீர்வண்ணன் — மகாவித்துவான் திரு. பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

எம்பெருமான் திருநீர்மலையிலே நீர்வண்ணன் என்றும், கச்சியூரகத்தில் நீரகத்தான் என்றும் திருநாமம் பெற்றிருப்பது பிரசித்தம். நீர்க்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளால் உண்டு.

(1) நீர் பள்ளத்தில்தான் பாயும், மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற்றால் குறைந்தாரிடத்தே எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோம் என்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும்போது, ஞானத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரோணாசாரியரையும், செல்வத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரியோதனனையும் ஒரு பொருளாக மதியாதே, இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத்திருந்த விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று, ''முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ வருதற்கு, என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் என்றான்'' (வில்லிபாரதம்) என்று அவர் உள் குழையுமாறு இருந்து அமுது செய்தருளினான் கண்ணபிரான்; ஆகவே, பள்ளத்தே ஓடிப் பெருங் குழியிலே தங்கும் இயல்பு நீருக்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது அப்படியே எம்பெருமான் இன்றி ஒரு காரியமும் ஆகாது. ''லோகோ பிந்நருசி'' என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தை உடையதாயினும் எல்லோரும் நீரை விரும்பியேயாகவேண்டும்; அதுபோலவே எம்பெருமானையும்.

(3) நீர்க்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி; எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாயச் சீற்றம் வந்தேறியா யிருக்கும். ''நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்'' என்ற முமுட்சுப்படித் திவ்விய சூக்தி காண்க.

(4) நீர்சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் மீறினாலும் அவன்றானே தெளிவு பெறவேணும். ''தரு துயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை'' என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம் விருப்பப்படி தேக்கி வைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் படியும் அப்படியே. ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்து அநுபவிக்க நின்றான் எம்பெருமான்; பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோக விடப்பெற்றான். ஆண்டாள் தேக்கி வைத்தனள். பாண்டவர்கள் ஓடவிட்டனர்;

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயிருக்கும். தனிப்படத் தானே உணவாய்க் குடிக்கத் தக்கதுமாய் இருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்துவம் உபேயத்துவம் என்ற இரண்டு ஆதாரங்களுண்டே. எம்பெருமானைக் கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்புவாரும், எம்பெருமான் தன்னையே சுவயம் புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) சோறு முதலானவை தமக்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கும். அதாவது, காய் கனி கிழங்கு வேர் பால் முதலியவற்றால் தேகதாரணம் பண்ணலாம். பண்ணுவாருமுளர். நீரானது அப்படி பிரதிநிதி ஒன்றையும் சகிக்கமாட்டாது. நீர்க்கு நீரே வேணும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணாநுசந்தாநத்தாலும் போது போக்கவரிது;' 'ஒருநாள் காணவாராயே'' ''அடியேன் தொழ வந்தருளே'' என்று பிரார்த்தித்துப் பெற்றே தீரவேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்குப் பதிலாகக் கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் சுவைக்கு ஏற்றபடி வைத்துக் கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குப் பதிலாக வேறெதுவும் வைத்துக் கொள்ளப்படுவதில்லை; நீர் ஒருவராலும் விட முடியாதது. அதுபோல கர்ம ஞாந பக்தி பிரபத்தி முதலியவற்றில் எதைவிட்டு எதைப் பற்றினாலும் எம்பெருமான் ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று. இது மிக நுட்பமான தத்துவப் பொருள்.

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது. அப்படி நீர் வேறொன்றை வேண்டி நிற்பதன்று. எம்பெருமான் படியும் அப்படியே. உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம்பெருமான் இதர நிரபேஷக் (அதாவது) எதையும் எதிர்பாராதவன். ''உன்னாலல்லால் யாவராலுமொன்றுங் குறை வேண்டேன்'' என்றாரே நம்மாழ்வார்.

(9) கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மியமேயன்றி நீர்தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பவல்லது. எம்பெருமானும் ''வேண்டிற்றெல்லாந் தருங்கோதில் வள்ளல்'' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி எங்கும் நிரப்பவல்லவன். கொள்வார் குறையேயத்தனை: ஐசுவரியமே போதுமென்பாரும், கைவல்யமே போதும் என்பாருமாகக் குறையக் கொள்ளுவாருடைய குற்றமே. அற்பமான ஐசுவரியம், உத்தமமான முத்தியளவும் எதையம் அளித்து நிரப்ப வல்லவன் இறைவன்.

(10) நீர் ஐவகைப்பட்டிருத்தல் போல எம்பெருமானும் ஐவகைப்பட்டிருப்பவன்; எங்ஙனேயென்னில், (1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர். (2) அண்டத்துக்குப் புறத்தேயுள்ள நீர் (3) பாற்கடல் நீர் (4) பெருக்காற்று நீர் (5) தடாகங்களில் தேங்கும் நீர் என நீர் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறொரிடம் தேடிப்போகவேண்டாதபடி நிற்கிற விடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங் கொண்டு கல்லினால் அல்லது குடிக்கக் கிடையாத பூமிக்குள் பதிந்த நீர்போலே யாய்த்து அந்தர்யாமித்வம்; கண்டு

வேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு இருதயத்திலே இருக்கச் செய்தேயும் கண்ணுக்குப் புலப்படாமல், அட்டாங்க யோகமாகிற முயற்சியாலே, காணவேண்டும்படியான தன்றோ இது. (2) விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண சலம் போலேயாயிற்று, கண்டு பற்றவேணும் என்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்துவம். (3) அப்படி அதிதூரத்திலும் அன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிட்ட அரிதான பாற்கடல் போலேயாயிற்று, சென்று காண அரிதாம்படி இருக்கிற வியூகம். (4) அருகேயிருந்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டும் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று, இராமகிருஷ்ணுதி அவதாரங்களான விபவம். பூமியிலே அவதரித்துச் சஞ்சரித்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கே அடையத் தக்கதாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாய் இருப்பதன்றோ இது. (5) விடாய்த்தவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று கோயில்களிலும் இல்லங்களிலும் எங்கும் ஒக்க எல்லார் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம். ஆக இந்த ஐந்து வகைகளினுலும் ஐவகை நீரை ஒத்திருப்பான் எம்பெருமான்.

(11) நீரானது இயற்கையிலே பரிசுத்தமாயினும், ஆதரவசத்தாலே கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதுமாகிறது. அப்படியே பிற தெய்வங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் உபேட்சிக்கத்தக்கவனுகவும், கூராராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் உத்தேசியனுகவும் உள்ளமை காண்க.

(12) தோண்டத் தோண்டச் சுரக்கும் நீர்; எம்பெருமானும் கொள்ள மாளா வின்ப வெள்ளமாய்ப் பேசப் பேச வளர்ந்திடுவன். ''செலக் காண்கிற்பார் காணுமளவும் செல்லுங் கீர்த்தியாய்'' என்றுரே நம்மாழ்வார். 'பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாச மலர்த்தண்டுழாய் மார்வன்-வடிவு'' என்றுர் பேயாழ்வாரும்.

(14) நீர் தனக்கொரு பிரயோசனமும் இன்றிப் பரார்த்தமாகவே யிருக்கும்; அது போல எம்பெருமானுடைய இயல்பு ரூபம் குணம் விபூதிகள் ஆகியனவெல்லாம் நம் போன்ற அடியார்களுக்காகவே யிருக்கும்.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்க உரியதாகாது; எம்பெருமானும் சாத்திரங்களில் இருந்து ஆசாரியர் முகமாக வந்தே உபஜீவனுகிறுன். ''மேகம் பருகின சமுத்திராம்பு போல நாற்கடற் சொல் இவர் வாயனவாய்த் திருந்தின வாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே'' என்ற ஆசார்ய இருதய சூக்தி காண்க.

(16) சிறியார் பெரியார் என்கிற விபாகமின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி இருக்கும் நீர்; எம்பெருமானும் நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'' என்றும், ''கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்'' என்றும் சொல்லுகிறபடியே, பெரியார் சிறியார் என்னும் வாசியற ஒக்க வழிபடலாம் படியிருப்பன்.

(17) நீர் சிறிது துவாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும். எம்பெருமானுக்கும் சிறிது காரணமே போதும், ''திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்'' என்றும் ''மாதவன் என்றதே கொண்டு என்னுள் புகுந்திருந்தான்' என்றும் அருளிச் செய்தார் நம்மாழ்வார்.

(18) கங்கை, காவிரி, திரிவேணி முதலான தீர்த்த விசேடங்களிலே நீருக்குப் பெருமை அதிகம்; எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப் பொலியும்.

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலே ஏறட்டுவது முதுகில் கொட்டுவது உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவதுபோல், ''வாக்கினுல் கருமந்தன்னுல் மனத்தினுல் சிரத்தை தன்னுல், வேட்கை மீதூரவாங்கி விழுங்குவர்கள்'' எம்பெருமானையும் என்கிறுர் திருமங்கையாழ்வார்.

(20) நீர் வேண்டியவன், ஒரு துளி நாக்கு நனைக்கக் கிடைத்தால் போதுமென்பன்; ''கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே'' என்றும், ''ஒருநாள் காணவாராயே'' என்றும், ''நம்மையொருகால் காட்டி நடந்தால் நாங்களுய்யோமே'' என்றும் ஆழ்வார்கள் கூறுவர் எம்பெருமானை நோக்கி.

(21) நீரில் சிறிய கல்லும் அமிழும், பெரிய தெப்பமரமும் மிதக்கும். ''எம்பெருமான் பக்கலிலும் பிரம்மாவாய் இழந்துபோதல், இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்யக் காணநின்றுேமிறே'' என்கிறபடியே பெரியார் இழக்கவும் சிறியார் பெறவுமாகும். ''நேரே கடிக்கமலத்துள்ளிருந்துங் காண்கிலான், கண்ணனடிக் கமலந்தன்னை அயன்'' என்று பிரமன் இழந்ததைப் பொய்கையார் கூறினர். ''மருவு நின் திருநெற்றியில் சுட்டியசைதர மணி வாயிடை முத்தந் தருதலும், உன்றன் தாதையைப் போலும் வடிவுகொண்டு உள்ளம் உள் குளிர விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றுளே'' என்று இடைச்சி பெற்றதைக் குலசேகராழ்வார் கூறினர். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும், ஊன்மல்கிமோடு பருப்பார் வாய்க்கரையில் நிற்றலுங் கொள்க.

(22) ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉம் மழை'' (திருக்குறள்) என்கிறபடியே உணவு பெருக விளைதற்குக் காரணமாகையாலே சாதனமாயும், விடாய் தீரப் பருகுகையாலே தானே போக்கியமாயும் இருக்கும் நீர். உபாயமும் தானுய் உபாயமும் தானுயிருப்பன் எம்பெருமான் என்பது நூற்கொள்கை. இங்ஙனே காண்க. *

"நல்லார் வணங்கப் படுவான்"

—'விவேகானந்தன்'

முன்னுரை :

''நல்லார் வணங்கப் படுவான்'' என்னும் இச் சொற்றொடர், ஒரு பாடலின் தொடக்கக் குறிப்பு ஆகும். அப்பாடல் நீலகேசி என்னும் நூலின் முதற் பாடலாக வருகின்றது. நீலகேசி என்பது, தமிழில், 'ஐஞ்சிறு காப்பியங்கள்' என வழங்கப் படுவனவற்றுள் ஒன்று. ஐஞ்சிறு காப்பியங்களாவன: நீலகேசி, சூளாமணி, உதயணன்கதை, யசோதரகாவியம், நாககுமாரகாவியம் என்பன. நீலகேசி ஒரு சமண சமய நூல். அது தமிழில் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாக விளங்கியிருந்து மறைந்துபோன, குண்டலகேசி என்னும் பௌத்த சமய நூலுக்கு எதிர்நூலாக எழுந்த தென்பர்.

''நல்லார் வணங்கப் படுவான்;
பிறப்பாதி நான்கும்
இல்லான்; உயிர்கட்கு இடர்தீர்த்து,
உயர்இன்பம் ஆக்கும்
சொல்லான்; தருமச் சுடரான்
எனும் தொன்மையினன்;
எல்லாம் உணர்ந்தான்; அவனே
இறையாக ஏத்தி!''

எனவரும் அருகன் துதியோடு, நீலகேசி தொடங்குகின்றது. இந்நூலுக்கு 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் சமய திவாகர வாமன முனிவர் என்பார், சிறந்ததோர் உரையினைத் திறம்பட இயற்றி யுள்ளார்.

நீலகேசி :

நுண்மாண் நுழைபுலம் மிக்க அவ்வுரை யாசிரியர், நீலகேசியின் முதற்பாடலாக வரும் இச்செய்யுளுக்கு விரிவானதோர் உரை எழுதி யுள்ளார். அதிலும், ''நல்லார் வணங்கப்படு வான்'' என்னும் தொடர் குறித்து வரைந் துள்ள சிறந்த உரைப்பகுதிகள், மிகவும் சுவை பொருந்தித் திகழ்கின்றன. ''நல்லார் வணங் கப்படுவான்'' அருகனே யன்றிப் புத்தன் அல்லன் என்பதனை, அவ்வுரையாசிரியர் பெரிதும் வற்புறுத்தி எழுதிச் செல்லுகின்றார். புத்தர் பிரான் பலவகைக் குற்றங்களையுடைய வர் எனவும், அக்குற்றங்கள் ஒன்றும் இல்லாத வர் தமது சமயக் கடவுளாகிய அருகதேவன் ஒருவரே எனவும், அவர் எழுதிச் செல்லுந் திறம் வியப்பை விளைவிப்பதோடு, அவர்தம் வழக்கீட்டு நெறியின் வன்மையினையும் நன் கினிது புலப்படுத்தி, ஒருவகை மகிழ்ச்சி யுணர்வினை எழுப்புகின்றது. அவருரையின் சிறந்த பகுதிகளை மட்டும், ஈண்டு அகழ்ந் தெடுத்துச் சுருங்கத் தொகுத்துக் காண்போம்.

நீலகேசி உரைப்பகுதி :

(1) ''இனி, நல்லார் வணங்கப்படுதல் முதலாயின, சுகதன் (புத்தன்) முதலாயினர்க்கு எய்தாதாயினன்றே, அருகத் பரமேட்டிக்கு மங்கலமாவது? அஃதென்னை பெற்றவாறு எனின், குற்றமில்லாதாரையன்றே நல்லார் வணங்குவது! இம்சையும், அசத்தியமும், ஸ்தேயமும் (களவும்), காமமும், திரஷ்ணை (ஆசை) யும் முதலாயின குற்றங்கள், சுகதன் முதலா யினர்க் குண்மையின், அவர் நல்லார் வணங்கப் படார் என்பது.

(2) சுகதனுக்குக் கொலை முதலாயின எங்ஙனம் உளவாகின்றன? எனில், ஆத்ம வதத் தாலும், மாமிச பட்சணத்தாலும் கொலை யுண்டென்பது.....பஞ்ச அங்கமும் கூடிற் கொலையாம், அன்றெனில் ஆகாது என்று உப தேசித்தலாலும், சுகதனுக்குக் கொலையுண் டென்பது.

(3) இனி, அசத்திய கதனமும் (பொய் பேசுதலும்) சுகதனுக்கு உண்டு; புண்ணிய பாபங்கள் செய்தவன் தத்க்ஷணத்தே நசிக் கின்றானதலால், தத்பலங்கள் பெறான் என்ப தறிந்தும், இன்ன புண்ணியஞ் செய்தான் இன்ன பலன் பெறும், இன்ன பாபஞ் செய் தான் இன்ன பலன்பெறும் என்று சொல்லு கின்றானதலால்....

(4) இனி, சுகதனுக்குக் களவும் உண்டு: குடையும் செருப்பும் முதலாயின ஒரு காலத் துத் தானம் பெற்றுப் பிறிதொரு காலத்து அவற்றை என்னுடையன என்று பற்றுமாத லால்.....களவுண்டென்பது.

(5) இனி, சுகதனுக்குக் காம சேவை யும் உண்டு; இவனுக்குத் தாரமும் புத்திரரும் உண்மை பெறப்படுதலின் என்பது.

(6) இனி, சுகதனுக்குத் திரஷ்ணையும் (ஆசையும்) உண்டு. மாம்சம் பட்சித்தலும், தாம்பூல சேவையும், பல்லுத் துடைத்தலும்,

ஸ்நானபானங்களும், குடை செருப்பு முதலாயின கைக்கோடலும், திரஷ்ணை(ஆசை)யொழியக் கூடாமையின் என்பது.

(7) இனி, இவன் காமபரவசனுமாம்; உறக்கத்தான் மயங்குதலும், பசியால் வருந்தி நாடோறும் பிட்சை யிரத்தலும் உண்மையின் என்பது.

(8) இனி, இவன் பொருள் இருந்தவாறு (தத்துவஞானம்) அறியானுமாம்; என்னை? பதார்த்தங்கள் நிரம்சமாய் க்ஷணத்திற் கெடும் என்று சொன்னவன்தானே, முன்பு நான் முயலாய்ப் பிறந்து தர்மோபதேசம் பண்ணினேன்; இப்பொழுது புத்தன் ஆயினேன் என்று ஆகமோபதேசம் பண்ணினன் ஆதலால். இக்கொலை முதலாயின, இழுக்குத் தலைவரும் என்று தவிர்ந்தான் அல்லன்; உலகம் தவிர்தலில் தவிர்ந்தான் என்றமையானும் பெறுதும்.

(9) இனி, உயிர்கட்கு இடர்தீர்த்து உயர் இன்பம் ஆக்கும் சொல்லுடைமையும் பிறர்க்கு இல்லை; அவர்கள் உயிர்கட்கு இடர் ஆக்கும் சொல்லினர் ஆதலால். என்னையெனின், சுகதன் புண்ணிய பாபங்களைச் செய்தார்க்குத் தத்பல போக்த்ருத்துவம் (அதன் பயனை அநுபவிக்கும் தன்மை) இல்லை என்பது அறிந்தும், புண்ணியம் செய்மின் பாபம் ஒழிமின் என்று உபதேசித்து, உயிர்களைக் கிலேசிப்பிக்கின்றான் ஆதலாலும்; ஐந்தங்கங்களிற் குறையக் கொன்றார்க்குக் கொலையில்லை என்றும், மாம்சம் தின்பார்க்குக் கொலையில்லை என்றும் கொலை மேற்புரிவித்தும்; காற்பொன்னிற் றாழ்ந்தது களவன்று என்று களவின்மேற் புரிவித்தும்; எண்ணம் மாத்திரை வைக்கிற் காமமன்று என்று காமத்தின்மேற் புரிவித்தும்; கள் என்னும் உள்ளமின்றிக் கட்குடித்தார்க்குக் குற்றமில்லை என்று மகாயானம் மந்திரயானங்கள் சொல்லிக் கட்குடிப்பித்தும்; பிறன் பொய் என்று அறியாமற் சொல்லும் பொய் பொய்யன்று என்று பொய்மேற் புரிவித்தும்; மற்றும் பல பிரகாரத்தாலும் சர்வ ஜீவன்களையும் இகபர லோகத்துத் துன்புறுவிக்கின்றான் ஆதலாலும்; மகௌஷத பண்டிதனை ஜாதகக் கதையில், தான் ஓர் அரசனுக்கு மந்திரியாய்ப் பிரதிபட்சத்து அரசர்களை வஞ்சித்தும், பெண்களையும் பிள்ளைகளையும் பிறர்க்குக் கொடுத்துப் பீடித்தும், பிறவாற்றானும் உயிர்களைத் துன்புறுவிக்கின்றமையின், உயிர்கட்கு இடர் ஆக்கும் சொல்லான் என்பது பெறுதும்.

(10) இனி, எல்லாம் உணர்தலும் சுகதாதிகட்குக் கூடாதாம். சுகதன் க்ஷணந்தோறும் கெடுகின்றானதலால், தான் உளன் ஆகிய ஏக க்ஷணத்திலுள்ள ஒன்றையும் அறிவதல்லது பிற அறியானும்...அன்றியும், பௌத்தரால் சுகதன் சர்வக்ஞன் (முற்றறிவுடையவன்) அல்லன் என்பது சொல்லவும் பட்டது....''

முடிவுரை :

இங்ஙனம் சமண சமய நூலாகிய நீலகேசி, பௌத்தர்களைப் பழித்துரைக்குமாறு போல, பௌத்த சமய நூலாகிய மணிமேகலையின்கண் சமணர்களைப் பழித்துரைக்கும் குறிப்புக்கள் உள்ளமை காணலாம். சமணர்களும் பௌத்தர்களும் தமக்குள் கொண்டிருந்த பகைமை பொறாமை பூசல் முதலியவற்றை, மேலே உரைப் பகுதியினலேயே ஓரளவு யாவரும் இனிதுணரலாம். சமணம், திகம்பரம், சுவேதாம்பரம் என்று பலவகைகளில் பிரிவுபட்டிருந்தது.

''ஐயுறும் அமணரும், அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனே''

என்று திருஞானசம்பந்தர், தம் காலத்தில் இருந்த சமண பௌத்தப் பாகுபாடுகளை சுட்டியருள்கின்றார். பௌத்தசமயம், புத்தர்பெருமான் மறைந்த ஒரு சில நூற்றாண்டுகளுக்குள், 18 பெரும் பிரிவுகளாகவும், மற்றும் பலபல உட்பிரிவுகளாகவும் பிளவுபட்டதாகத் தெரிகின்றது. (†) இத்தகைப் பிளவுகளையும் பிரிவுகளையும் உட்கொண்டே போலும்,

''பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு''

என்று திருவள்ளுவர் அருளிச் செய்வாராயினர். சமண பௌத்த சமயங்களின் அழிவுக்கும் வீழ்ச்சிக்கும், சைவ வைணவ சமயங்களும், அவற்றின் ஆசிரியர்களாகிய ஆழ்வார்களும் நாயன்மார்களுமே காரணம் என்று ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் கூறுவது உண்டு. ஆனல் அவர்களின் கூற்றுப் பொருத்தமாகத் தோன்றவில்லை. சமண, பௌத்த சமயங்கள், **'சுந்தோபசுந்தர்கள்'** போலத் தமக்குள் தாமே இகலிப் பொருது பூசலிட்டுக் கொண்டு அழிவுற்றனவே அல்லாமல், அவற்றிற்குச் சைவ-வைணவ சமயங்கள் சிறிதும் கேடு சூழ்ந்தில. தம்முடைய உயரிய கொள்கைகளாலும், ஒழுகலாறுகளாலும், தம்மிடையே தோன்றியருளிய சான்றோர் பெருமக்களின் அறிவாற்றற் பண்புநலங்களாலுமே, நேரிய தூய சிறந்த நெறிகளில், சைவ-வைணவ சமயங்கள், சமண பௌத்த சமயங்களை வென்று புறங்கண்டன (††) என்னும் உண்மை, இங்கு நாம் கருதியுணர்ந்து மகிழ்ந்து இன்புறுதற்கு உரியது.

(†) "In the history of the succession of schools, it is found that the first schism in the sangha was followed by a series of schisms leading to the formation of different sub-sects, and in the course of time **eleven** such sub-sects arose out of the Theravada while **seven** issued from the Mahasanghikas. Later, there appeared other sub-sects also. All these branches appeared one after another in close succession within three or four hundred years after the Buddha's parinirvana".

—2,000 Years of Buddhism, p. 89.

(††) " Hinduism overcame Buddhism and Jainism by assimilating their finer features. This was effected not by persecuting or penalising them, but by producing greater scholars, better authors, nobler saints & finer artists, and above all by practising greater active piety and philanthropy. "

—Sir Jadunath Sarkar.

—:o:— —:o:—

௵௨௧௧,௩௫௮
N78-9510

சிற்றம்பல நாடிகள்

‘அருண்மொழியரசு’ திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

158633

ஊழி பெயரினும் பெயராதது காழியம் பதி. அத் திருத்தலம் உகாந்தகாலப் பெரு வெள்ளத்தில் தோணிபோல் மிதந்ததனுல் தோணிபுரம் எனப் பெயர் பெற்றது. இங்கு இறைவரும் தோணியப்பர் எனத் திருப்பெயர் கொண்டு விளங்குவர். திருஞானசம்பந்த சுவாமிகள் திரு அவதாரஞ் செய்த திருத்தலம் இது எனின், இதன் பெருமை அளவிடற்கரிய தன்றே?

இப் புண்ணியத் தலத்தில் அவதரித்தவர் சிற்றம்பல நாடிகள். வேளாண் மரபில் உதித்த வர். பண்டைத் தவப்பயனுல் பரிபக்குவ மடைந்தவர். உமாபதி நாயனுருடைய ஞானப் புதல்வராகிய அருணமச்சிவாயரிடம் உபதேசம் பெற்றவர் பஞ்சாக்கரதேசிகர். அருணமச்சிவாயர்பால், சிவஞான உபதேசம் பெற்ற மற்ருெரு கிளை, சீர்காழியிலே அமைந் திருந்தது. அப் பரம்பரையிலே வந்தவர் சிற் றம்பல நாடிகள்.

கங்கை மெய்கண்டார் என்பவரிடம் சிற் றம்பல நாடிகள் உபதேசம் பெற்ருர். பதி பசு பாசம் என்ற முப்பொருள் உண்மையை நன்குணர்ந்து, இருவினை யொப்பு மலபரி பாகம் சத்திநிபாதம் எய்திச் சிவயோக வாழ் வில் விளங்கினுர். இடையருத பேரன்பும், நடையருத பெருந்துறவும் உடையவராய் இவர் பரமஞான குருமூர்த்தமாய்த் திகழ்ந் தார்.

சிற்றம்பல நாடிகள் சிவமே பொருள் என்று உன்னி நிராசையுடையவராய், உயிர்கள் யாவும் உய்யவேண்டும் என்ற பெருங் கருணை யுடையவராய், எப்போதும் தியானுனந்தத் திருவருட்சமாதியில் திளைத்து வீற்றிருப்பார். பலாப்பழத்தை நாடி ஈக்கள் வருவது போல வும், வள்ளலை நாடி வறியவர் வருவது போலவும், மலரை நாடி வண்டுகள் வருவது போலவும், பக்குவ மாணவர்கள் பலர் இவரை நாடி வந்தார்கள். இவர் திருவடிகளை வணங்கி இவர்பால் அருளுபதேசம் பெற்றவர்கள் பலர்.

இத்தகைய மாணவர் குழாங்களுள் சிறந்தவர்கள் அறுபத்து மூன்று மாணக்கரா வார்கள். அவர்களுள் மிகச் சிறந்தவர்கள் சிவபுரம் – தத்துவப்பிரகாசர்; கண்ணப்பர் என்பவர்கள். இவர்கள் யாவரும் சிவாநுபூதி மான்களாகத் தமது ஞான குருமூர்த்திகளாகிய சிற்றம்பல நாடிகளுடைய திருவடியை விட்ட கலாது இருந்து வந்தார்கள்.

மாயூரத்திற்கு அருகில் சித்தர்காடு என்ற ஒரு இடத்தில், சிவானந்த நிட்டையில் எழுந் தருளியிருந்து சிவபூசை, குருபூசை, மகேசுர பூசைகளையும் நியதியாக விதிப்படி செய்து வந்தார்கள். அந்த இடம் ஒரு ஞானத் தனிச் செங்கோல் நடத்தும் ஞானராஜதானியாக அமைந்திருந்தது.

ஒருநாள் சிற்றம்பல நாடிகள், மாணவர் புடைசூழ அமுது செய்து கொண்டிருந்தார். தவசிப்பிள்ளை கை தவறுதலாக நெய்வைக்கும் இடத்தில், வேப்பெண்ணெய்யை வைத்து விட்டனன்; நினைவு இன்றி நெய்யென்று கருதி வேப்பெண்ணெய்யை எடுத்து எல்லோ ருக்கும் படைத்தனன். சிற்றம்பல நாடிகள் முதல், மாணவர் யாவரும் சித்தத்தைச் சிவன் பால் வைத்தவர்கள். உண்பது பசிக்யேன்றி ருசிக்கன்று. அதனுல் சிவசிந்தையுடன் உண் பாராயினுர்கள். அம் மாணவருள் கண்ணப்பர் மட்டும் ‘‘ஐயையோ! வேம்பு நெய் விட்டனனே கசக்கின்றதே’’ என்றனர்.

அப்போது சிற்றம்பல நாடிகள் ‘‘அவிச் சுவையினும் கவிச்சுவையினிது; கவிச்சுவை யினும் தவச்சுவை யினிது. தவச்சுவை யுணர்ந் தோன், அவிச்சுவை யுணரான். நீ சிவ யோகிகள் பந்தியிலிருந்து உண்ணும் தகுதி பெற்ருயில்லை. இனி இத்திருக் கூட்டத்துள் உனக்கு இடமில்லை. அகலுதி’’ என்று அருளிச் செய்தனர்.

கண்ணப்பர் எழுந்து, விண்ணருவி எனக் கண்ணருவி பெய்து, நடுநடுங்கி வாய்குழறி மெய் சிலிர்த்து, சிரமலர் மீது கரமலர் கூப்பி ‘‘பேயேன் பிழை பொறுத்தருளல் வேண்டும். நாயேன் நவை பொறுத்தருளல் வேண்டும். சேய் பிழையைத் தாய் பொறுத்தல் தக வன்றே? கருணைக்கடலே மன்னித்தருள வேண் டும்’’ என்று கூறிக் கதறி அழுதார்.

‘‘மகனே! வருந்தற்க. மனம் பரிபக்குவம் அடையும் பொருட்டுச் சில காலம் வடநாடு சென்று யாத்திரை செய்து வா’’ என்று பணித் தருளினுர். கண்ணப்பர் குருதேவர் சரணமலர் மீது பன்முறை நன்முறையுடன் பணிந்து, புறங்

காட்டாது பின்னுற நடந்து, தாய்ப்பசுவை விட்டுப் பிரியும் இளங்கன்றைப்போல் வருந்தி, கண்ணீரால் நிலத்தை நனைத்துக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்றார்.

சில திங்கள் கடந்தன. சிற்றம்பல நாடிகள் தம் மாணவர் குழாத்துடன் மகா சமாதி யடையத் திருவுளங்கொண்டார். அன்று சித்திரை மாதம்; திருவோண நட்சத்திரம், மன்னவனை விளித்தார். ''எனக்கும் என் மாணவர் அறுபதுபேர்கட்கும் சமாதிக்குழி சமைப்பாய்'' என்று பணித்தருளினார். அரசன் திடுக்கிட்டான். ஆன்றோர் அமுத வாக்கை மறுக்க அஞ்சினான். அச் சித்தர் காட்டிலே சிற்றம்பல நாடிகளுக்கு ஒரு சாமதிக் குழியையும், அதனைச் சூழ்ந்து அறுபது சமாதிக் குழிகளையும் வெட்டி அவற்றை ஒழுங்கு செய்தான். இந்த அதிசய நிகழ்ச்சியைக் காண மக்கள் பலர் திரண்டு வந்தார்கள். உயிருடன் சமாதியில் இறங்குவது என்றால் சாமானியமா? குறிப்பிட்ட காலம் எய்தியது. எல்லோரும் சிற்றம்பல நாடிகளை இமையாது நோக்கியவண்ணம் நின்றார்கள். ஆச்சாரியர் அனைவரையும் அருட் கண்ணால் கண்டு ஆசீர்வதித்தார். எல்லோரும் கேட்க அடியில் வரும் இந்த மூன்று திருவெண்பாக்களை ஓதியருளினார்.

சென்றறிய வேண்டாவே சேராமை வேண்டாவே
ஒன்றுபட வேண்டாவே உள்ளத்தே—நின்றநிலை
கண்டாயே எங்குங் கதிரொளிகண் காயமெல்லாம்
உண்டான தன்மைபோல் உற்று.

உற்றுணர்வுக் குள்ளே ஒளியா வுணர்வுணர்த்தப்
பெற்றாயே எவ்வுயிர்க்கும் பேறுதனை—மற்றதுதான்
மாண்டதே பார்ப்பளவில் மாளா நிறைவுநம்மைப்
பூண்டதே என்றே புகல்.

தங்களைநாம் இன்பத் தடங்கடலில் மூழ்குவித்தோம்
அங்குலகம் தீர மறப்பித்தோம்—இங்குலகில்
வாராதே வாதனையால் வந்தீரே யாமாகில்
பாராதே பாரீர் பரம்.

பின்னர் சிற்றம்பலநாடிகள் இடையில் உள்ள சாமதியில் இறங்கியருளினார். சிவானந்த சிவயோகத்தில் சின்முத்திரை காட்டி அசைவற்றுச் சித்திரதீபம்போல் அமர்ந்துவிட்டார். மாணவர் அறுபதுபேரும் தனித்தனியே குருமூர்த்தியை வணங்கி ஒவ்வொரு வெண்பாவைப் பாடித் தத்தமக்கு என்று அமைத்துள்ள குழியில் அமர்ந்து துரிய சமாதியில் ஆழ்ந்தார்கள். மண்ணால் குழிகள் மூடப்பெற்றன. பார்த்தவர்கள் யாவரும் பரவசமுற்றுப் பதுமைகள்போல் நின்றார்கள். இப்பேறு அடியவர்கள் திருக்கூட்டத்துள் கண்ணப்பருக்கு மட்டும் கிட்டிலையே என்று சிலர் கூறிக் கவன்றனர். ''ஈசன் அருள் அதுவாயின் என் செய்வது?'' என்றார்கள்.

அச்சமயம் வடக்கு நோக்கிச் சென்றிருந்த கண்ணப்பர் அங்கு வந்து சேர்ந்தார். எல்லோரும் சமாதியுற்றுச் சிவானுபவம் பெற்றதைக் கண்டார். அவர் ஆற்ற முடியாத அலக்கணுற்றார். ''குருநாதா! குருநாதா! சிறியேன் மட்டும் இம்மண்ணில் கிடந்து உழல்வதோ! அந்தோ! அந்தோ! இது நின் கருணைக்கு அழகோ? ஏழையைத் தள்ளி விட்டீரே. இனி யான் எங்குறுவேன்? என்செய்வேன்? எந்தையே! என் ஞான தேசிக தீபமே! உள்ளம் உருகுகின்றதே'' என்று கதறியழுதார்.

''ஆண்டகுரு சிற்றம் பலவா அடியேற்கா
மீண்டும் எழுந்தருள வேண்டாவோ—நீண்டமால்
ஆரணனுங் காணாத ஆனந்த வாரிதியைப்
பூரணமாய் வையாத போது''

என்ற திருவெண்பாவைப் பாடினார்.

அப்போது ஆச்சாரியருடைய சமாதி பிளந்தது. சிற்றம்பலநாடிகள், ''கண்ணப்பா வா என் மடியில் வந்து இரு'' என்று கரத்தை நீட்டி அழைத்தனர். கண்ணப்பர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ''உய்ந்தேன்; உய்ந்தேன்'' என்று துள்ளினார். குருதேவர் அவரைத் தழுவி மடியில் வைத்துக் கொண்டருளினார். மண் கூடிவிட்டது. இந்த அதிசயத்தைக் கண்ட அனைவரும் ''ஹர ஹர'' என்று கூறி ஆரவாரஞ் செய்தார்கள்.

வேந்தன் வியப்புற்றுச் சமாதிகளையெல்லாம் செம்மையாகப் புதுக்கி வழிபாட்டுக்கு வேண்டிய நிபந்தங்களை அமைத்தான். சிற்றம்பலநாடிகளின் மாணவருள் ஒருவராகிய சிவபுரம்-தத்துவப்பிரகாசர் என்பவர் தத்துவப் பிரகாசிகை என்ற ஒரு நூல் செய்தனர். சிற்றம்பலநாடிகள் செய்தருளிய ஞான நூல்களை ஓதி ஏனைய மாணவர்கள் உய்வு பெற்றார்கள்.

(குறிப்பு: மாயவரம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே உள்ள சந்தையின் மேல்பால் சித்தர் காடு என்ற இடம் இப்போதும் உளது. அதில் இச் சிற்றம்பலநாடிகளுடைய சமாதியுளது. தரிசிக்கலாம்).

ooooO—முற்றும்—Ooooo

திருக்குறளும், தருக்கநூலும்

முன்னுரை :

திருவள்ளுவர் நீதிநூலாசிரியர் மட்டும் அல்லர். சிறந்த கலைகள் பலவற்றிலும் தேர்ச்சி மிக்கவர். திருவள்ளுவர் ஒரு பெரும் பல்கலைக் குரிசில் என்பதனை, அவர்தம் திருக்குறளிற் காணப்படும் அகச் சான்றுகள் கொண்டு, நாம் அறிதல் கூடும். திருவள்ளுவர் காலத்தில் தருக்க நூற்கலை, பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின்றது.

தருக்க நூல் :

பண்டைக்காலத்தில் சமணர்களும் பௌத்தர்களும், தமது சமயக் கொள்கைகளைத் தருக்க நூலின் நெறிமுறைகளைத் தழுவி, காரண காரிய முறைகளைக் காட்டி, தடைவிடை முறைகளால் நுட்பமாக ஆராய்ந்து, விவாதித்துப் பரப்பி வந்தனர். சமண பௌத்த ஆசிரியர்கள் பலர், புகழ்மிக்க தருக்க நூல்கள் பல பற்றியுள்ளனர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான **மணிமேகலை** என்னும் தமிழ்ப் பெருங் காப்பியம், தனது இறுதி நான்கு (27-30) காதைகளில் வடமொழித் தருக்கநூற் கருத்துக்களைத் தமிழில் வடித்துத் தருதல் காணலாம். அக்காலத்தில் மிதிலை உச்சயினி பாடலிபுத்திரம் காசுமீரம் விக்கிரமசீலம் வங்காளம் நாடியா முதலிய வடஇந்தியப் பகுதிகளில், தருக்கநூற் கலை பெரிதும் பயிலப்பட்டு வந்தது எனத் தெரிகின்றது. தமிழ்நாட்டிற் காஞ்சிபுரம் தருக்கநூற் கலைப் பயிற்சிக்கு மிகவும் புகழ் பெற்று விளங்கியது. திக்கநாதர் (கி.பி. 450-520), தருமபாலர் (கி.பி. 600-635), தரும கீர்த்தி (கி.பி. 635-650) போன்ற, பெரும்புகழ் சான்ற தருக்க நூலாசிரியர்கள், காஞ்சிபுரத்தைச் சார்ந்த தமிழ்ப் பெருமக்களேயாவர்.

இயேசு கிறித்து தோன்றுதற்கு ஆறு நூற்றாண்டுகட்கு முன்னரே, அஃதாவது இற்றைக்கு இரண்டாயிரத்து அறுநூறு (2600) ஆண்டுகட்கு முன்பே, இந்திய மக்கள் தருக்கநூற் கோட்பாடுகளை அறிந்திருந்தனர். 'ஷட்தரிசனம்' அல்லது 'அறுவகைச் சமயங்கள்' எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாஞ்சம் வேதாந்தம் என்னும் ஆறனுள், நியாயம் வைசேடிகம் என வழங்கும் இரண்டும், தருக்கத்தின்கண் அடங்குவனவேயாம். தத்துவ ஆராய்ச்சி செய்தற்கும், சமயக் கொள்கைகளை உணர்தற்கும், உணர்த்துதற்கும், தருக்க நூற்கலை மிகப் பெரிதும் இன்றியமையாததொன்றாகப் பண்டைநாளில் மதிக்கப் பெற்று வந்தது.

திருவள்ளுவர் :

ஆதலின், ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான், தாம் இயற்றியருளிய திருக்குறளில், தருக்கநூற் பயிற்சியானது அறிவு வேட்கையர் அனைவருக்கும் இன்றியமையாதது எனக் கொண்டு ''ஆற்றின் அளவு அறிந்து கற்க'' (75) என்று விதித்திருப்பதுடன், அதனைக் கற்பதனாலாய பயன் இது எனத் தெளிவிக்கும் கருத்தில் ''அவையஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு'' என்றும் அருளிச் செய்தனர். ''நல்லாற்றான் நாடி அருள் ஆள்க'' (242) எனப் பிறவிடத்தும், அவர் சுட்டியிருப்பதன் தருக்கநூற் கருத்தைப் பரிமேலழகர் உரை கொண்டு உணரலாம்.

ஆசிரியர் திருவள்ளுவர் இங்ஙனம் பல இடங்களில் தருக்க நூற் பயிற்சியினை வற்புறுத்தியிருப்பதோடு, தாமே தருக்க நூற் பயிற்சியில் தலை சிறந்தவராகவும் திகழ்ந்திருந்தனர் என்பது,

> ''அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
> பகவன் முதற்றே உலகு''

என்னும் திருக்குறள் கொண்டும், தெள்ளிதின் உணரப்படும். திருவள்ளுவர் எத்துணைச் சிறந்த தருக்கநூற் பெரும்புலவராக விளங்கியிருந்தனர் என்பதனை, இத் திருக்குறள் எழிலுற இனிது புலப்படுத்துகின்ற தெனலாம்.

திருவள்ளுவர், தாம் இயற்றத் தலைப்படும் திருக்குறள் நூலின் தொடக்கத்தே 'கடவுள் வாழ்த்து'க் கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துவதற்குத் தலைப்படும் முன்னர், உலகிற்குக் கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த வேண்டுவது, அவருக்கு இன்றியமையாத கடமையாகின்றது. கடவுள் உண்டு என்னும் உண்மையை உணர்த்த, அவர் வேறு எத்தனையோ பலப்பல வகையான சான்றுகளையும் காரணங்களையும் எடுத்துக் காட்டியிருக்கலாம். ஆனால், அவர் அணியியல் நூலுக்கும் (Rhetoric), அளவையியல் நூலுக்கும் (Logic) தொடர்புடைய உவமையினைக் கொண்டு, இறை உண்மை நிறுவ முற்படுகின்றார்.

உவமைநலன் :

ஒரு கவிதையின் சிறப்புக்குக் காரணமாக அமைவன பலப்பல. அவைகளுள் உவமை தலைசிறந்ததொன்று. உவமையானது கவிதைக்கு அழகும் சுவையும் அளிக்கின்றது, கருத்து வளத்தினைப் பெருக்குகின்றது; கவிதையின் பொருளினைப் பயில்பவர் உள்ளத்தில் கவினுறப் பதிவிக்கின்றது.

கற்பனை செறிந்த நல்ல
 கவிதையாம் அரங்கம் தன்னில்
பொற்புறும் உவமை என்னும்
 புகழ்மிகு விறலி தானே,
பற்பல வேடம் பூண்டு
 பண்பமை சுவைஞர் உள்ளம்,
நற்பெரு மகிழ்ச்சி ஓங்க,
 நடனம்செய் தின்பம் நல்கும்.

நலமிகும் உவமை என்னும்
 நல்லெழில் விறலி தானே,
பலவகைச் சிறந்த கோலம்
 பாங்குறப் புனைந்து போந்து,
கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
 காவிய அரங்கில் தோன்றிப்
புலவர்தம் உள்ளத் தின்பம்
 பொங்கிட நடிப்பள் நன்றே

—தமிழாக்கம் — ஆசிரியர்.

தருக்கநெறி முறை :

கடவுள் உண்மையை நிறுவ முற்படும் தமிழ்ப் பெருஞ் சான்றோராகிய திருவள்ளுவர், தமிழிலக்கண அமைப்பின் நுட்பத்தினைத் தழுவி, அகரமாகிய உயிரெழுத்தினை உவமையாக எடுத்துக் காட்டி, தருக்க நெறிக்குரிய மேற்கோள்-ஏது-எடுத்துக் காட்டு - ஏற்றல் - முடித்தல் என்னும் ஐவகை உறுப்புக்களில் வைத்து விளக்கியிருக்கும் திறம், வியந்து மகிழ்தற்குரியது. இவற்றை முறையே வடநூலார் பிரதிஞ்ஞை (Proposition), ஏது (Reason), திருட்டாந்தம் (Example), உபநயம் (Application), நிகமனம் (Conclusion) என வழங்குவர். இவ் ஐவகை உறுப்புக் கொண்ட சொற்றொடரின் (Syllogism) முறையில், ''அகர முதல எழுத்தெல்லாம்'' என்னும் திருக்குறட் பொருளைப் பின்வருமாறு கருதி, நாம் ஆராய்ந்துணரலாம்.

1. ''எழுத்தெல்லாம் (ஆதி) அகரத்தை முதலாக உடையன;
2. இயக்கப்படுதலின்;
 யாது இயக்கப்படுவது
 அதுவது, தன்னை இயக்கப்படுத்தும்
 ஒருபொருளை முதலாக உடையது;
3. குடம் போல;
4. எழுத்தெல்லாம் ஆதி அகரத்தால் இயக்கப்படுகின்றன.
5. ஆதலின் எழுத்தெல்லாம் ஆதி அகரத்தை முதலாக உடையன.

[அதுபோல]

1. உலகு ஆதிபகவனை முதலாக உடையது;
2. இயக்கப்படுதலின்;
 யாதுயாது இயக்கப்படுவது
 அதுவது, தன்னை இயக்கப்படுத்தும்
 ஒரு பொருளை முதலாக உடையது;
3. எழுத்துக்களெல்லாம் போல;
4. உலகு ஆதிபகவனால் இயக்கப்படுகின்றது.
5. ஆதலின், உலகு ஆதி பகவனை முதலாக உடையது.

உலகும் கடவுளும் :

தருக்கநூல் நெறியில், தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாததையும், கண்ட ஒன்றைக் கொண்டு காணாததையும் அறிவித்தல் மரபு. அத் தருக்க நெறிமுறையை ஒட்டி, ஆசிரியர் திருவள்ளுவர் காணப்படாத கடவுள் உண்மையினைக் காணப்பட்ட உலகத்தைக் கொண்டு நம்மனோர்க்கு அறிவுறுத்துகின்றார். அக் கருத்திலேயே 'கடவுள் உலகத்திற்கு முதல்வன்' என்று கூறாமல் 'உலகு கடவுளை முதலாக உடையது' என உலகின்மேல் வைத்துக் கூறினார். திருவள்ளுவர் தருக்கநெறி சிறிதும் பிறழாத பகுத்தறிவாளர் (Pure Rationalist thinker) என்பதற்கு, இத்திருக்குறள் ஒன்றே சான்றாகப் போதியதாகும். சிவஞான போதம் என்னும் செந்தமிழ்த் தத்துவச் செழுந்தமிழ் நூலை இயற்றியருளிய மெய்கண்ட தேவரும், காணப்பட்ட உலகத்தாற் காணப் படாத கடவுட்கு உண்மைகூற வேண்டுதலின், ''அவன் அவள் அது எனும் பாகுபாடுகள் உடைய உலகமானது, தோன்றல் நிற்றல் அழிதல் என்னும் மூன்று தொழில்களை உடைமையால், ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள் பொருளேயாம்'' எனத் திருவள்ளுவரின் அடிச் சுவட்டைப் பின்பற்றியே, தாமும் அறிவுறுப் பாராயினர்.

தெய்வப்புலவர் :

இங்ஙனம், தருக்க நெறிமுறையைத் தழுவியும், பகுத்தறிவுப் பண்புக்கு முரணாமலும், சிறந்த முறையில் முதன்முதலாக நூல் வழக்கின்கண் வைத்து தெய்வமுண்மையை நிறுவிய சிறப்புக்குரியவர், திருவள்ளுவரேயாவர். திருவள்ளுவருக்கு முன்னரும், தெய்வங்கொள்கையும் வழிபாடும் சிறப்புற நிலவி வந்தனவாயினும், நம்மனோர்க்குக் கிடைத்துள்ள தமிழிலக்கிய நூற்றொகுதியை ஆராய்ந்துணருங்கால், இச்சிறப்புக்கு முதன் முதலாக உரியவர் திருவள்ளுவரே என்பது தெற்றெனத் தெரிகின்றது. தெய்வ உண்மையையும், தெய்வ வழிபாட்டையும் நூற்பொருளின் வைத்து வற்புறுத்தி விளக்கியவர், திருவள்ளுவரே எனல் மிகையன்று. அதுபற்றியே அவருக்குத் 'தெய்வப்புலவர்' என்னும் சிறப்பியற் பெயர் வழங்குவதாயிற்று.

முடிவுரை :

தெய்வப் புலவர் என்னும் தொடருக்கு, 'மனிதராய் நம்மனோர் போலக் கல்வி கற்று வந்த எளிய புலமையுடையவர் அல்லர்; தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த பெரும் புலவர்' என்னும் குறிப்பிற் பொருள் கூறுவர். அது பொருந்துவதேயாயினும், உண்மைப்பொருள் அதனின் வேறு எனலாம். காக்கையைப் பாடிய பெண்பாற் புலவர் ஒருவர் 'காக்கை பாடினியார்' என வழங்கப் பெற்றாற்போல, 'தெய்வ முண்மை நிறுவித் தெய்வவழிபாட்டை நூன் முகத்தால் விதித்து வற்புறுத்தியருளிய தனிமுதற் பெரும்புலவர்' என்னும் கருத்திலேயே, திருவள்ளுவர் ''தெய்வப் புலவர்'' என விதந்தெடுத்துச் சிறப்பிக்கப் பெற்றார் எனப் பொருள் கொள்ளுதல், மிக்க பொருத்தம் உடையதாகும். வாழ்க திருவள்ளுவர்! வளர்க திருக்குறள்! —ஆசிரியர்.

"வல்லி செய்த வல்லபம்"

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை:

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியின்கண் உள்ள, அருளுருவாகிய அம்பிகையின் துதிநூல்கள் பலவற்றுள் தலைசிறந்த தொன்ருகத் திகழ்வது, அபிராமி அந்தாதி. அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்ருகவும், தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலமாகவும் சிறந்து விளங்கும் திருக்கடவூர்* அருள்மிகு அபிராமி அம்மையின் மீது, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த அபிராமி பட்டர் என்னும் பக்தர் பாடியருளிய அபிராமி அந்தாதியின் பாடல்கள் ஒவ்வொன்றும், சொற்பொருட் சுவை நலன்கள் நிறைந்த அற்புத அமைப்பு வாய்ந்ததாகும். அவற்றுள்,

''ககனமும் வானும் புவனமும்
காண, விற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு
மாற்குத் தடக்கையும், செம்
முகனும், முந்நான்கு இருமூன்று எனத்
தோன்றிய மூதறிவின்
மகனும், உண் டாயதன்ருே? வல்லி!
நீ செய்த வல்லபமே''

என்பது, ஓர் அரிய அழகிய இனிய திருப்பாடல். இத் திருப்பாடலின் பொருள்நலம், உள்ளு தொறும் உலப்பிலாச் சுவை துளும்பி, நம்மனோரின் உள்ளம் கொள்ளைகொள்ளும் சிறப்புடையது ஆகும். இதன் பொருள் வருமாறு:

பொருட்சுருக்கம்:

அபிராமி அம்மையாகிய வல்லியே! மேலுலகங்களும், விண்ணுலகமும், மண்ணுலகமும் காணும்படி, வில்லை உடைய மன்மதனின் உடலை முன்பு ஒருகாலத்தில் எரியும்படி செய்து அழித்த, தவத்தில் வல்ல தலைவனுகிய சிவ பெருமானுக்கு, மிகப்பெரிய திருக்கைகளும், சிவந்த திருமுகங்களும், முறையே பன்னிரண்டும் ஆறும் எனும்படி தோன்றியருளிய, பேரறிவினை உடைய முருகனுகிய சிறந்த புதல்வனும் உண்டாகும்படி செய்தது, நீ செய்தருளிய வல்லமைச் செயலே யன்ருே! என்பது, இப்பாடலின் இனிய பொருட் சுருக்கம். எனினும், இதன் ஒவ்வொரு சொல்லும் சொற்ருெடரும் சிந்தனைக்குப் பெருவிருந்தாய், நுட்பமான சிறந்த பொருட்டிறம் உடையது.

நுண்பொருட்டிறம்:

(1) சிவபெருமான் காலசம்மாரம் ஆகிய வீரச்செயல் நிகழ்த்திய திருக்கடவூர்த் தலத்தைப் பாடுங்கால், அப்பெருமான் நிகழ்த்திய வேருெரு பெரிய வீரச் செயலையும் இங்கு ஆசிரியர் நினைவு கூர்கின்ருர்.

(2) எத்தகைய பெரு வீரராயினும், காமனை வெல்லுதல் ஆற்ருமல், தோல்வியுற்று இடர்ப்பட்டு இழிந்து நிற்பர். அவனையும் வென்று புறங்கண்டு தகனம் செய்தமை, வீரச் செயல்களுளெல்லாம் மிக மேலான வீரச் செயலாதலின், அஃது இங்குச் சிறப்பாக நினைவு கூரப்பெற்றது.

(3) காலதேவனை வெல்ல விரும்புபவர் எவரும், முதற்கண் காமதேவனை வெல்ல வல்லவராதல் வேண்டும் என்பது குறிப்பு.

(4) விண்ணகத்துள்ளாரும் மண்ணகத்துள்ளோரும் ஆகிய அனைவருமே கண்டு வியந்து புகழும்படி, தன் நெற்றிக்கண்ணின் பார்வையால் காமதகனம் செய்தவனுதலின், ''ககனமும் வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம் முன் தகனம் செய்த பெருமான்'' என்று சிவபெருமானைப் புகழ்ந்தார்.

(5) காமத்தை விளைவிப்பவன் காமன்; அவனுக்குரிய படையும் அடையாளமும் வில்; ஆதலின் அவனை ''விற் காமன்'' என்ருர்.

(6) யோகிகளுள் எல்லாம் தலைசிறந்த பரமயோகியாதலின், சிவபெருமானைத் 'தவப் பெருமான்' என்ருர். 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு' என்றும்; 'ஒன்னுர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தால் வரும்' என்றும், தவத்தின் சிறப்பினைக் குறித்துத் திருவள்ளுவர் அருளிச் செய்ததனை, மெய்ப்பித்துக் காட்டியருளிய மேலோன் ஆதலின், ''தவப்பெருமான்'' என்ருர் எனினுமாம். 'தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன்' என்பது சங்ககாலப் பாடல்.

---

* இதனைப் பெரும்பாலோர் திருக்கடையூர் என்றே வழங்குகின்றனர். 'கடையூர்' என்ருல், மிகவும் இழிந்த, கடைப்பட்ட ஊர் என்று பொருள்படும். அங்ஙனம் வழங்குதல் மிகப் பெரிய பிழையும், பாவமும் ஆகும். தேவர்கள் அமிர்த கடம் வைத்த இடம் ஆதலின், கடவூர் (கடம்+ஊர்) எனப் பெயர் பெற்றது. தமிழில் குடம் என்பது, வடமொழியில் கடம் என வழங்கும். —ஆசிரியர்.

(7) அருந்தவத்தோன் ஆகிய சிவபிரானை, யோகநெறியினின்று மாற்றிப் போகநெறியில் ஈடுபடுமாறு செய்து, மணம்புணர்ந்து தழுவியது மட்டுமேயன்றி, அவனுக்குச் சிறந்த மகனையும் பெற்றுக் கொடுத்து, அவனையும் உலகத்தையும் மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்த பெருஞ் சதுரப்பாடு உடையவள் அம்பிகையாதலின், அவளது அரும்பெரும் சதுரப்பாட்டினை 'வல்லபம்' (வல்லமை மிக்க செயல்) என்று புகழ்ந்து பாராட்டினர். 'தவப்பெருமாற்கு மகனும் உண்டாயது நீ செய்த வல்லபமே யன்றோ!' என்று கூட்டுக. 'மகனும்' என்ற எச்ச உம்மை, நீ மனைவியாக அமைந்ததும் அன்றி' என இறந்தது தழீஇயது.

(8) 'வல்லி நீ செய்த வல்லபம்' என்னும் தொடரில், 'வல்லி' என்னும் சொல் 'பூங்கொடி போன்றவள்' 'வல்லமை மிக்கவள்' என்னும் இரு பொருள்களை உணர்த்தி இரட்டுறமொழிதலாய் நின்றது.

(9) மகப்பேறு வாய்த்தல் 'தம் தம் வினையான் வரும்' என்றபடி, சிறந்த நல்வினைப் பயனாலேயே அமையும்; அதுதானும் 'பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற' என்றபடி, அறிவறிந்த மகப்பேறாக அமைதல், மேலும் மிக்க சிறப்பும் அருமைப்பாடும் உடையதாதலின், ''மூதறிவின் மகன்'' என்றார். ஞானந்தான் உருவாகிய நாயகன் முருகன் என்பதனைப் புலப்படுத்தியபடி.

(10) இனி 'தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்றபடி, தந்தையினும் மைந்தன் பலவகைகளிற் சிறந்தவனாகத் திகழ்தல் விரும்பத்தக்கதாதலின், ஐம்முகமும் எண் கையுமே உடைய சிவபெருமானுக்கு, அவனினும் மேம்பட்ட நிலையில் ஆறுமுகமும் பன்னிரு கையும் உடைய சிறந்த மகனைப் பெற்றளித்த அம்பிகையின் செயலைப் பெரிதும் வியந்து, ''நீ செய்த வல்லபம்'' என்று புகழ்ந்து போற்றி மகிழ்ந்தார். 'செம்முகன் இருமூன்று, தடக்கை முந்நான்கு' எனக் கூட்டுக; நிரனிறை. முகம்-முகன் என வந்தது கடைப்போலி. வல்லி-கொடி. வல்லிபோல் பவளை வல்லி என்றார். இயலால் வல்லிக்கொடி போலும் மெல்லியளே யாயினும், செயலால் வன்மையும் நன்மையும் உடையை என்பார் 'வல்லி நீ செய்த வல்லபமே' என்று வியந்தார்.

(11) இனி, உலகத்து மக்களெல்லாம் ஆணும் பெண்ணுமாய் இணைந்து, சையோகத்தால் மகப்பேறு எய்துவர். அங்ஙனம் புலன் வழிப்பட்ட சையோகத்தால் மகப்பெறாமல், புலனடக்கம் சான்ற தவயோகத்தால் மகப்பேறு எய்துதல் மாட்சிமை மிக்கது என்பது, ஈண்டுக் குறிக்கப் பெற்றது. சிவபாத இருதயரும் பகவதியாரும் வெறும் சையோகத்தாலன்றி, இறைவனை வேண்டும் தவயோகத்தாலேயே திருஞான சம்பந்தரைப் பெற்றெடுத்தனர் என்பது உளங்கொளத் தக்கது. மேலும் சிவபிரான் காமதகனம் செய்த பின்னரே, குமார சம்பவம் நிகழ்ந்த திறம், நம்மனோர் நன்கினிது ஊன்றி உணரற்பாலது.

(12) ''உள்ளதன் தன்மை, சத்தி. நல்லதன் தன்மை, சிவம். இவை இரண்டும் பிரிந்திருந்த நிலையில் தீமைகள் குதூகலித்துக் குதித்தன. சுவர்க்கம் இழக்கப் பெற்றது. உண்மையும் நன்மையும் (சத்தியும் சிவமும்) மணந்து, ஒன்றுபடுதல் வேண்டும். அப்போதுதான் உலகை உய்விக்கும் தனிப்பெருந் தலைமகன் (முருகன்) தோன்றுவான். உண்மையையும் நன்மையையும் ஒன்று சேர்ப்பதற்குக், காம உணர்ச்சியின் மூலம் முயற்சி நிகழ்ந்தது. அது கண்டு இறைவனுக்குச் சீற்றம் எழுந்தது. அதன் விளைவு ஏமாற்றமாய்ப் பெரும் துன்பத்தில் முடிந்தது. இறுதியில் தவத்தினால் பெற்ற தூய்மையின் வாயிலாக, உண்மையும் நன்மையும் தம்முள் இணைந்து மணந்தன. தனிப்பெரும் தலைமகன் தோன்றியருளினான். தீமைகளை எதிர்த்து அழித்தான். சுவர்க்கம் மீண்டும் கிடைக்கப் பெற்றது'' என்று இரவீந்திரநாத தாகூர் அவர்கள், தாம் எழுதிய 'மனிதனின் சமயம்' என்னும் நூலிற் குறிப்பிடுவது, இங்கு நாம் அனைவரும் குறிக்கொண்டு போற்றத்தக்கதாகும்.†

ஒரு குறிப்பு:

[இச் செய்யுளில் ''ககனமும் வானும் புவனமும் காண'' என்று வரும் தொடரின் பாடம், பிழைபட்டதாகத் தோன்றுகின்றது. 'ககனம்' என்னும் சொல்லுக்கே 'வானம்' என்னும் பொருள் உண்டு. ஆதலின் 'ககனமும்' என்றதன் பின்னர் மீட்டும் 'வானும்' என்று வருதல் பொருந்தாது. அது 'மானும்' என்று இருத்தல் வேண்டும். காமதகனம் நிகழ்ந்த போது, காமனுடன் இரதிதேவியும் இருந்தாள். காமன் எரிந்து சாம்பலாகியதனை இரதிதேவி கண்டு புலம்பினாள். ஆதலின், 'மான்போன்ற இரதிதேவியும் மருண்டு காணும்படி' என்னும் பொருளில், ''ககனமும் மானும் புவனமும் காண'' என்றே பாடம் இருந்திருத்தல் வேண்டும் என்று, தமிழ்க்கடல் அருட்திரு மறைமலையடிகளார் ஒருசமயம் குறிப்பிட்டருளினார். இஃது அன்பர்கள் அறிதற்குரியது].

முடிவுரை:

இத்தகைய அரிய பெரிய நுண்பொருள்கள் பலப்பல அமைந்த, அழகிய இனிய செய்யுட்களைக் கொண்ட, அபிராமி அந்தாதி என்னும் அம்பிகையின் துதிநூலை, நாம் அனைவரும் நாள்தோறும் அன்புடன் ஓதி, அம்பிகையின் அருளால் 'சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு' வாழ்வோமாக!

---

† "This is the eternal problem of man. The evil spirit is exultant and paradise is lost when Sati the spirit of Sat (Reality), is disunited from Siva, the spirit of Goodness. The Real and the Good must meet in wedlock if the hero is to take his birth in order to save all that is true and beautiful. When the union was attempted through the agency of passion, the anger of God was aroused and the result was a tragedy of disappointment. At last, by **purification through penance**, the wedding was effected, the hero was born who fought against the forces of evil and paradise was regained".

—**Religion of Man, p. 53,**
—*Rabindranath Tagore.*

அம்மையப்பர்

முன்னுரை:

எல்லாம் வல்ல இறைவன், தனக்கென ஓர் உருவமும் ஒரு பெயரும் உடையவன் அல்லன். ஆயினும் நம் பொருட்டு, இறைவன் பல உருவமும் பலபெயரும் கொண்டு விளங்கி அருள்கின்றான். அங்ஙனம் சிவபெருமான் உயிர்களின் பொருட்டுக் கொண்டருளிய திருவுருவங்கள் 25 என்றும், 64 என்றும் நூல்கள் குறிப்பிடும். அவற்றுள் 'அர்த்தநாரீசுவரம்' என்னும் திருவுருவமும் ஒன்று. அது வலப்பக்கத்தில் ஆண்கூறும், இடப்பக்கத்தில் பெண் கூறுமாக அமைந்து திகழும். 'மாதியலும் பாதியர்' 'மாதொருபாகர்' 'அம்மையப்பர்' என்னும் பெயர்களால் சான்றோர்கள் அத் திருவுருவத்தினைப் புகழ்ந்து போற்றுவர்.

அம்மையப்பர்:

இறைவன் ஆண் வடிவம் பாதியும், பெண் வடிவம் பாதியுமாக விளங்குதல், அவனே உலகுயிர்கள் அனைத்திற்கும் தாயும் தந்தையுமாக விளங்குகின்றான் என்னும் தத்துவத்தினை, உணர்த்தி நிற்கின்றது. கடவுள் நம்பிக்கையும் கொள்கையும் இல்லாதவரும்கூட, உலகில் தாய் தந்தையரின் சிறப்பினையும், இன்றியமையாமையினையும் மறுத்தல் இயலாது. அதனால் தான் நம் முன்னைத் தமிழ்ச் சான்றோர்கள், கடவுளை அம்மையப்பர் எனக் கொண்டு சிறப்புற வழிபட்டுப் போந்தனர். ''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக! அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர்'' என்பது திருக்களிற்றுப் படியாரில் வரும் திருமொழி.

இவ்வுலகியற்கை யமைப்பினை நாம் கூர்ந்து காண்போமாயின், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் அனைத்திலும், ஆண் பெண் பாகுபாடு அமைந்து கிடத்தலைக் காணலாம். புற்பூண்டுகளிலும், மரஞ் செடி கொடிகளிலும், ஆண் பெண் அமைப்பு தவறாமற் பொருந்தியுள்ளது. கற்களிலும்கூட, ஆண்கல் என்றும், பெண்கல் என்றும் பாகுபாடுகள் இருப்பதாகச் சிற்பிகள் கூறுகின்றனர். நமது உலகியல் வாழ்வுகள் அனைத்தும், இறைவன் இங்ஙனம் ஆணும் பெண்ணுமாக இயைந்து ஒன்றி நிற்கும் பெற்றியின் விளைவேயாகும்.

''ஆதியே உலகத்தில் ஆணொடு
பெண்ணுமாய் அணை காரியம்,
நாதன் நாயகி யோடு கூடி
நயந்த காரணம் என்பரே''

—சித்தியார்.

மணிவாசகர்:

'கந்தழி' எனப்படும் கடவுளின் இயல்பினை உண்மையாற் கண்டு உணர்ந்த சான்றோர் என, உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், மணிவாசகப் பெருமானை வியந்து புகழ்ந்து குறிப்பிடுகின்றார். அத்தகைய பெருஞ் சிறப்புக்குரிய அருளாளரான மணிவாசகப் பெருமான், ''இறைவன், தன் பாதி ஆண் வடிவத்தில் தோல் உடுத்துக் குழை அணிந்தும், பால் வெள்ளை நீறு பூசிச் சூலம் ஏந்தியும் திகழ்கின்றான்; பிறிதொரு பாதி பெண்வடிவத்தில் துகில் உடுத்துத் தோடு அணிந்தும், பசுஞ் சாந்து பூசிப் பைங்கிளி ஏந்தி, வளையல்கள் தரித்தும் வயங்குகின்றான்'' என்கின்றார். மேலும் அம்மை அப்பர் அல்லது அர்த்தநாரீசுவரர் என்னும் இத்திருவுருவமே, இறைவனின் திருவுருவங்கள் பலவற்றுள்ளும் மிக்க பழமை வாய்ந்தது என்றும், பின்வரும் திருவாசகப் பாடலிற் குறிப்பிட்டருளிச் செய்கின்றார்:

''தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க
வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பி''

திருவாசகம்:

இறைவனின் ''தொன்மைக்கோலம்'' ஆகிய இவ் அர்த்தநாரீசுவர வடிவத்தினைக் குறித்து, மாணிக்கவாசகர் பல இடங்களிற் சிறப்பித்துப் பாடியுள்ளார். 'திருவெம்பாவை' என்னும் சிறந்த இனிய திருப்பதிகத்தின்கண், பாவை நோன்பு நோற்கும் மகளிர் பலரும் சேர்ந்து சென்று நீராடும் மடு ஆகிய பொய்கையானது, 'கருங்குவளை மலர்களாலும், செந்தாமரை மலர்களாலும், குருகுகள் ஆகிய நீர்ப்பறவைகளை யுடைமையாலும், அரவங்கள் மிக்கிருத்தலாலும், தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலாலும், எங்கள் பிராட்டியும் எங்கோனும் பிரிவற ஒன்றி நிற்கும் அர்த்தநாரீசுவரத் திருவுருவம் போன்று இசைந்து உள்ளது'' என்னும் அழகிய இனிய கருத்து அமையும்படி,

''பைங்குவளைக் கார்மலரால்,
செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகு இனத்தாற்,
பின்னும் அரவத்தால்,
தங்கள் மலங்கழுவுவார்
வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்து
பொங்கும் மடு''

என்று அவர் பாடியிருப்பது, யாவரும் அறிந்த தொன்று. ''குவளைக்கண்ணி கூறன் காண்க, அவளும் தானும் உடனே காண்க'' என்றாற்

போல, வேறு பல இடங்களிலும்கூட, மணிவாசகர் இத்தொன்மைக் கோலத்தினை, விதந்து புகழ்ந்து பாடிப் போற்றுவர்.

திருக்கோவையார் :

திருவாசகத்தின்கண் இங்ஙனம் அர்த்தநாரீசுவரத் திருவுருவினைப் புகழ்ந்து பாடிப் பரவும் மணிவாசகப் பெருமான், தாம் இயற்றியருளிய திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் சிறந்த தெய்விக ஞானச் செந்தமிழ் நூலிலும், அத்திருவுருவத்தினைத் தகவுறக் குறித்து மிகவும் சால்புறத்துதித்து மகிழ்கின்றார். இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றுத் தாம் எய்திய பேரின்பம் ஆகிய சிவானுபவ நலங்களைத் திருவாசகம் என்னும் செந்தமிழ் மாமறையாகப் பாடியருளிய மாணிவாசகர், அப்பேரின்ப அனுபவம் பற்றிய செய்திகளை 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் தமது பெருங் கருணைப் பெற்றியினால், நம்மனோரும் உணர்ந்து உய்யும் பொருட்டு, நாம் அறிந்த சிற்றின்பச் செய்திகளோடு சேரவைத்து, இனிய தமிழியற்றிறங்கள் எல்லாம் அமையும் வண்ணம், இலக்கியச் சுவை நலம் பலவும் பெருகப் பாடியளித்தருளிய அரும் பெறல் நூலே, திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் நூல் ஆகும். இதனைத் திருக்கோவையார் எனவும் பெரியோர் வழங்குவர்.

ஞானப்பனுவல்:

சிற்றின்பச் செய்தியோடு பிணைத்துப் பேரின்ப அருளனுபவ நலங்களை விளக்கும் பெற்றியில், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல், தன்னிகரற்றுத் தலை சிறந்து திகழ்கின்றது. ''பாவை பாடிய வாயாற் கோவை பாடுக'' எனச் சிவபிரானே விரும்பிக் கேட்டுக் கொண்டபடி, மணிவாசகர் இதனைப் பாடி அருளினர் என்பர் பெரியோர். இதனால் இந்நூல் திருவாசகத்தினையும் விடக்கூட, ஒரு வகையில் மிக்க சிறப்புடையது எனலாம். முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து திணைகளையும் உறுப்பாகக் கொண்டு அமைந்து, தன்னை ஓதிப் பயில்வோர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உயரிய நான்கு உறுதிப் பொருள்களையும் அளிக்கவல்லது திருச்சிற்றம்பலக் கோவையார். ஆதலின், ''ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப்பனுவல்'' எனக்குமரகுருபர சுவாமிகள், தாம் இயற்றிய சிதம்பர மும்மணிக்கோவை என்னும் நூலில், இதனைத் திறந்தெரிந்து சிறந்தெடுத்துப் புகழ்கின்றார்.

அகப்பொருள் :

இத்தகைய பெருஞ்சிறப்புடைய திருச்சிற்றம்பலக் கோவையாரின் செய்யுள் ஒன்றில், சிவபிரான், 'தொன்மைக் கோலம்' ஆகிய அர்த்தநாரீசுவரத் திருவுருவம் கொண்டு போந்து, தம்மை ஆட்கொண்டருளிய செய்தியினை மணிவாசகர் அழகுறவும் சுவை மிகவும் குறிப்பிட்டுரைக்கின்றார். சிற்றின்பச் செய்திகளில் வைத்துப் பிணைத்துப் பேரின்ப அருளனுபவ நலங்களை விளக்கும் பெற்றிமையினைத் தெற்றென உணர்த்தும் பாடல்களில், அத் திருப்பாடல் அழகிய தொன்றாக அமைந்து காணப்படுகின்றது. அஃது அகப்பொருளில் வைத்து அருட்பொருளை அழகுற விளக்குகின்றது.

ஓர் ஊரில் ஓர் ஒப்பற்ற தலைமகனும், தலைமகளும் தம்மிற் காதலித்து மணந்து கொண்டு இல்லற வாழ்வு நடத்தி வருகின்றனர். 'ஊடுதல் கூடுவதற்கு இன்பம்' பயப்பது. ஆதலின், தலைமகள் தலைமகன்பால் ஏதோ ஒரு காரணம் பற்றி, ஊடல் கொண்டு புலந்து நிற்கின்றாள். ''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நினையுங் காலைப் புலவியுள் உரிய'' என்பது தொல்காப்பியம். ஆதலின் தலைமகன் அவளைப் பணிந்து இன்சொற் கூறி ஊடல் தணிக்க முயல்கின்றான். 'உப்பு அமைந்தற்றாற் புலவி' என்னும் நுட்பம் அறியாத தலைமகள், பணிமொழி பல பகர்ந்து வணங்கவும் தலைமகன் பாற் புலவி தவிராது, மேன்மேலும் ஊடி நிற்கின்றாள். அதுகண்ட தலைமகன், தானும் அவள்பால் ஊடல் கொண்டவன் போல நடித்து, அன்பு திறம்பி விடுவதுபோலும் நிலையில், ஒரு சிறிது சினக் குறிப்புத் தோன்றப் பின்வருமாறு பேசுகின்றான்.

''முன்பு ஒரு சமயம், யான் பொதிய மலைச் சாரலில் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு ஓர் அமிழ்தம் போன்ற பெண் வந்தாள். பெண்களில் அமிழ்தம் என்று புகழத் தக்கவள் அவள்; அவளது கண்கள் குவளை மலர்போல அழகியனவாக இருந்தன. நாணம் தோன்ற அவள் தன் கடைக்கண் பார்வையினால் என்னை இனிதாக நோக்கினாள். அவ்வழகிய கடைக்கண் நோக்கத்தினால் தனது உள்ளக் கருத்தை எனக்கு அவள் குறிப்பாகப் புலப்படுத்தினாள். என் நெஞ்சம் உருகும்படி செய்தாள்; எனக்குச் சிறந்த பெருந் தேன் போலச் சுவையும் இன்பமும் விளைவித்தாள்; என்னைக் கவர்ந்து தன் வயம் ஆக்கிக் கொண்டாள்; அத்தகைய இனிய சிறந்த பெண் அமிழ்தம் ஆகிய நம் காதலி, இவள் அல்லள். இவள் அவளின் வேறுபட்ட ஒருத்தி. அவளே போன்று இவள் தோன்றுவது, ஏதோ ஒரு மாயம் போலும்! நெஞ்சே! இனி நீ வருந்தற்க''.

என்றிங்ஙனம், தலைவன் தனக்குள் பேசிக் கொள்ளும் முறையில், 'ஊடல் நீட வாடியுரைத்தல்' என்னும் அகப்பொருள் இலக்கணத்தின் துறையில், பின்வரும் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுள் வருகின்றது.

''திருந்தேன் உயநின்ற சிற்றம்பலவர்
தென்னம் பொதியில்
இருந்தேன் உயவந்து, இணைமலர்க்
கண்ணின் இன்நோக்கு அருளிப்
பெருந்தேன் எனநெஞ்சு உகப்பிடித்து,
ஆண்டநம் பெண் அமிழ்தம்,
வருந்தேல் அதுவன்று; இதுவோ
வருவதோர் வஞ்சனையே''

அருட்பொருள் :

இத்திருச்செய்யுள், மேலாக நோக்கு தற்கு ஏதோ ஒரு தலைமகனும் தலைமகளும் பற்றிய சிற்றின்பக் காதற் செய்தியைக் கூறுவது போலத் தோன்றினும், ஊன்றிக் காண்போர்க்கு மணிவாசகரின் உயர்ந்த ஞான அனுபவப் பேரின்பச் செய்தியினையே உணர்த்துவதாக இருத்தல் காணலாம். 'தொன்மைக்கோலம்' ஆகிய அர்த்தநாரீசுவரவடிவில் வந்து தம்மைச் சிவபிரான் ஆட்கொண்டருளிய செய்தியினையே, மணிவாசகர் இப்பாடலில் மிக நுட்பமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தி யருள்கின்றார்.

''ஒருவாற்றானும் திருந்தாத இயல்புடைய வன் யான்! இறையருளைப் பெற எத்தகைய சிறு முயற்சியும் செய்யாது, யான் வறிதே கிடைந்தேன். அத்தகைய யான், பிறவித் துன்பங்களினின்று தப்பி யுய்யும் வண்ணம் 'பெண்ணோடு கூடிய அமிழ்தம்' எனத் தக்க அம்மையப்பர் ஆகிய சிவபெருமான், தமது தொன்மைக் கோலத்துடன், பொதியில் ஆகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தில், தானே தன் அருளால் எழுந்தருளிப் போந்தான். என்னைத் தனது கடைக் கண்ணால் இனிதாக நோக்கித் தீக்கை புரிந்தான். என் நெஞ்சை உருகச் செய்து, எனக்குத் தேனைப் போல இனித்தான். என்னைப் பிடித்துத் தன்வயம் ஆக்கிக் கொண்டான். ஒரு தகுதியும் முயற்சி யும் இல்லாத எளியேனை இங்ஙனம் அவன் ஆட்கொண்டருளியதனை நினைக்குங்கால், அஃது ஏதோ ஒரு மாயம் ஆகிய செயல் போலவே எனக்குத் தோன்றுகிறது.''

முடிவுரை:

என்றிங்ஙனம், சிறந்ததோர் இனிய உள் ளுறை ஞானப் பொருளும், இத் திருச்சிற்றம் பலக்கோவையார் செய்யுளின்கண், அமைந்து விளங்குகின்றது. இத்தகைய அரிய இனிய நானூறு பாடல்கள் கொண்டதாக, இணையற்று இலங்கும் புனித நூல், திருச்சிற்றம்பலக் கோவையார்! அப்புனிதப் பெரு நூலை, நாம் அனைவரும் அன்புடன் பலகாலும் ஓதி யுணர்ந்து, நலம்பல பெற்று உய்ய முயலு வோமாக!

—ஆசிரியர்.

அருள்மிகு அலர்மேல் மங்கைத் தாயார் உடனுறை சீநிவாசப் பெருமாள், செங்கற்பட்டு.

திருக்குறளும் ஞானிகளும்

தவத்திரு ஊரன் அடிகள்,

சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், சமயபுரம்.

முன்னுரை:

திருக்குறள் ஒரு ஞான நூல் என்பதும், திருவள்ளுவர் ஒரு ஞானி என்பதும், அனைவரும் ஏற்கும் கொள்கை.

> தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்.

என்னும் ஒளவையார் திருவாக்கைக் காண்க. ஞான நூல்கள் பலவற்றுள் சொல்லப்பெறாத உண்மைகள், நீதிநூல் எனப்படும் தேவர் குறளிற் காணப்படும். ஞான நூல்களில் சுற்றி வளைத்தும், இலை மறைகாயாகவும் கூறப்படும் உண்மைகள் திருக்குறளில் நேரிடையாகவும் வெளிப்படையாகவும் அழுத்தந்திருத்தமாகவும் கூறப்படும். திருக்குறள் ஞானச் சிறப்பில், திருமந்திரம், திருவாசகம் முதலியவற்றை ஒப்பது; திருக்குறளில் கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல், தவம், நிலையாமை ஆகிய அதிகாரங்களிற் காணப்படும் கருத்துக்கள் ஞான நூலுணர்வுடையாரை இறும்பூ தெய்தச் செய்வன. யாக்கை நிலையாமையை ஞான நூல்கள் பலவாறு கூறும் எனினும், 'குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே உடம்போ டுயிரிடை நட்பு'' என்னும் குறட்பாவின் முன்னர் வேறெதுவும் நிற்கு மாறில்லை.

பின்வந்த புலவர்கள் மிகப் பலா திருக்குறளைத் தத்தமது நூல்களுள் எடுத்தாண்டுள்ளனர். திருக்குறளை எடுத்தாளுவதும் மேற்கோள் காட்டுவதும், தமக்கும் தம் நூலுக்கும் ஒரு சிறப்பெனவே அவர்கள் கருதினர். புலவர்கள் மட்டுமன்றி ஞானிகளும் திருக்குறளை எடுத்தாண்டும் மேற்கோள் காட்டியும் உள்ளனர். பின்னூலாசிரியர் ஒருவர் முன்னூலொன்றை எடுத்தாள்வதும் மேற்கொள் காட்டலும் ஒரு வழக்கும் ஆகும். ஆயினும் ஞானநூல்கள் செய்யப் புகுந்த ஞானிகள்தாம் சொல்லும் ஞானக் கருத்துக்களுக்கு அரணாகத் திருக்குறளை எடுத்துக் காட்டுகின்றனரெனின், திருக்குறளின் ஞானச் சிறப்பை என்னென்பது. இலக்கியங்களிற் சிந்தை செலுத்தாத ஞானிகளும் உள்ளத்தைத் திருக்குறளிடத்துப் பறிகொடுத்தாரெனின், திருக்குறளின் தெய்வச் சிறப்பை-அருட்சிறப்பை-ஞானச்சிறப்பை என்னென்போம். திருவள்ளுவர் ஞானிகளுக்கு ஞானி என்றும், திருக்குறள் ஞான நூல்களுக்கு ஞான நூல் என்றும், யாம் கூறின் அது மிகையாகுமோ? திருவள்ளுவர்க்கு வழங்கும் வேறு பெயர்களாகிய தெய்வப் புலவர், தேவர், நாயனர் என்பவையே அவர் ஒரு ஞானி, தெய்வீகர், அருளாளர் என்பதைக் காட்டும். அவருக்குக் கோயிலெடுக்கப்பட்டதும் இது கருதியே. இஃதுணராது பிற கலைநூற் புலவரோடொருவராய், எட்டுத்தொகை பத்துப் பாட்டு முதலியவற்றைப் பாடிய பலநூறு புலவர்களுடன் திருவள்ளுவரையும் ஒருவராய் வைத்து எண்ணுதல் அபசாரம். ஞானியாகிய திருவள்ளுவரை ஒரு குறிப்பிட்ட சமய ஞானியாகக் கொள்ளாது சமரச ஞானியாகவே கொள்ள வேண்டும். அவர் சமயங்கடந்தவர். 'சமயக் கணக்கர் மதிவழி கூறாதுலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்' என்னும் கல்லாடனர் கருத்துகை காண்க.

இனித் திருவள்ளுவர்க்குப் பின் வந்த ஞானிகள் திருக்குறளைக் கண்டவாற்றைக் காண்போம்.

அகரமுதல:

திருக்குறளின் தொடக்கமே, 'அகர முதல' என்னும் முதற்பாட்டே, ஞானிகளின் சிந்தையைக் கவர்ந்திருக்கிறது. பின்வரும் ஞானத்திருவாக்குகளே இதற்குச் சான்று.

''அகர முதலா யனைத்துமாய் நிற்கும்''

''ஆரும் அறியார் அகாரம் அவனென்று''

—திருமூலர் — திருமந்திரம்.

''அகரமுதலானை அணியாப்பனூ ரானை''

—ஞானசம்பந்தர்—தேவாரம்.

''ஆனத்தின்முதலெழுத்தாய் நின்றார் போலும்

—திருநாவுக்கரசர்—தேவாரம்.

''அகர முதலின் எழுத்தாகி நின்றாய்''

—சுந்தரர்—தேவாரம்.

''அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து''
—உமாபதிசிவம் —திருவருட்பயன்.

திருமூலர்:

திருமூலர் திருமந்திரம், திருமுறைபன்னிரண்டனுள் பத்தாவது. சாத்திரத்துக்குத் திருமந்திரம், தோத்திரத்துக்குத் திருவாசகம் என்று போற்றப்பெறுவது. பின்வந்த ஞானிகள் பெரியோர்கள் அனைவராலும் போற்றப் பெறும் அத்திருமந்திரத்திருநூலுள், ஆசிரியர் திருமூலர் திருக்குறட்டொடர்களையும் கருத்துக்களையும் எடுத்தாண்டிருக்கின்றனர்.

''அறிவுடையார் நெஞ்சொடுஆதிபகவனும்''
—திருமந்திரம்

(ஆதிபகவன்—குறள் 1)

''அறவாழி அந்தணன் ஆதிபராபரன்''
—திருமந்திரம்.

(அறவாழி அந்தணன்—குறள் 8)

''முடக்கி எழுவன மும்மத வேழம்
அடக்கி அறிவெனும் தோட்டியை வைத்தேன்''
—திருமந்திரம்

''உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங்
காப்பான். . . '' —குறள் 24

''அந்தண்மை பூண்ட அறவோர் ஆகத்துச்
சிந்தைசெய் அந்தணர்சேரும் செழும்புவி''
—திருமந்திரம்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்.
—குறள் 30

சுந்தரர்:

சுந்தரமூர்த்திகள் தேவாரம் திருநெல்வாயிலரத்துறைப் பதிகத்துள் ''அகரம் முதலின் எழுத்தாகி நின்ருய் அடியேனுய்யப் போவதோர்சூழல் சொல்லே'' ''பொறிவாயில் வைந்தினை யுமவியப் பொருதுன்னடியே புகுஞ் சூழல் சொல்லே'', ''அற்ருர் பிறவிக் கடனீந்தியேறி அடியேனுய்யப் போவதோர் சூழல் சொல்லே'', ''ஒடுபுனற்கரையாம் இளமை யுறங்கி விழித்தாலொக்குமிப் பிறவி வாடியிருந்து வருந்தல் செய்யாதடியே னுய்யப் போவதோர் சூழல் சொல்லே'' என்னும் திருவாக்குகளில், அகர முதல (1) பொறி வாயிலைந் தவித்தான் (6) பிறவிப் பெருங்கடல் (10) உறங்குவதுபோலும் (339) என்ற குறட்பாக்களைக் காண்கிருேம்.

சேரமான் பெருமாள்:

சேரமான் பெருமாள் நாயனுர் தமது திருக்கயிலாய ஞான உலாவில் (உலாக்களுள் இஃதொன்றே ஞான உலா எனப் பெயர்பெற்றது. முதல் முதலாக எழுந்ததாகலின் ஆதி உலா என்றும் பெயர்) இரண்டு குறட்பாக்களை அப்படியே எடுத்தாண்டுள்ளனர்.

''இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னும் சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
புல்கிய சாந்தொடு பூப்புனைந்து.''
—உலா, 136, 137.

''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளஎன்று பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்''
—உலா, 173.

திருக்கயிலாய ஞான உலாவின் இவ்வடிகளுள் ஆசிரியர், 'இல்லாரை எல்லாரும்' (751) கண்டு கேட்டு (1101) என்னும் குறள்களை எடுத்தாண்டதோடு, 'பண்டையோர்கட்டுரை' என்று திருக்குறளைச் சிறப்பித்தார்.

உய்யவந்த தேவநாயனுர்:

சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் திருக்களிற்றுப்படியார் என்பதொன்று. இது சிவஞான போதத்திலும் காலத்தால் முந்தியது. இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனுர் (திருஉந்தியார் ஆசிரியரும் இவரே). மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற இரண்டதிகாரத்தினுள்ளும் இரண்டு குறட்பாக்களைத் தம் நூலுள் எடுத்தாண்டுள்ளார்.

''சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானேதியானமுமாம்—சார்பு
கெடவொழுகில் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லை வினைப் பற்று.''
—திருக்களிற்றுப்படியார்,34

இவ்வெண்பாவில் எடுத்துக்காட்டப்பட்டது. திருக்குறள் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்திலுள்ள, 'சார்புணந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்' என்ற பாடலாகும். ஆசிரியர் உய்ய வந்ததேவ நாயனுர், இக்குறட்பாவைக் கொண்டு தம் நூலுள் தியான சமாதிகளை விளக்குகிருர்.

''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே மேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன்பால்''
—திருக்களிற்றுப்படியார் 40.

இவ்வெண்பாவுள் 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும்' (362) என்னும் அவாஅறுத்தல் அதிகாரக் குறட்பா எடுத்துக் காட்டப்பட்டது.

உமாபதிசிவம்:

சித்தாந்த சாத்திரம் பதினுன்கனுள் இன்னென்று நெஞ்சுவிடு தூது என்பது. இதன் ஆசிரியர் உமாபதி சிவாசாரியர், துறவு என்னும் அதிகாரத்திலுள்ள, 'தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்' (34) என்ற குறட்பாவை அப்படியே எடுத்துக் கூறியுள்ளார்.

''உன்னை ஒழிய உறவில்லை என்னுமது
தன்னை அறிவை தனியறிவை முன்னந்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லைவிரும்பாமல்''

—நெஞ்சுவிடு தூது

திருவள்ளுவரைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்றும், திருக்குறளை மெய்வைத்த சொல் என்றும் உமாபதி சிவம் சிறப்பிக்கிறார்.

கண்ணுடைய வள்ளலார்:

கண்ணுடைய வள்ளலார், சீர்காழி வள்ளலார் சந்தானத்துள் ஒருவர். ஞான சம்பந்தரை உபாசனை குருவாசக் கொண்டவர். இவர் செய்த ஒழிவிலொடுக்கம் வேதாந்த சித்தாந்த சமரச ஞான நூல். இதற்குத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் உரை செய்திருக்கின்றனர். 'வள்ளல்குருராயன்' என்ற இதன் சிறப்புப் பாயிரச் செய்யுளுக்கு மட்டும் திருவருட் பிரகாச வள்ளலார் வடலூர் இராமலிங்க அடிகள் ஒரு விரிவுரை செய்திருக்கின்றனர். இவ்வுரைகளுடன் இந்நூல் இராமலிங்க அடிகளால் 1851-ல் பதிப்பிக்கப்பட்டது. இந்நூற்கண் ஒரு செய்யுளில் ஆசிரியர் கண்ணுடைய வள்ளலார் துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற அதிகாரங்களையும் சிறப்பித்துக்கூறி அவை மூன்றும் அறு சமயத்தோர்க்கும் அறுதியிட்டுரைத்தது என்கின்றார். இன்னொரு செய்யுளில், பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் என்ற பாட்டு உமக்கு மட்டுமோ? அஃது எல்லாச் சமயத்துக்கும் பொது அன்றோ என்கின்றார்.

அறுசமயத் தோர்க்கு மறுதியிட்ட கூடற்
றுறவா யவாவறுத்தல் தூய்மை—பிறவா
முடிகளச முத்தி முயற்சி எல்லாம் மூத்த
கடைகரும நாசமிது காண்.

—ஒழிவிலொடுக்கம்

உரை:

சமயிகள் அறுவரும் வீடடைதற்கு நெறிவேறு வேறு கூறினர் ஆயினும், ஒருவர் கூறியது ஒருவர்க்குச் சம்மதம் அன்று, துறவால் மெய்யுணர்ந்து அவாவறுத்தல் அனைவர்க்கும் சம்மதமாம்; ஆதலின் 'அறு சமயத்தோர்க்கு மறுதியிட்ட கூடற்றுறவா யவா வறுத்தல்' என்றார். துறவும் அவாவறுத்தலும் கூறினமையான் இடையில் மெய்யுணர்வு வருவிக்கப்பட்டது. இங்ஙனம் சங்கப் பலகையின் மேல் ஏறிக் கூறிய மூன்றதிகாரங்கள் என்றது, திருக்குறளும் துறவாதி மூன்றதிகாரங்களையுமாம் என்றறிக:

பாசங் கழன்றால் பசுவுக் கிடம்பதியா
மூசல் வடங்கழன்ற தொல்லாதோ—நேசித்த
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் பாட்டுமக்கோ
மற்றைச் சமயமெங்கு மாம்.

—ஒழிவிலொடுக்கம்

பாச நீக்கமும் பதியடைவும் கூறப்புகுந்த ஆசிரியர் 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப்படும்' (349) என்ற குறட்பாவை எடுத்துக்காட்டி, இப்பாட்டு உம் சமயத்துக்கு மட்டுமோ மற்றை எல்லாச் சமயத்துக்கும் ஆம் என்று, சமயாதீதப் பேருண்மையையும் நிலைநாட்டுகின்றார். 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்னும் திருவாய்மொழியும் ஈண்டு நினைத்தற்பாலது.

சிவப்பிரகாசர்:

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பல நூல்களின் ஆசிரியர். வீரசைவத்துறவி. சுவாமிகளின் வாக்கில் திருக்குறட் பாக்களும் தொடர்களும் கருத்துக்களும் திகழுமிடங்கள் பல. சிலவற்றைக் காண்போம்.

''பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரின் ஏங்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்ன மாடு மகன்துறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
நன்றறறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே''

—நால்வர் நான்மணிமாலை

அறத்தாறிதுவெனவேண்டா (37) என்னும் குறட்பா, நால்வர் நான்மணி மாலைப் பாடல் இன்னொன்றில் முழுமையாக எடுத்தாளப் பெற்றுள்ளது. சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூதுள், அழுக்காறவா வெகுளி (35) இரப்பாரை யில்லாயின் (1056) என்ற இரண்டு குறட்பாக்கள் அருமையாக எடுத்தாளப்பட்டுள்ளன. திருவெங்கைக் கோவையுள் பல இடங்களில் குறட்பாக்கள் முழுமையாகவும், தொடர்களும் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. திருவெங்கைக் கலம்பகம் 42-ஆம் செய்யுளில்,

''என்னடிகள் வெண்குறனே ரடியிரண்டு
மென்றலைமே லிருத்து மிறை. . .''

எனவரும் பகுதி மிக்க அழகிது. என்னடிகள் என்றது திருவள்ளுவரை. திருவள்ளுவரின் திருக்குறள் அடி இரண்டையும் தலைமேல் இருத்துதல், இறைவன் திருவடி இரண்டையும் தலைமேல் இருத்துதல் ஆகிய சிலேடைப் பொருளில் நயம்படக் கூறி ஆசிரியர் சிவப்பிரகாசர் திருவள்ளுவரைச் சிறப்பிக்கிறார்.

இராமலிங்க அடிகள்:

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் (1823-1874) திருவருட் பாவை அருளிச் செய்தவர். அத்திருவருட்பா முதல் திருமுறையுள், நெஞ்சறிவுறுத்தல் என்னும் நீண்ட கலிவெண்பாவில், குறட் பாக்களையும் தொடர்களையும் கருத்துக்களை யும் பல இடங்களில் அடிகள் எடுத்தாண்டுள்ள னர். சில காண்போம்.

கூத்தாட்டவைசேர்குழாம்விளிந்தாற்போலுமென்ற
சீர்த்தாட் குறள் மொழியுந் தேர்ந்திலையே''

—நெஞ்சறி

''செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே மல்லல்
பெறத்
''தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே துன்னி

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்
திகழ் வாய்மையும் நீதெளியாய்—இகழ்வாரை''

—நெஞ். 433-435

''உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய்—கறங்கின்
நெருதல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தாய்-தெருவில்''

—நெஞ். 446, 447

திருக்குறள் வகுப்பு:

பொதுமக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளற்பெருமானே. தம் மாணவர் உபய கலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலா யுத முதலியாரைக் கொண்டு அடிகள் திருக் குறள் வகுப்பை நடத்தினர்கள். இது பற்றிச் சுவையான வரலாறொன்றும் அறியப்படுகிறது. கற்றூர், கல்லார், இளைஞர், முதியோர் எனப் பலதரத்தினரும், வகுப்புக்கு வந்தனர். வேலா யுத முதலியார் தமது இருமொழிப்புலமை, கல்வியாற்றல், பரந்த நூலாராய்ச்சி, இவற்றிற் கேற்ப வகுப்பை மிக விரிவாக நடத்தினர். மூன்று மாதமாகியும் மூன்று அதிகாரங்கள் தானும் முடியவில்லையாம். சாமானியர் சில ருக்குப் பாடத்தைப் பின்பற்றுவது கடினமா யிற்று. அடிகளிடம் முறையிட்டனர். அடிகள் 'மூடமுண்ட வித்துவானைக் கூப்பிடும்' என் ருர்கள். இது கேட்டவருட் சிலர் மூடம், முண்டம் என்று அடிகள் முதலியாரைக் குறிப் பிட்டதாகக் கருதி உள்நகை கொண்டவர். முதலியார் வந்ததும் அடிகள் மூட முண்ட வித்துவான் என்ருல், மாணுக்கர்களின் மூடத்தை உண்ட வித்துவான் என்று பொருள் எனக்கூறி, வகுப்பை எளிதில் நடத்தக் கட் டளையிட்டார்களாம்.

அடிகள் காலத்திலும் அதற்கு முன்பும் திருக்குறள் முதலிய நூல்களைப் பாடம்கேட் கும் தரமுள்ளவர்கள், தக்க புலவர்களிடம் முறையாகப் பாடங் கேட்கும் வழக்கமுண்டே ஒழியக் கற்ருர்கல்லார் முதலிய எல்லாத்தரத் தினர்க்கும் பொதுவாகப் பாடஞ் சொல்லும் வழக்கமில்லை. இதிகாசபுராண உபந்நியாசங் களே பொதுமக்களுக்காகச் செய்யப்பட்டு வந்தன. அந்நிலையில் அக்காலத்தில் முதன் முதலாகப் பொதுமக்களின் பொருட்டுத் திருக் குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராம லிங்க அடிகளே ஆவர் எனலாம்.

முடிவுரை:

இதுகாறும் கூறியவற்ருல் திருக்குறள் ஞானிகளையும் கவர்ந்த நூல் என்பதும், கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல், நிலையாமை, தவம் ஆகிய அதிகாரங்களில் பற்றற்ற பரமஞானிகளும் சிந்தையைப் பறிகொடுத்தனர் என்பதும்பெறப் பட்டன.

திருவள்ளுவர் திருவடி போற்றி

திருக்குறளின் சிறப்பு

ஆயிரத்து முந்நூற்று முப்ப(து) அருங்குறளும்,
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்—போய் ஒருத்தர்
வாய்க்கேட்க நூல்உளவோ? மன்று தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்!

—திருவள்ளுவ மாலை

முத்தேவர்

'முதுபெரும் புலவர்'

திரு. பெ. இராமாநுஜன் அவர்கள்

திருவள்ளுவ தேவர், திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவர் என்னும் முத்தேவரின் காவியங்களிலே, சொல்லும் பொருளும் பெரும் பாலும் ஒத்து வரும் முறையை முன்பு ஒரு கட்டுரையில் சிறிது எழுதினேன். இக்கட்டு ரையும் அம் முறையைப் பின்பற்றி வருவது.

''திடர் விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத் திருவரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும், கடல்விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் கண்ணாரக் கண்டு(உ)கக்கும் காதல்'' கொண்டு, திருத்துழாய்ப் பொட்டணத்தோடு திருவரங்கம் பெரிய கோயிலுள் சென்று பொட் டணத்தைப் பட்டர் கையில் கொடுத்தேன். அவர் அதைப் பெற்றுக்கொண்டு, கைத் திரு விளக்கு ஏற்றிப் பெருமானைக் காட்டினர். திருவடி முதல் திருமுடிவரை அற்புதசௌந் தரியத் திருமேனியைக் கண்குளிரக் கண்டு மெய் மறந்து நின்றேன். பட்டர் நான் கொடுத்த திருத்துழாய்ப் பொட்டணத்தைப் பிரித்து, சிறிது துளசி தளத்தை யெடுத்துப்பெருமானின் திருவடியில் வைத்து என்னிடம் கொடுத்தார். பரம பாக்கியமாகப் பெற்றுக் கொண்டு திரும் பினேன். வரும்பொழுதே மனதிலே சிறிது குழப்பம். பெருமானுக்கு அர்ச்சித்த 'நிர்மா லியத்தைக் கொடுக்காமல் நான் சமர்ப்பித்த திருத்துழாயைக் கொடுத்துவிட்டாரே, இதிலே என்ன சிறப்பு—''சக்தி'' இருக்கப் போகிறது என்ற எண்ணத்தால், ஏற்பட்ட குழப்பமே. இருப்பிடம் சென்ற பிறகும் மன அமைதி ஏற் படவில்லை. இந்நிலையில் தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியில் ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது.

(1) விஞ்சையர் உலகத்து இரத நூபுரத்து அரசன் சுவலனசடி. அவன் செல்வக் குமரி சயம்பவை. பூவுலகத்துப் போதன மாநகரத்து அரசன் பயாபதியின் இளைய மகன் திவிட்டன். அவனை மணக்க விரும்பிப் போதனமா நகரத் திற்கு உற்றார் பெற்றாரோடு வந்த சயம்ப வைக்கு, இராச வீதியிலே தோழர்களோடு செல்லும் திவிட்ட குமாரனை அவள் தோழி காட்டக் கண்டாள். காதல் கொண்டாள். கையற்று நின்றாள். ''ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கவில்லை'' என்பதுபோல், நாளை அவனைக் கணவனாகப் பெற இருக்கிறவள், அது வரை ஆற்றியிருக்க இயலவில்லை. இந்நிலையில் மாலைக் காலம் வந்தது. ''காலையரும்பிப் பக லெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய்'' ஆதலின், விரக நோயால் பீடிக்கப்பட்ட சயம் பவை, அவ்வேதனையைக் குறைக்க எண்ணி அருகதேவன் ஆலயத்திற்குச் சென்றாள். 'பகை நாறும் அயிற்படைகள் பயிலாத'' திருவுருத்தி யைக் கண்டு அவசம் உற்றவளாய், அப்பெரு மானின் திருவடியில் சிரம் தாழ்த்தி வணங்கி னாள். திருவடியில் சமர்ப்பித்துள்ள செய்ய தாமரையைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தாள். நீரிலே வளரும் தாமரைத் தண்டிலே மலர்ந்த பூவைத் தண்டினின்றும் பிரித்த பிறகும் ''அப்பொழுது அலர்ந்த செந் தாமரை''யினும் பன்மடங்கு அழகும் செழிப் பும் வாய்ந்து பொலிகிறதே. கொடியினின்று பறித்த பிறகு வாடிப் பொலிவு இழந்து அல் லவா போக வேண்டும்? என்ன காரணம்? புரிகிறது; திருவடி சம்பந்தம் பெற்றுவிட்டோம் என்ற எக்களிப்பும் போலும்! நிலையியற் பொருளான பூவுக்கே திருவடிப் பரிசத்தால் இத்தகைய பேறு என்றால், அறிவுடைய மக்கள் வாயார வாழ்த்தினால் வாராதனவும்உளவோ?'' என்றெல்லாம் போற்றித் துதித்தாள்.

அரும்பிவரும் அரவிந்தம் அறிவரனது
  அடிநிழலது அடைந்தோம் என்று
சுரும்புவரி இசைபாடச் செம்மாந்து
  சுடர்உமிழ்ந்து துளும்பும் போலும்;
சுரும்புவரி இசைபாடச் செம்மாந்து
  சுடர்உமிழ்ந்து துளும்புமாயின்
விரும்பினராய்த் தொழுதெழுவார்
  மெய்மறப்பும் உண்மகிழ்வும் வியப்போ அன்றே!

திருவள்ளுவ தேவர் அருளிய கடவுள் வாழ்த் திலே ''வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில'' என்ற குறளின் நுண்பொருளை, தோலாமொழித் தேவரின் பாட்டால் நன்கு தெளிந்தேன். விருப்பு வெறுப்பு அற்ற இறைவன் அடிசேர்ந்த எதற்கும் எவர்க்கும், எவ்விடத்தும் எக்காலத் தும் இடர் ஒன்றும் நேரா ஆதலின், பறித்துப் போட்ட பூவும் சுடர் வீசி மிளிர்கிறது. திருத் தக்க தேவர் ''எங்கும் உலகம் இருள் நீங்க இருந்த எந்தை பெருமானார்—தங்கு செந்தா மரையடி என் தலையவே என்தலையவே'' என்று துதிக்கிறார். சில மேன்மக்கள் தம்மைத் தமது குருவோடு தொடர்புபடுத்தி, இன்னாரு டைய திருவடி சம்பந்தம் பெற்றவன் என்று

பெருமிதத்தோடு கூறிக் கொள்ளுகிருர்கள். இவையெல்லாம் நினைவிற்கு வரவே, மந்திரம் ஓதி அர்ச்சித்தாலும் இல்லாவிட்டாலும், திரு வடிச் சேர்க்கை பெற்ற திருத்துழாயாதலின் மன நிறைவு பெற்றேன்.

(2) ஒருவன் எல்லோர்க்கும் எக்காலத்தும் நல்லவனுக இருக்க முடியாது. அதிலும் நீதி வழங்குவோரின் நிலை மிகவும் சிந்தனைக்கு உரியது. ''சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்'' அமைந்து, ஒரம் சாராமல் முறை செய்யும்பொழுது, ஒரு சாரார் அவர் வழங்கிய முறையைப் போற்றிப் புகழ்வதும், பிறிதொரு சாரார் தூற்றித் திரிவதும் காண்கிருேம். இதற்குக் காரணம் பண்பாடு அற்ற மனமே யாகும். தீவினை புரிந்து தண்டனை பெற்ருேன் ''இத்தண்டனை நாம் செய்த தீவினைக்கு உரிய கழுவாயாகும்; இனி நல்லவனுக வாழ்தல் வேண்டும்'' என்ற எண்ணத்தால் உந்தப்பட்டுச் செப்பம் உடையன் ஆதல் வேண்டும். இக் கருத்தைக் கொண்டே நீதிமன்றங்களில் முறை செய்யப்படுகிறது. ''குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்'' என்ற திருக்குறளும், இதைத் தெளிவுபடுத்தும். தோலாமொழித் தேவர் பயாபதி அரசனை,

எரியும் ஆணையால் குளிரும் ஈகையால்
பெரியன் மாண்பினுல் சிறியன் அன்பினுல்
அரியன் வேந்தர்கட்(கு) எளியன் மாந்தர்கட்கு
உரியன் ஓங்குதற்கு ஓடை யானையான்

என்று இம்முறையில் அற்புதமாகச் சித்தரித்துக் காட்டுகிருர். எனவே அனைவராலும் ஒருவன் போற்றப்படுதல் அருமை. அதுவன்றி ஒருவ னுக்கு இன்பம் பயப்பது மற்ருெருவனுக்குப் பயப்பது இல்லை. நல்லோர் ஒளியை விரும்பு கின்றனர். தீயோர் இருளை விரும்புகின்றனர். காகம் பகலையும், கூகை இரவையும் எதிர்பார்க் கின்றன. காலத்தையும் நல்ல காலம் கெட்ட காலம் எனப் பிரித்துப் பேசுகின்றனர். நல்ல தும் கெட்டதும் காலத்தைச் சாருமா என்பது ஐயப்பாடே. நாம் சாதாரணமாகக் கழிக்கிற காலத்தைப் புலவர்கள் அதியற்புதமாகச் சித்த ரித்துக் காட்டும் முறையைப் பார்ப்போம்.

பொருள்வயிற் சென்ற கணவனைப் பிரிந்த ஒருத்தி, பகற்பொழுதை எவ்வாருே கழித்து விடுகிருள். அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்க ளோடு கலந்து உரையாடுதலும், வேறு சூழ்நிலை யாலும் பகற்பொழுது அவளுக்கு வேதனை தருவது இல்லை. மாலை நேரம் தனிமையாகிருள். அவள் எண்ணமெல்லாம் பிரிந்து சென்ற கண வனைப் பற்றியே. இந்த எண்ணம் தோன்றித் துன்பம் உறுவதற்குக் காரணம் இந்த மாலைப் பொழுதுதான் என்கிருள். ''காலையும் பகலும் எனக்கு இன்பம் பயக்காவிடினும் துன்பம் பயப்பது இல்லை. மாலையும் இருளும் துன்பமே திரண்டு வந்தது போல வேதனையூட்டுகின்றன. காலைப் பொழுதுக்கு என்ன உபகாரம் செய் தேன்? மாலைக்கு என்ன அபகாரம் செய்தேன்? ஒன்றும் இல்லையே. அங்ஙனமாக ஏனே இந்த மாலைப் பொழுது எனக்குப் பகையாகித் துன்பம் விளைக்கிறது'' என்று காலத்தைக் கடிந்து பேசு கிருள்.

''காலைக்குச் செய்த நன்று என்கொல்? எவன்கொல்? யாங்
மாலைக்குச் செய்த பகை''

தோலாமொழித் தேவர் எல்லாருக்கும் ஒருவன் நல்லவனுக இயலாது என்பதை, நிலையியல் பொருள்களைக் கொண்டு அற்புதமாகச் சித்த ரித்துக் காட்டுகிருர். மாலைப் பொழுது, பகல வன் மறைந்து அவன் செங்கதிர் பாய்தலால் செந்நிறம் கொண்ட வானத்திலே, இளம்பிறை தோன்றிப் பாலன்ன வெள்ளிய கதிர்களைச் சொரிகிறது. அவ்வமுதினைப் பருகி அல்லி முதலிய மலர்கள் விரிந்து ஒளி வீசிப் பொலி கின்றன. விரிந்து மலர்ந்து இருந்த தாமரைப் பூக்களோ, குவிந்து அழகு இழந்து நிற்கின்றன. சீவராசிகள் அனைத்திற்கும் களிப்பூட்டும் வெண் ணிலவு பலராலும் புகழ்ந்து பேசப்படும் தாமரைப் பூவிற்கு உகப்பாக இல்லையே. அதனுல் அனைவருக்கும் நல்லவனுக ஒருவன் இருக்க இயலாது.

அங்கு ஒளி விசும்பில் தோன்றும்
அந்திவான் முகட்டுக் கொண்ட
திங்கள்அம் குழவிபால்வாய்த்
தீங்கதிர் அமிழ்தம் மாந்தி
தங்குஒளி விரிந்த ஆம்பல்
தாமரைகுவிந்த ஆங்கே
எங்குளர் உலகில் யார்க்கும்
ஒருவராய் இனியநீரார்?

(3) ஆன்றமைந்த கேள்விச் சான்ருேர்களை மலையோடு உவமித்துக் கூறுவதுகவி மரபு. ''அளக்கலாகா அளவும் பொருளும், துளக்க லாகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளம் தரும் வண்மையும் மலைக்கே'' எனவரும் மலையின் வளம் இயல்பு முதலியவற்ருேடு சான்ருேரின் இயல்பையும் நிலையையும் தெளிவுபடுத்துவர். பெய்யும் மழையைத் தன்னகத்தே கொண்டு, அதனைப் பல அருவிகளாகப் பகுத்து, நதியாகப் பெருக்கி வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் களை விளைவித்து உயிரினங்களை வாழ்விப்பது மலை. மழையின்றி வறண்ட காலத்தும் தன் பால் அடங்கிக் கிடக்கும் நீரைச் சுரந்து உதவு கிறது. நிலத்தில் வளராத சில அரிய செடி கொடி மரம் முதலியன, தன்னகத்தே முளைத்து வளர்ந்து விளைவித்து உதவுவது மலை. பெருங் காற்ருலும் அசைவின்றி நிற்பது மலை. நெடுந் தூரத்தில் இருப்பவர் கண்ணுக்கும் புலனுகும் வகையில் ஓங்கி உயர்ந்து பசுமைத் தோற்றத் தோடு காட்சியளிக்கும். சான்ருேர் கல்வி அறிவு முதலிய செல்வங்களில் நிறைந்தவர், எத்தகைய துன்பம் நேர்ந்த காலத்தும் கலக்க மும் நடுக்கமும் அற்றவர். ஐயமும் குழப்பமும் அற்ற அறிவிலே உறுதி வாய்ந்தவர். அறிவு விளக்கம் பெறத் தம்மை அடைந்தோர் வறிய ராயினும் அவர்க்கு ஆதரவளித்து உதவும் தன் மையர். இவற்ருல் நெடுந்தூரத்தில் கண்ணுல் காண வசதியற்றவரும் செவியால் உணர்ந்து போற்றும் பெருமை வாய்ந்தவர். இவ்வகை யில் சான்ருேரை மலையோடு உவமிப்பர்.

''குன்றின் அனையாரும் குன்றுவர்; குன்றுவ
குன்றின் அனைய செயின்''

மலை போன்ற பெருமையுடையவரும் தாழ்தற்குக் காரணமான செயல்களைக் குன்று மணியளவு செய்யினும் தாழ்ந்து விடுவர் என்று திருவள்ளுவ தேவர், சான்றோரை மலையோடு ஒப்பிட்டுக் கூறுவதை அறியலாம்.

திருத்தக்க தேவர் ''மல்லன்மலையனைய மாதவரை வைதுரைக்கும்... ஆதியோர் . . . விலங்காய்ப் பிறப்பர்'' எனக் கூறுமுகத்தான் மாதவரை மலையோடு உவமித்தலை அறிகிறோம். இத்தகைய மலையும் பகலில் அன்றி இரவில் கண்ணுக்குப் புலனாதல் இல்லை. ஆன்றோர் எப்பொழுதும் செவிப் புலனால் அறிந்துகொள்ளும் நிலையினை உடையர். அதனால் சான்றோர்களையும், வாரி வழங்கும் உதார குணசீலர்களையும் ''குன்றின் மேலிட்ட விளக்கனையர்'' எனக் கூறும் முறையும் உண்டு. திருத்தக்க தேவர் முற்கூறிய முறைக்கு மாறாகப் பழிபாவத்திற்கு அஞ்சாத ஒருவனை ''குன்றின் மேலிட்ட விளக்கு'' எனக் காட்டுகிறார். ஏமாங்கதநாட்டு அரசன் சச்சந்தன். சிறிது காலம் நாட்டைக் கண்காணித்து வருமாறு, முதல் அமைச்சன் கட்டியங்காரனிடம் அரசை ஒப்புவித்துக் கிடக்கிறான். அரசைப் பாரம் என்று கருதாது, போகமாகக் கொண்டு வாழும் அமைச்சன் கட்டியங்காரன் ''இவ்வரசு நமக்கு உரிமையில்லையே, இனி உரிமையுடையதாகச் செய்து கொள்ள வேண்டும்'' என்ற கருத்தினனாய், அரசன் சச்சந்தனைக் கொன்று அரசு கட்டிலை உரிமையாக்கிக் கொள்கிறான். இவ்வகையில் அரசன் ஆன கட்டியங்காரன், சிம்மாதனத்து அமர்ந்ததும் செய்த முதற் செயல் இத்தகையது என்று விவரிக்கிறார்.

கொலையுண்ட அரசனது சுற்றத்தார் அனைவரையும் விலங்கு பூட்டிச் சிறைச்சாலையில் தள்ளினான். தனது முழு நம்பிக்கைக்கு உரியவரான அத்துணை பெயர்களுக்கும் (எண்ணியல்ல) அள்ளியள்ளிக் கொடுத்தான். இவ்வாறு ஒட்டாதவரைத் துன்புறுத்தியும் மற்றவரை இன்புறுத்தியும், நாட்டிற்கெல்லாம் தானே அரசனாய்க் குன்றின் மேலிட்ட (ஒளிவிளக்கல்ல) பழி விளக்காய்த் தோன்றினான்.

கோன்தமர் நிகளம் மூழ்கிக்
கோட்டத்துக் குரங்கத் தன்கீழ்
ஏன்றநன் மாந்தர்க் கெல்லாம்
இருநிதிமுகத்து நல்கி
ஊன்றிய நாட்டை யெல்லாம்
ஒருகுடை நீழல்செய்து
தோன்றினான் குன்றத்துச்சிச்
சுடர்ப்பழி விளக்கிட்டன்றே.

விருப்பு வெறுப்பு அற்ற துறவியான திருத்தக்க தேவரின் இப்போதனையைப் படிக்கும்போது ''அன்றுமா இந்நிலை''! என அதிர்ச்சி ஏற்படுகிறது. **

நூல்கள் அறிமுகம்

(1) இறை நூல்களில் தமிழ்நடை : இந்நூல் உலகத் தமிழ்ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் வெளிவரும், தமிழ் ஆராய்ச்சி இதழில் வெளிவந்த கட்டுரையின் பதிப்பு ஆகும். தமிழ் மொழியின் வசன நடை தொன்றுதொட்டு இன்றுவரையில், சைவம் வைஷ்ணவம் வேதாந்தம் சித்தாந்தம் சமணம் பௌத்தம் இசுலாமியம் கிறித்தவம் பற்றிய நூல்களில், எவ்வெவ்வாறெல்லாம் கையாளப்பட்டு வந்துள்ளது என்பது, இக் கட்டுரையின்கண் சான்றுகள் காட்டி விளக்கப்பெற்றுள்ளது. இவ் ஆங்கிலக் கட்டுரை தமிழன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும். விலை குறிக்கப்பெறவில்லை. கிடைக்குமிடம் : தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600020.

(2) திருக்குறளில் அறிவு : இந்நூல் கோவை அருட்கலைக் கழகத்தின் சார்பில், சிவநெறிச் செல்வர் பேராசிரியர் திரு. ப. சு. மணியம் அவர்களால் எழுதப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்கண் திருக்குறளில் விளக்கப்பெறும் அறிவு பற்றிய கருத்துக்கள் 11 கட்டுரைகளாக அமைத்து தொகுக்கப்பட்டுள்ளன. திருக்குறள் அன்பர்களுக்கு, இந்நூல் ஒரு சிறந்த நல்ல விருந்தாக அமைந்து பயன்படும். நல்ல திருத்தமான சிறந்த பதிப்பு. விலை ரூ. 8-00. கிடைக்குமிடம் : மறைமலை அடிகள் மன்றம், புன்செய் புளியம்பட்டி-638459, கோவை மாவட்டம்.

(3) மங்கலவாழ்த்தும் அவையடக்கமும் : சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்த சாத்திர தலைமணி நூலுக்கு மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதிய உரைப்பகுதிகளும், அதனை ஒட்டி காசிவாசி செந்தில்நாதையர் அவர்கள் இயற்றிய வசனாலங்காரதீப உரைப்பகுதிகளும் சேர்த்து, இந்நூல் பதிக்கப் பெற்றுள்ளது. சைவசித்தாந்தம் கற்க விரும்பும் அன்பர்களுக்கு இத்தகைய நூல்கள் பெரிதும் துணைபுரிந்து பயன்படும். விலை ரூ. 2-50. கிடைக்குமிடம் : திரு. என். சுப்பிரமண்யசிவாசாரியார், ஆசிரியர் : 'சிவஞானபேரிகை', 118, சிவன்சந்நிதி, சங்கரன்கோயில்-627756. திருநெல்வேலி மாவட்டம்.

கம்பர் காட்டும் கற்பனைச் சுவர்க்கம்

முன்னுரை:

கவிஞனின் உள்ளம், கற்பனை உள்ளம். கற்பனை உலகில் கவிஞன் தன்னை மறந்து உலவி இன்பங் காண முயல்கின்றான். இவ்வுலகில் காண முடியாததையும், பெற இயலாததையும், நுகரக் கிடைக்காததையும், கவிஞன் தன் உள்ளத்தில் தானே படைத்துக் கொள்கின்ற கற்பனை உலகில் காண்பதாகவும், பெறுவதாகவும், நுகர்வதாகவும் கனவு காண்கின்றான்.

வல்லதன் விழியின் வீச்சால்
    மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து,
    கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லதொன் றனையும் ஊர்பேர்
    இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
    நலமெலாம், நவிலற் பாற்றோ?*

—தமிழாக்கம் : ந.ரா.மு.

மேலை நாட்டில் சர். தாமஸ் மூர் (Sir Thomas Moore) என்பவர், உட்டோபியா (Utopia) என்னும் பெயரில், தாம் விரும்பும் ஒரு வகைக் கற்பனை உலகினை விவரித்து நூல் எழுதியுள்ளார். அவ்வாறே சாமுவேல் பட்லர் (Samuel Butler) என்னும் மற்றோர் ஆசிரியர், எரிவோன் (Erehwon) என்னும் தலைப்பில், இவ்வுலகிற் காணப்பெறும் குறைபாடுகள் எதுவுமே இல்லாமல், குறைவிலா நிறைவாய்த் துன்பமற்ற இன்ப மயமான உலகம் ஒன்றைத் தம் கற்பனையில் உருவாக்கி, அது பற்றி ஒரு சுவையான நூலை வரைந்துள்ளார். உண்மையில் அத்தகைய ஓர் உலகம் இருத்தல் இயலாது ஆதலின், அக்குறிப்பும் வெளிப்பட 'எங்கும் இல்லை' என்னும் பொருளை உடைய (Nowhere) என்னும் சொல்லையே, அவர் எரிவோன் (Erehwon) எனக் கரந்துறை மொழி (Anagram) ஆக மாற்றியமைத்தார் என்பர். ''துணிச்சலான, புதிய உலகம்'' (The Brave New world) என்று ஆல்டசு அக்சுலி (Aldous Huxley) என்பவர் எழுதிய நூலும், இத்தகையது.

கம்பர் :

இவர்களைப் போலவே, கல்வி நலனிலும் கற்பனைத் திறனிலும் சிறந்த கவி வேந்தராகிய நம் கம்பரும், தம்முடைய கற்பனையில் ஒரு சுவர்க்கத்தினைப் படைத்துக் காட்டுகின்றார். சுவர்க்கம், நரகம் என்னும் சொற்களினை, நாம் பலகால் கேட்டு அறிந்துள்ளோம். துன்பத்திற்கு இடமாக இருப்பது நரகம் என்றும், இன்பத்திற்கு இடமாக இருப்பது சுவர்க்கம் என்றும், நாம் பொதுவாகக் கருவுதுவது வழக்கம். ஆனால், சுவர்க்கம் என்றால், பின்வரும் இயல்புகளெல்லாம் பொருந்தியிருத்தல் வேண்டும் எனக் கம்பர் தம் கற்பனையிற் கருதுகின்றார்.

சுவர்க்கம் :

(1) சுவர்க்கம் என்பது, இன்ப நுகர்ச்சிக் கேயுரிய இடம்; அங்குத் துன்பத்தின் சாயல் சிறிது கூட இருத்தல் கூடாது.

(2) நாம் இன்ப உணர்ச்சியிலும் நுகர்ச்சியிலுமே திளைக்க வேண்டுமாயின், நாம் விரும்பும் பொருள்கள் எல்லாம், விரும்பியவாறே, உடனுக்குடன் விரைவாகவும், எளிதாகவும், குறைவின்றியும் கிடைத்தல் வேண்டும்.

(3) பொதுவாக இவ்வுலகில் நாம் விரும்பும் பொருள்கள் எளிதாகவும் விரைவாகவும் குறைவின்றியும் கிடைத்து விட்டால், அப்பொருள்களின் மீது நம் விருப்பம் குறைந்து, வெறுப்பு ஏற்பட்டு விடுதல் இயல்பு. அங்ஙனம் சிறிதும் வெறுப்பு ஏற்படாத நிலையில், சுவர்க்கம் இருத்தல் வேண்டும்.

(4) எப்போதுமே நமக்கு ஒரு பொருளை அடையும் வரையில்தான், அதன் மீது அளவற்ற அன்பும் ஆர்வமும் காதலும் இருக்கும்; அடைந்த பிறகோ அப்பொருள் மீது நாம் கொண்டிருந்த அன்பும் ஆர்வமும் காதலும் தாமே தணிந்து விடும். பின்னர் அப்பொருளின் மீது விருப்பம் எழாமையோடு, அதனை அனுபவிக்கும் ஆற்றலும் குறைந்துபோகும். இஃது இவ்வுலகத்தில் நாம் நாளும் கண்டுணர்ந்து வரும் இயற்கைத் தன்மை. சுவர்க்கத்தில் அங்ஙனம் இருத்தல் கூடாது. பொருள்களின் மேல் விருப்பம் மேன்மேல் வளர்ந்து ஓங்குவதுடன், அவற்றை அனுபவிக்கும் ஆற்றலும் மேன்மேற் பெருகுதல் வேண்டும்.

(5) நாம் விரும்பி நுகரும் பொருள்கள், பிறர்க்கும் கிடைத்து, அவற்றைப் பிறரும் அனுபவிக்க முற்படின், அப்பொருள்களின் தனிச் சிறப்புக் குன்றிவிடும். மேலும் அப்பொருள்களினால் நாம் எய்தும் இன்பமும் பயனும் குறைதல் திண்ணம். ஆதலின் சுவர்க்கத்தில் நாம் விரும்பி நுகரும் பொருள்கள், நமக்கு

---

* The poet's eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven,
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name"

—William Shakespeare,
A Midsummer—Night's Dream

மட்டுமே கிடைத்தல் வேண்டும். வேறு பிற எவர்க்கும் அவைகள் கிடைத்தலாகாது. அவற்றினுடைய முழு உரிமையையும், முழு இன்பத்தினையும், நாமே நுகருதல் வேண்டும். சுவர்க்கத்தில் நமக்குக் கிடைக்கும் இன்பம், வேறுஎங்கும் எதனுலும் எவர்க்கும்கிடைத்தல் கூடாது.

(6) இது மட்டுமே யன்றி, நாம் விரும்பி நுகரும் அந்தச் சிறந்த பொருள்கள், சிறிது காலம் இருந்து அழிவனவாகவோ, அல்லது பின்னர்க் கிடைக்காமற் போவனவாகவோ இருத்தல் கூடாது. அழிந்துபடுமோ என்றும், இனி ஒருகாற் கிடைக்காமற் போகுமோ என்றும், நாம் சிறிதும் கவலை கொள்ள வேண்டாத படி, நாம் விரும்பும் பொருள்களும், அவற்ருல் நாம் நுகரும் எல்லையற்ற இன்பமும், என்றும் அழியாமல் நிலைபேறுடையனவாய், மேன் மேல் ஓங்கிச் சிறத்தல் வேண்டும்.

(7) இத்தகைய பலப்பல நலங்களும் சிறப்புற அமைந்திருப்பதே, உண்மையில் சிறந்த சுவர்க்கம் (Ideal Paradise) ஆகும்.

இலங்கைமா நகரம் :

இவ்வாறு, கவி வேந்தராகிய நம் கம்பர், ஒப்புயர்வற்ற ஒரு கற்பனைத் துறக்கத்தினைத் தம் கவிதை உள்ளத்தாற் கருதிப் படைத்துக் காட்டுகின்ருர் : கம்ப ராமாயணத்தில், சுந்தர காண்டத்தில், கடல் தாவு படலத்தில், அனுமான் இலங்கைத் தீவில், பவள மலையில் பாய்ந்து, அதன் மேல் நின்று கொண்டு இலங்கையைக் காணுகின்ருன். இலங்கையின் பரப்பும் அமைப்பும் சிறப்பும் கண்டு பெரிதும் வியக்கின்ருன். தேவருலகம் இதற்கு ஒரு சிறிதும் ஈடாகாது; ''பொன்நகர் இதனை ஒக்கும் என்பது புல்லிது அம்மா!'' என்று எண்ணி மலைக்கின்ருன். விரும்பிய பொருள்களையெல்லாம் தடையின்றியும் குறைவின்றியும் விரைவில் எய்தி இன்புற்றுத் திளைக்கும் இடமே, துறக்கம் எனப்படும். தேவருலகம், இதுபோது இராவணனுல் தேவர்கள் துன்புறுதற்குரிய இடமாகி விட்டது. ஆதலின் அது துறக்கமன்று. எல்லா இன்பங்களும் எளிது இனிது துய்க்க வல்ல இவ்விலங்கை மாநகரமே, அத் தேவருகலத்தினும் பன்மடங்கு சிறப்பும் வளப்பமும் உடைய துறக்கம் ஆகும் என்று, துணிகின்ருன். இக் கற்பனைத் துறக்கம் பற்றிக் கம்பர் கவினுற விளக்குகின்ருர்.

''மாண்டதோர் நலத்திற் ரும்என்று
உணர்த்துதல் வாய்மைத்து அன்ருல்;
வேண்டிய வேண்டின் எய்தி,
வெறுப்பின்றி, விழைந்து துய்க்கும்,
ஈண்டரும் போக இன்பம்
ஈறிலது யாண்டுக் கண்டாம்;
ஆண்டுஅது துறக்கம்; அஃதே
அருமறைத் துணிபும் அம்மா!''

பாடற்பொருளும், முடிவுரையும் :

''இந்த இலங்கை மாநகரம், மிகச் சிறந்த ஒப்பற்ற அழகை உடையது என்று, கூறுதல் மட்டுமே உண்மையாகாது. விரும்பிய பொருள் களையெல்லாம் பெறுதல், எந்த இடத்தில் இயலுமோ, அந்த இடந்தான் சுவர்க்கம் என்று வேதங்களும் கூறுகின்றன. தேவருலகம், எல்லா வற்றையும் அளிக்கவல்ல இன்ப உலகம் என்று முன்பு இருந்தது. ஆனுல், அஃது இப்போது தேவர்கள் திறத்தில் துன்ப உலகமாக மாறி விட்டது. இராவணன் ஆள்கின்ற இவ்விலங்கை மாநகரமே, தற்போது எல்லா இன்பங்களையும் விரும்பியபடி யெல்லாம் எய்துதற்கு இடமாக உள்ளது. அதனுல் இவ்விலங்கை மாநகரமே இதுபோது உண்மையான சிறந்த சுவர்க்கமாக விளங்குகின்றது'' என்பது, இப்பாடலின் திரண்ட பொதுப் பொருள்.

(1) வேண்டின் வேண்டிய எய்தல்

(2) வெறுப்பின்றித் துய்த்தல்

(3) விழைந்து துய்த்தல்

(4) ஈண்ட அரும் போக இன்பம் துய்த்தல்

(5) ஈறிலது ஆதல்.

என்னும் பல்வகை உயரிய நலங்களை உடையது ஆதலைத் துறக்கத்திற்கு இலக்கணமாக வரையறை செய்தும், இத்தகையதொரு துறக்க உலகம் எங்கும் காண்பரியதாதலின் ''யாண்டுக் கண்டாம், ஆண்டு அது துறக்கம்'' என்று முடிவு கூறியும் ''அஃதே அருமறைத் துணிவும்அம்மா'' என்று சான்றுகாட்டி அறிவுறுத்திக் கூறியும், அனுமானின் கூற்ருக அமைத்து, கம்பர் பாடியுள்ள கவிதை, மிக்க சிறப்பும் சுவையும் உடையதாகும்.

—ஆசிரியர்.

திருவாசகம், திருக்கோவையார் சிறப்பு

இரும்புதரு மனத்தினையும் ஈர்த்துருக்கி, எழிற்பொன்ருய் இனிது மாற்றிக்,
கரும்புதரு சுவைபெருக்கிக், கனிவுவளம் திருவாசகம்தான் காட்டும்;
இரும்புவியிற் சிற்றின்பை இணையில்பெரும் பேரின்பாய் இயலச் செய்தே,
அரும்புலவோர் புகழ்கோவை அருள்அனுப வத்தின்வளம் அமைந்து நிற்கும்.

—ந. ரா. மு.

சிவதாண்டவங்கள்

திரு. தி. ரா. தாமோதரன், M.A., M.Litt.
ஆய்வாளர், மதுரைப் பல்கலைக்கழகம்

முன்னுரை:

காலைத் தூக்கி நின்றாடும் கண்ணுதலோனின் தாண்டவத் தோற்றம் கொண்ட சிலையில்லாத சிவன்கோயில் இல்லவே இல்லை. ஆண்டவனின் இவ்வருள் தோற்றம் சைவ சித்தாந்தக் கருத்தினை, தத்துவத்தை விளக்கி நிற்கின்றது. சைவ சித்தாந்தத்தை அறிந்து கொண்டவர்கள் இந் நடனத் தோற்றத்தைக் கண்டு களிக்க முடியும். நடராசர் தோற்றத்தின் உயரிய கருத்து அருள் பாலித்தலே ஆகும். செயல் முறைத் தோற்றமாகத் திகழ்வதே இந் நடனத்தின் அடிப்படைக் கருத்தாகும். சிவபெருமானின் எழுவகை நடனம், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலைச் சுட்டி நிற்பனவாம். ஆன்மா மேல்நிலை அடைந்து, முக்தி பெறும் நிலைகளை விளக்குவதாகவும் இந் நடனத்தோற்றத்தைக் கூறுவர்.

எழுவகைத் தாண்டவங்கள்:

காளிகா தாண்டவம், புஜங்கத்திராச தாண்டவம், சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் அல்லது அனுக்கிரக தாண்டவம், ஆனந்ததாண்டவம் அல்லது நாதாந்த தாண்டவம் என்பன எழுவகை நடனங்கள் ஆகும். இவை ஒவ்வொன்றும் தத்துவத்தைத் தம் மகத்தே கொண்டுள்ளன.

(1) உடுக்கை ஏந்தியகை. ஆண்டவனின் முதல் தொழிலாகிய படைப்பைக் காட்டி நின்றது. படைப்பைக் காட்டும் முதல் வகை நடனத்தைத்தான் ''காளிகா தாண்டவம்'' என்கின்றனர்.

(2) இரண்டாவதாகச் சிவனின் கழுத்தில் உள்ள அரவத்தைக் குறித்த நடனமாகும். சிவதாண்டவத்தில் முக்கிய இடம் பெறும் இவ்வரவு பற்றிய வரலாறு ஒன்று உண்டு. வாசுகி, கார்க்கோடன் என்னும் பாம்புகள் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிய, சிவனும் அவைகள் முன் தோன்றி அருளினார். சிவனின் உடலை என்றும் அழகு செய்யும் அணியாகத் தாமிருக்க வேண்டுமென்ற அரவுகளின் அவாப்படிச் சிவனும் அருளினார். சிவதாண்டவத்தின் போது அரவுகள் உறும் துயரத்தை உணருமாறு அவைகளின் நிலையைச் சிலையில் காணலாம். தம் தகுதிக்கேற்ற இடத்தைத் தேர்ந்தெடுக்காத ஆன்மாக்கள் இவ்வுலகில் படும் பெருந்துயரம்போல் அரவுகள்படும் துயரத்தை இத்தோற்றம் விளக்குகிறது. இந் நடனத்தைப் ''புஜங்கத்திராச தாண்டவம்'' என்பர்.

(3) அதே சமயத்தில் சிவம் 'அஞ்சேல் எனும் கை' காட்டி, ஆன்மாக்கள் என்றும் இத்துயரங்களுக்கு அஞ்சவேண்டுவதில்லை, தம் அருள் நோக்கித் தவமியற்றுவார்க்குத் தாம் அபயம் (அடைக்கலம்) தரக் காத்திருப்பதாகக் காட்டுகிறார். இத்தோற்றம் 'காத்தல்' எனும் இரண்டாவது தொழிலைக் காட்டியது. காத்தல் தொழிலின் மறுபகுதியாகிய நன்மையைக் காட்ட சிவனின் முகத்தில் பொலியும் ஒளி விளக்கி நிற்கின்றது. இத்தோற்றத்தைச் ''சந்தியா தாண்டவம்'' என்று கூறுவர்.

(4) மற்றுமோர் கையில் 'நெருப்பு' ஏந்தியிருப்பதைக் காண்கின்றோம். 'அழித்தல்' தொழிலை இது சுட்டி நின்றது. இதைச் ''சங்கார தாண்டவம்'' என்பர்.

(5) ஆன்மாவோடு ஒட்டி, பிறவி தோறும் சேர்ந்தே வரும் மும்மலங்களாகிய ஆணவம், மாயை, கன்மம் என்பவை திரிபுரங்கள் எனப்படும் மூன்று நகரங்களுக்கு ஒப்ப, அவைகளைத் தன் சிரிப்பாலேயே சிவன் அழித்தமையைக் காட்டுவதே திரிபுரதாண்டவமாகும். ஆன்மாக்களிடம் உள்ள மும்மலங்களையும் அழிப்பதால் 'அழித்தல்' தொழிலையும், இம் மும்மலங்களால் இறைத்தத்துவம் முதலியன ஆன்மாவிற்கு மறைத்து, பின் அம்மலங்களை அழித்து 'மறைத்தல்' தொழிலையும் நடத்தியதால் 'அழித்தல்' 'மறைத்தல்' எனும் மூன்றாவது, நான்காவது தொழிலையும் முறையே திரிபுரதாண்டவம் சுட்டிநிற்கின்றது.

(6) ஆன்மாக்களுக்கு அருளி, அதன் மூலம் உலகத்தின் உண்மைத் தோற்றத்தை உணரவைத்து, முத்திக்கு வழிவகுப்பது, 'அருளல்' தொழிலாகும். இதை ''ஊர்த்துவ தாண்டவம்'' அல்லது ''அனுக்கிரக தாண்டவம்'' என்பர். தனது இடதுகாலைத் தலைவரை மேலே தூக்கி நிறுத்தி ஆடும் நிலையைத்தான் அருளல் என்கின்றனர். இத்தாண்டவம் மற்றெவராலும் ஆட முடியாத ஒன்றாம். உமா

தேவியும் தாண்டவத்தில் தம்மை மிஞ்சியவர் இல்லையென்று சிவபெருமானிடம் போட்டியிட்டு ஆடும்போது 'அனுக்கிரக தாண்டவ' மாகிய காலைத் தூக்கி நின்றாடும் தாண்டவம் அம்மையாலும் முடியாமற் போயிற்று. சிவனே அருளுவதில் வென்றார். சைவ சித்தாந்தத்தின் கருத்துப்படியும் சிவபெருமான் ஒருவரே உயிர்களுக்கு அருளி முக்தி அளிக்கும் வல்லமை படைத்தவர் என்பது தெளிவாகிறது.

(7) சக்தியின் வடிவாகிய உமையம்மை ஐந்தொழிலையும் நடத்த உள்ளுறையும் சக்தியாகவே இருக்க முடியும். அச்சக்தியை இயக்குபவராகச் சிவன் இருக்கின்றார். பேருந்து ஓட்டுநரைச் சுமந்து சென்றாலும், ஓட்டுநர் இல்லையெனில் அது அசைய முடியாது. ஐந்தொழில்களைப் போன்று பேருந்தும், அதை இயக்கும் சக்தியாக இயந்திரங்களும், சிவனைப் போல் ஓட்டுநரும் எனக் கூறலாம். பேருந்தில் அடங்கிய சக்தியை இயக்கும் நாயகனாக ஓட்டுநர் விளங்குவதுபோல், சிவன் இவ்வுலகியலை நடத்தத் தேவையான சக்தியை இயக்கக் கூடியவராக விளங்குகின்றார். பயணிகளைப் போல உயிர்கள் அதன் வழிப்பட்டு வாழ்கின்றனர்.

இறுதியாக, சிவபெருமானின் நடராசர் தோற்றம் முழுவதையும் காணும்போது, ஐந்தொழிலையும் விளக்கிநிற்கும் வடிவத்தைக் காண்கின்றோம். ஒரே நேரத்தில் எல்லா நடனத்தையும் ஒரு சேரக் காணுதலை அல்லது காட்டுதலைத்தான் ''ஆனந்த தாண்டவம்'' அல்லது ''நாதாந்த தாண்டவம்'' என்கின்றனர்.

முடிவுரை:

மேற்கூறிய தாண்டவங்களையும், அதன் வாயிலாக வெளிப்படும் செய்தியாக ஐந்தொழிலையும் காணும் நாம், சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களை ஒருமுகமாய்க் கண்டு தெளியும் வாய்ப்பினைப் பெறுகின்றோம். இவ்வுலகியல் வாழ்வில் மும்மலங்களோடு தோன்றிய ஆன்மா, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய சிவபெருமானின் ஐந்தொழில்களுக்கு ஆட்பட்டு முக்தியடையும் நெறியைக் காண்கின்றோம். ஆன்மாவிடம் இறைவன் கொண்டுள்ள அன்பும், அவன் ஆன்மாவிடம் ஆற்றும் தொழிலையும் அறிந்து கொள்கின்றோம். ஒழுங்குமுறை அசைவுகளைக் கொண்ட தாண்டவங்கள், இவ்வுலகமும், அண்டங்களும், ஐம்பெரும் பூதங்களும் தம் நிலையிலிருந்து மாறுபடாமல் ஆற்றும் செயல்களைக் குறித்தன. ஆன்மாவிற்கு நம்பிக்கை ஊட்டி, உய்யும் வழியினையும், இந்நடனம் காட்டி நிற்கின்றது. இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையே உள்ள தொடர்பினையும் இத்தாண்டவம் சுட்டிக் காட்டுகிறது.

கவிதை இன்பம்

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து அகங்களித் துவப்பவர் தமக்கும்,
மருவும்இவ் வாழ்க்கை மறைபொருள் பலவும் மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,
விரிவுறும் தூய மெய்யுணர்வு வானில் விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்தது யவர்க்கும், **சிறந்தநற் கவிதையே இன்பாம்!**

—*தமிழாக்கம்*, **ந. ரா. மு.**

"To a mind brooding on the silent beauty exhibited in **the varied phenomena of nature, to an** intellect diving deep into the mysteries that lie in the immost **corners of life, to a soul soaring high** into ethereal regions of religion and philosophy, to a **spirit seeking serene rest in moral sanctity** and Divine grace, nothing appears so permanently beautiful, **so certaiuly impressive and effective as** the study of a fine piece of poetry."

—Maraimalai Adigal.

கவியரசர்

எவர்ஒருவர் எளியநல்ல இனியஎழிற் சொற்களினால்
சுவைபெருகத் தெளிவுமிகத் துயர்போக்கி மகிழ்வுறுத்தி
நவைஒழிக்கும் பாடல்கள் நலம்பொதுளப் பாடுவரோ,
அவர்கவிஞர்; **கவிஞருளே** அரசர்எனத் திகழ்ந்தொளிர்வர்.

—தமிழாக்கம், **ந. ரா. மு.**

" They shall be accounted poet-kings,
Who simplytell the most heart-easing things "

—John Keats.

திருக்குறட் பொருள் நுணுக்கம்

முன்னுரை :

திருக்குறள் ஒப்புயர்வற்ற தெய்விகப் பெரு நூல். காலத்தாலும் இடத்தாலும் மாறுபடா தனவும், நிறம், இனம், மொழி, நாடு முதலிய வேறுபாடுகளைக் கடந்தனவும், என்றும் பொய் யாதனவும், எல்லா மக்களும் உவந்தேற்றுக் கொள்ளத் தக்கனவும் ஆக விளங்கும் அடிப் படை உண்மை அறக் கருத்துக்களை, வரை யறுத்து உணர்த்தும் நலத்தில் திருக்குறள் தலைசிறந்ததாகத் திகழ்கின்றது. உலக மொழி கள் அனைத்திலுமுள்ள நீதி நூல்கள் பலவற் றுள்ளும், திருக்குறளுக்கு ஒரு பெருந் தனிச் சிறப்பிடம் உண்டு.

திருக்குறள் கூறும் கருத்துக்கள், மிகவும் உயர்ந்தவை; திட்பநுட்பம் செறிந்தவை ; நவில்தொறும் நயம் பயப்பவை; அறிதோறும் அறியாமை புலனாகும்படி ஆழ்ந்து அகன்று நுணுகிச் செல்லுபவை; எண்ணியுணரும்தோறும் மேன்மேற் பல நுண்ணிய பொருள்களைத் திண்ணிதின் விளக்குபவை.

ஒரு குறள் :

திருக்குறளின் கருத்துச் சிறப்பிற்கும் வளத்திற்கும், இங்கு ஒரு சான்று மட்டுமே காண்டல் அமையும். நமக்குத் ''துன்பம் செய்தவர்களை நாம் தண்டிக்கும் முறையாவது, அவர்கள் நாணும்படி அவர்களுக்கு நாம் நல்ல இனிய உதவியைச் செய்து விடுதலேயாகும்'' என ஒரு திருக்குறட் பாடல் கூறுகின்றது.

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்''

எனவரும் திருக்குறளை அனைவரும் அறிவர். இக் குறள் கூறும் இனிய கருத்து, எண்ணி எண்ணி யுணர்ந்து பெரிதும் போற்றுதற்கு உரியது.

திருவள்ளுவர் :

''ஒருவன் உன்னை எதிர்த்தால், நீயும் அவனை எதிர்த்து நில்; ஒருவன் உனக்குத் துன் பம் செய்தால், நீயும் அவனுக்குத் துன்பம் செய்'' என்பதுதான், பொதுவாக மக்கள் அனை வரும் கடைப்பிடிக்கும் கொள்கை. இவ்வியல் பையும் செயலையுமே வீரமாகப் போற்றிச் சிலர் புகழ்ந்து கூறுவதும் உண்டு.

ஆனால், ஒரு சில சான்றோர்கள், ''உனக்குப் பிறன் ஒருவன் துன்பம் செய்தாலும், நீ அவனுக்குத் திருப்பித் துன்பம் செய்யாதே. அவன் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு மன்னித்து விடு'' என்றும், நமக்கு அறிவுரை கூறியுள்ளனர்.

ஆனால், திருவள்ளுவர் பெருமானோ, அவர் களிலும் ஒரு படி மேலே சென்று ''ஒருவன் உனக்குத் துன்பம் செய்தால், அவன் செய்யும் அத்துன்பத்திற்கு எதிராக, நீ அவனுக்குத் துன்பம் செய்யாதே! அது மட்டும் அன்று! நீ அவன் செய்யும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, அவனை மன்னித்து விடு! மன்னித்தல் மட்டும் போதாது, துன்பம் செய்த அவனுக்கு, நீ இனிய நல்ல உதவியையும் செய்தல் வேண் டும். அதுதான் அவனைத் தக்காங்கு ஒறுக்கும் சிறந்த முறை'' என்கின்றார்.

இயேசுநாதர் :

இஃது, எவ்வளவு பெரிய சிறந்த அரிய அருளுரை என்பது, நினைத்து வியக்கத் தகுவது. ''பிதாவே! இவர்களை மன்னியும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் இருக்கின்றார்கள்'' என்று பரிந்து கூறி வேண்டிக் கொண்ட இயேசுநாதர் திருமொழியோடு, நினைவு கூர்ந்து கருதின், இத் திருக்குறட் கருத்தின் அருமை பெருமைகள் விளங்கும்.

''தன்னரிய திருமேனி
சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பெரும்பாடு
படும்போதும், 'பரிந்து எந்தாய்!
இன்னதுஎன அறியகிலார்
தாம்செய்வது; இவர்பிழையை
மன்னியும்' என்று எழிற்கனிவாய்
மலர்ந்தார்நம் அருள்வள்ளல்''

—இரட்சணிய யாத்திரிகம்.

என வரும் இரட்சணிய யாத்திரிகச் செய்யுள், இங்கு நாம் கருதி இன்புறற்பாலது.

பிற குறள்கள் :

இத்துணைச் சிறந்துயர்ந்த இனிய கருத்தினை, இவ்வொரு திருக்குறளில், இந்த ஓரிடத்தில் மட்டுமே, திருவள்ளுவர் கூறிச் சென்றனர் அல்லர். இவ்வுயர்ந்த இனிய செவ்விய கருத்தினையே, வேறு பிற பல இடங்களிலும் திருவள்ளுவர் கூறியருள்கின்றார்.

(1) மனச் செருக்கினால் தீங்கு மிக்க கொடிய துன்பங்களைச் செய்தவர்களை, நல்ல பெரியோர்கள், தாம் தம்முடைய பொறுமைத் தன்மையினால் மன்னித்து, அவர்களிலும் மேம்பட்டு உயர்ந்து, வெற்றியை அடைவார்களாக.

''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்''

(2) செய்யத் தகாத கொடிய தீங்குகளைத் தன்கண் பிறர் செய்தாராயினும், அவர்கட்கு அதனால் வரும் துன்பத்திற்காக மனம் வருந்தி, அவர்கள்பால் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல், ஒருவனுக்கு நலம் பயப்பதாகும்.

''திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று''

(3) தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் கூடத், தாம் தீங்கு செய்யாமல் விட்டொழித்தலை, தமக்கு உறுதிப் பொருளைத் தேடும் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் மேலான சிறந்த அறிவு உடைய செயலாகும் என்று நல்லோர்கள் சொல்லுவர்.

''அறிவினுள், எல்லாம் தலைஎன்ப; தீய
செறுவார்க்கும் செய்யா விடல்''

(4) தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் கூட, ஒருவன் இனிய நல்ல உதவிகளையே செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்யாமற் போனால், நல்லியல்புகள் எல்லாம் நிறைந்திருத்தல் ஆகிய சால்புடைமை என்னும் பண்பு, வேறு என்ன பயனைத்தான் உடையது ஆகும்?

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

எனவரும் பிற திருக்குறள்களிலும், இவ்வுயரிய கருத்தினையே, திருவள்ளுவர் செவ்விதின் விளக்கி யுரைத்திருத்தல் காணலாம்.

மெய்ப்பொருள் நாயனார் :

சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரில், அரசோச்சி வாழ்ந்திருந்த மலாடர்கோமான் ஆகிய மெய்ப்பொருள் நாயனார், தம்மை வஞ்சகத்தாற் கொல்ல வந்த முத்தநாதனையும், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனத் தொழுதார். அவ்வஞ்சகனைக் கொல்ல முற்பட்ட தன் பாதுகாவலனையும் ''தத்தா! நமர்'' எனத் தடுத்தார். ''எம்பிரான் அடியார் (முத்தநாதன்) போக, மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய்விடு'' என்று தத்தனுக்குக் கட்டளையிட்டார். தத்தன், முத்தநாதன் தன்னைத் தீதிலா நெறியில் விட்ட சொற்றிறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கினார் ; தத்தன் திரும்பி வந்து ''இடையூறு இன்றி விட்டனன்'' என்று கூற, ''இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்?'' என்று, அவனை நோக்கி நிறை பெருங் கருணை கூர்ந்தார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் நன்னயத்திற்கு, இதனின் மிக்க எடுத்துக்காட்டாக வேறொன்றுமில்லை எனலாம். இத்தகைய வரலாறுகள் வேறு சிலவற்றையும், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்துட் கண்டு மகிழலாம்.

உரைநயம் :

இனி, மேலே குறித்த 'இன்னாசெய்தாரை' *(314)* என்னும் திருக்குறளில், நாம் கருதத் தக்கதொன்றுண்டு. அக்குறட்பாவுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பலரும், 'நன்னயம் செய்து விடல்' என்னும் தொடருக்கு 'நல்ல நலமுடையவற்றைச் செய்து விடுக' என்றே பொருள் வரைந்துள்ளனர். அவர்கள் அனை வரும் 'செய்து விடல்' என்பதனை ஒரு சொல் நீர்மைத்தாகவே கொண்டு விட்டனர்.

ஆனால், ஆசிரியர் பரிமேலழகர் 'செய்து, விடல்' என இதனை இரு சொற்களாகக் கொண்டார். ஏனையோரெல்லாம் 'விடல்' என்பதனை ஒரு துணை வினைச் சொல் (Auxilary Verb) என்றே கொண்டு அமைந்தனர். ஆனால், பரிமேலழகரோ, இதனை மிகவும் பொருள் பொதிந்த ஒரு முதல் வினைச் சொல் (Principal Verb) எனக் கொண்டு, அதன் வாயிலாக அரிய சிறந்த ஆழ்ந்த பொருள் விளக்கம் ஒன்றைச் செய்தருள்கின்றார்.!

பரிமேலழகர் :

''தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரை ஒறுத்தலாவது, அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து, அவ்விரண்டனையும், அஃதாவது நமக்கு அவர் தீங்கு செய்தார் என்பதும், நாம் அவர்க்கு நன்மையே செய்தோம் என்பதும், ஆகிய இருவகை நினைவுகளையும் மறந்து விடுதல். மறவாவழிப் பின்னும் மேன்மேற் பகைமை வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பாலவாயின. இதனால் அவரை வெல்லும் உபாயம் கூறியவாறு''

எனப் பரிமேலழகர் வகுத்துள்ள உரைவிளக்கம், எத்துணைச் சிறந்ததாகத் திகழ்கின்றது. 'விடல்' என்னும் ஒரு சிறு சொல், எவ்வளவு சிறந்துயர்ந்த பொருளைத் தன்கண் பொதிந்து கொண்டுள்ளது என்பது, சிந்தித்து இன்புறற்குரியது.

—ஆசிரியர்

கந்தபுராணக் காப்பிய நலம்

'' திருக்குறள்மணி ''
திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், M.A., M.Litt.,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20.

(முற்றொடர்ச்சி)

சுவைநலம் :

மனிதன் உணர்ச்சியின் பிண்டமாவான். அவனுடைய உள்ளத்தில் அவ்வப்போது எழும் உணர்ச்சிகள் அவனுடைய உடலில் உண்டாகும் மெய்ப்பாடுகள் மூலம் வெளிப்படுகின்றன. அம் மெய்ப்பாட்டினல் புலனுகும் உணர்வினைச் சுவை என்பர். இச்சுவைகள், நம் தமிழ் மரபுப்படி எட்டு வகைப்படும். அவற்றுள், பெருமிதம் (வீரம்), அவலம் (சோகம்) உவகை (இன்பம்) எனும் மூவகைச் சுவைகள் முதன்மையானவை. இவை மூன்றும் மனிதனின் உணர்வுகளோடு இரண்டறக் கலந்து, அவனுடைய இரத்த நாளங்களில் குதித்துக் கொப்பளித்துக் கொண்டுள்ளன. இவற்றிற்கு இலக்கியங்களில் ஏற்ற இடம் அளித்துப் போற்றுவர். 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பதைப்போல 'சுவை இல்லா இலக்கியம் சுவரில்லா ஓவியம்' ஆகிவிடும். ஒரு நூல் நவில்தொறும் நூல் நயம் பயப்பதாக அமைவதற்கு முதலாவதாகத் தேவைப்படுவது சுவைநலமே.

கந்தபுராண ஆசிரியர் எட்டுச்சுவைகளோடு, புதியதாக ஒரு சுவையைச் சேர்த்துப் பாடியுள்ளார். இச்சுவையைப் பிற காப்பியங்களில் காண்பதரிது. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்தான் இவருக்கு முன்னேடி. அது என்னசுவை? பக்திச்சுவை! இன்பச்சுவையையும் வீரச்சுவையையும் எளிதில் யாரும் பாடலாம்; அனுபவிக்கலாம். ஆனல் பக்திச்சுவை அப்படிப்பட்டது அன்று. ஏனெனில் ''பக்தியாகிய உணர்ச்சி அனைவர்க்கும் வாய்ப்பது ஒன்றன்று. எனவே, அப்பக்தியாகிய அனுபவத்தில் திளைத்து அதன் அடிப்படையில் தோன்றிய கவிதையை ஏற்கனவே அப்பக்தி அனுபவம் கொஞ்சமும் இல்லாதவர் அனுபவித்தல் இயலாத காரியம்''. இத்தகைய புதிய-விழுமிய-பக்திச் சுவை நலங் கனிந்த பாடல்கள் நூற்றுக்கு மேல் கந்த புராணத்தின்கண் இடம் பெற்றுள்ளன. இதனைப் பக்தி இலக்கியத்தின் கொள்கை எனலாம். பக்தி நெறியில் நிற்பவரே பக்தி இலக்கியத்தைப் படைக்க இயலும்.

அன்பா னவருக்கு அருளுதியால் பக்திநெறி
என்பால் இலையால் இதையும் மிகஅளித்தி.

முருகனுடைய உற்ற தோழனுய், படைத்தலைவனுய் விளங்கும் தம்பி, வெற்றி வீரன் வீரவாகு, பானுகோபனைப் போரில் கொன்று, வாகைசூடி முருகப்பெருமானை அடைகிருன். அப்பொழுது தம்பியைப் பாராட்டிய குமரவேள், 'உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்!' எனப் பணிக்கின்றுர். வீரவாகு வள்ளி மணுளனை வணங்கி,

கோல நீடிய நிதிபதி
　　வாழ்க்கையும் குறியேன்!
மேலை இந்திரன் அரசினைக்
　　கனவிலும் வெஃகேன்!
மால யன்பெறு பதத்தையும்
　　பொருளென மதியேன்!
சால நின்பதத் தன்பையே
　　வேண்டுவன்தமியேன்!

எனப் பணிவுடன் தெரிவிக்கின்றுன். இப்பாடலில் பக்திநெறியின் அடிப்படைக் கொள்கை ஒலிப்பதைக் கேட்கின்றோம்.

யாஅம்இரப்பவை
பொருளும் பொன்னும்போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்—
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே!

—பரி : 5:7:81

எனும் சங்ககாலச் சான்றோரின் வேண்டுதலே, பக்திநெறியின் அடிப்படைக் கொள்கையாகும். இக்கொள்கை, ஆழ்வார்களின் பாசுரங்களிலும் நாயன்மார்களின் பதிகங்களிலும் அறுகெனப் படர்ந்தும் ஆலெனத் தழைத்தும் இந்தியச் சிந்தனையின் போக்கினைத் திசைதிருப்பிய பெரும்பணியைச் செய்தது. குமர கோட்டத்து எழுந்தருளியுள்ள குமரவேளின் உபாசகரான கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதருக்கு முன்பே, பல கனிவுமிக்க முருகன் தோத்திரப் பாடல்களைத் தம் காப்பியத்தின் இடையிடையே படைத்துத் தந்துள்ளார்.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப்
　　பலவாய் ஒன்றுய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
　　பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும்
　　கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
　　உதித்தனன் உலகமுய்ய.

கையிலார் கைகள் பெற்றும்
காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்றும்
மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருட ரானோர்
வாள்விழி பெற்றுஞ் சென்றூர்
ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்கு
அனையதோ அரிது மாதோ?

எனும் பாடல்கள் பக்திநெறியின் பண்பையும் பயனையும் உலகிற்கு உணர்த்துகின்றன.

கந்தபுராணத்தில் வீரச்சுவையும் அவலச் சுவையும் பக்திச்சுவைக்கு அடுத்த நிலையில் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றிற்கு அடுத்து இன்பச்சுவையும் வியப்புச் சுவையும் வீறு பெற்றுள்ளன. தாரகன் கொலை செய்யப்பட்டான் எனும் சொல் செவியினுள் புகுந்தவுடன், அசுரர் கோமான், அடைந்த சீற்றத்தை.

தோள்துணைவனு மிளவல் துஞ்சினன் எனுஞ்சொல்
கேட்டலும் உளத்திடைக் கிளர்ந்த சினத்தீ!
நாட்டமெரி கால்வபுகை நண்ணுவனதுண்டம்
ஈட்டுபொறி சிந்துவன யாக்கையுள் உரோமம்

என ஆசிரியர் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றூர். இந்தச் சீற்றத்தின் அடிப்படையில் பெருமிதம் எனும் மெய்ப்பாடு பிறப்பதைக் காணலாம்.

தன் ஆருயிர்க் காதலனை இழந்த 'இரதியின் புலம்பல்' இந்திய இலக்கியங்கள் பலவற்றில் அவலச்சுவைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. கற்றூரும் மற்றூரும் மனம் நைந்து உருகும்வண்ணம் கச்சியப்பர் பல பாடல்களை இரதியின் புலம்பலாகப் புனைந்துள்ளார். அவற்றுள்,

அந்நாளில் அழற்கடவுள் கரியாக
வானவரோடுஅயன்மால் காணப்
பொன்னுரு மங்கலநாண் பூட்டியெனை
மணஞ்செய்து புணர்ந்த காலை
யெந்நாளும் இனியுன்னைப் பிரியலம்என்
றேவாய்மை யிசைத்தாய்! வேனில்
மன்னவோ! மன்னவோ! எனைத்தனியே
விட்டேகல் வழக்கோ செல்லாய்!

எனும் பாடல் கற்பவர் நெஞ்சை உருக்குவதாகும்.

தெய்வயானை அம்மையின் திருக்கலியாணத்திற்குச் சென்றமக்களுள் இளம் காதலர் சிலரைப் படைத்து, அவர்கள் மூலம் இன்பச் சுவையினைப் பேரளவில் வாரி வழங்குகிறூர் கச்சியப்பர். ஓர் இளைஞன், அழகியொருத்தியைக் கண்டவுடனே கருத்தழிந்து பித்தனுகின்றூன். 'அவள் தரிசனம், பெற்றதற்கே இத்தண்டனை என்றுல், அவளைத் தொட்டுப் பழகினுல், என்னுயிர் துடித்து என்னுகுமோ?' என நினைந்து நடுங்குகின்றூன்.

அரிசன மேனி நல்லாள்
அணிதுகில் அசைவின் சீரால்
கரிசனம் அன்ன கொங்கை
காண்டலும் தளர்ந்தோர் காளை
தெரிசனம் தன்னில் ஈதென்
சிந்தையைப் பிணித்த தென்றுல்
பரிசனம் தன்னில்என் னுமோ
ஊனுயிர் பதைத்து நின்றூன்.

—தொடரும்

158633

கவிதையின் தெய்வநலம்

தெய்வநலம் ஐந்தூற்றூற் சிறந்தெழூஉம்; கருத்துணர்ந்து தெளிந்து தேர்தல்;
தொய்விலிபெரும் உணர்வாற்றல்; சூழ்கருத்திற்கு உருவொடுசொல் தோற்று வித்தல்;
செய்யநற்சொல் கலையினெடு சிறந்ததனி இயலமைப்பு; சேர்த்தி வற்றை
மெய்யிணைத்துப் பிணைத்தல் ஐந்தும்; **கவிதையினைத் தெய்வநலம் விளங்கச் செய்யும்!**

—தமிழாக்கம் : ந. ரா. மு.

" The sublime rises from five fountains. The first and most important is a firm grasp of ideas. The second is vigorous and inspired emotion. The two constituents of poetic excellence are for the most part inborn. The other two come from art. The third is the formation of figures, of which there are two kinds those of ideas and those of words. Next is notable language, which has as its parts the choice of words and figurative and individual diction. The fifth, which serves to hold all the other in union is fitting and dignified arrangement''

--Prof. Longinus.



சேந்தனுர் பாடிய திருவிசைப்பா, அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை
இயற்றிய பிள்ளைத்தமிழ் முதலியவற்றுல் புகழோங்கித் திகழும்
திருவிடைக்கழி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி விளங்கும் திருமுருகப்பெருமான்.



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலில், நவீன வசதிகள் உள்ள 108 அறைகள் கொண்ட ஜெயந்தி நகர் விடுதி"க்கு முன்னாள் அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் கால்கோள்விழா நிகழ்த்துதல். (21—1—1978)